## நக்கல் நமசிவாயம்




Follow us:

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 290 பிலவ வருடம், ஆடி மாதம் 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை (30.07.2021) ஹிஜ்ரி - 1442, துல்ஹஜ் பிறை - 19, 0115886187 - பக்கங்கள் 16

விலை ரூ.30

## புர்கா தடைக்கு சட்டமூலம் தயார்

**•யோ.தர்மராஜ்**

புர்கா உள்ளிட்ட முகத்தை முற்றாக மறைக்கும் ஆடைகளைத் தடைசெய்வதற்கான சட்டமூலம் தயாரிக்கப்படுவதாக அறியமுடிந்தது. பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் எட்மிரல் சரத் வீரசேகர தலைமையில் இதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

இதுதொடர்பில் அமைச்சர் சரத் வீரசேகர 'தமிழன்' நாளிதழுக்கு தெரிவித்ததாவது,

தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவுள்ள முகத்தை முற்றாக மூடும் புர்கா உள்ளிட்ட... 02»

# போர்ட் சிட்டியில் முதலிடுவதா?

# அமெரிக்கா எச்சரிக்கை

**•நமது விசேட செய்தியாளர்**

சீன அரசின் ஒத்துழைப்புடன் இலங்கையில் முன்னெடுக்கப்படும் கொழும்புத் துறைமுக நகரில் முதலீடு செய்வது குறித்து அமெரிக்க முதலீட்டாளர்களை எச்சரித்திருப்பதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா டெப்ளிட்ஸ் அம்மையார் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலிலுள்ள செய்தியாளர்களுடன் நேற்று இணையவழியில் நடத்திய கலந்துரையாடலில் இவ்வாறு தெரிவித்துள்ள அமெரிக்கத் தூதுவர், கொழும்புத் துறைமுக நகர் தொடர்பான சட்ட வியாக்கியானங்கள் அமெரிக்காவுக்கு இன்னமும் தெளிவற்றிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது,

சட்டத்தின் (போர்ட் சிட்டி) சில அம்சங்களைப் பற்றி நான் தொடர்ந்து கவலைப்படுகிறேன். ஏனெனில், ஊழல் தாக்கங்கள் அல்லது சட்டவிரோத நிதி, பண மோசடி மற்றும் அதுபோன்ற விடயங்களுக்கான வாய்ப்புகள் அங்கு அதிகம் இருப்பதாகத் தெரிகிறது.

அமெரிக்க நிறுவனங்கள் முதலீடு செய்யலாம். அமெரிக்க நிறுவனங்கள் முதலீடு செய்வதை அமெரிக்கா தடுக்கவில்லை. ஆனால், அமெரிக்க நிறுவனங்களுக்கு மட்டுமல்லாமல், எந்தவொரு நிறுவனத்துக்கும் முதலீட்டுச் சூழல் குறித்து கவனிக்கவேண்டியுள்ளது. அதனால் முதலீட்டாளர்களை நாங்கள் எச்சரித்துள்ளோம். அது எங்கள் பணி - என்றும் குறிப்பிட்டுள்ளார் அமெரிக்கத் தூதுவர்.



கேகாலை, கந்தலோயாவில் பாடசாலை மாணவர்கள் மற்றும் கிழக்கு, தென்கிழக்கு, யாழ்., பேராதனை பல்கலைக்கழக மாணவர்களின் பங்குபற்றுதலுடன், பொதுமக்களும் இணைந்து டயகம சிறுமியின் மரணத்துக்கு நீதிகோரி நேற்று ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. இதன்போது சிறுவர் துன்புறுத்தல் தொடர்பான வீதி நாடகமும் அரங்கேற்றப்பட்டது.

(படப்பிடிப்பு: அருண் யுகேஷ்)

# டயகம சிறுமியின் சடலம் இன்று தோண்டப்படுகிறது

### பேராதனை வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை மேற்கொள்ளுமாறு நீதிமன்றம் உத்தரவு

**•எம். கிருஷ்ணா**

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனின் வீட்டில் தீக்காயங்களுக்குள்ளாகி உயிரிழந்த சிறுமியின் சடலத்தை டயகம மேற்பிரிவு மயானத்திலிருந்து விசேட சட்டவைத்திய நிபுணர்கள் முன்னிலையில் இன்று காலை 7.30 மணிக்கு தோண்டியெடுத்து பேராதனை போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

சுகாதார விதிமுறைகளுக்கமை வாக கிராம உத்தியோகத்தர், பொதுச் சுகாதார பரிசோதகர்களின்... 02»

## வட்டுவாகலில் கடற்படையினர் இரகசியமாக காணி சுவீகரிப்பு

### பொங்கியெழுந்த மக்கள் கடும் எதிர்ப்பு





13»

## உள்ளூராட்சி உறுப்பினர்களின் விடுமுறை நாட்கள் அதிகரிப்பு

**•மண்முனை நிருபர்**

உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களுக்கு அனுமதிக்கப்பட்டிருந்த மாதாந்த விடுமுறை நாட்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டிருப்பதாக பொது சேவைகள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அறிவித்துள்ளது.

அரசியல் உரிமைகளைக்கொண்ட அரசாங்க உத்தியோகத்தர் ஒருவருக்கு அவர் வகித்த பதவியில் இருக்கும்போதே உள்ளூராட்சி மன்றங்களின்... 02»



## போதைப்பொருள் வர்த்தகத்தில் ரூ. 600 கோடி பணமீட்டிய பெண்

### தெஹிவளையில் அதிரடியாக கைது

**•நா. தினுஷா**

ஐந்து வங்கிக் கணக்குகளை முன்னெடுத்துச் சென்று போதைப்பொருள் வியாபாரத்தினூடாக 600 கோடி ரூபா பணம் சம்பாதித்த குற்றச்சாட்டில் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் பெண்ணொருவர் தெஹிவளையில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த வங்கிக் கணக்குகளுக்கு கடந்த 4 வருடங்களில் குறித்த நிதித்தொகை... 02»

## சிறுவர் ஆபாச படம், காணொளிகள் 41 நாட்களில் 17,629 தரவேற்றங்கள்

### சமூக வலைத்தளங்களை பொலிஸ் கண்காணித்ததில் திடுக்கிடும் தகவல்

**•யோ.தர்மராஜ்**

இவ்வாண்டு ஜூன் 17 ஆம் திகதி தொடக்கம் ஜூலை 28 வரையான காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட கண்காணிப்பில் கணினி, தொலைபேசி மற்றும் மடிக்கணினி உள்ளிட்டவற்றிலிருந்து 17 ஆயிரத்து 629 சிறுவர் ஆபாச படங்கள் மற்றும் காணொளிகள் சமூக வலைத்தளங்களில் பதிவேற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான நடவடிக்கைகள் குறித்து ஊடகங்களுக்கு நேற்று கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறுவர் துஷ்பிரயோகம், சிறுவர்... 02»

## நாட்டுக்கு வருகை தருவோருக்கு புதிய விதிமுறைகள் அமுல்

**•ம. சசிதரன்**

இலங்கைக்கு வருகைத்தரக்கூடிய, இரண்டு கொவிட் தடுப்பூசிகளையும் செலுத்திக்கொண்ட பயணிகளின் எண்ணிக்கை தொடர்பில் விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடு சிவில் விமான சேவை அதிகாரசபையினால் நீக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்று 14 நாட்கள் கடந்திருக்க வேண்டும் என்பதுடன், அதனை உறுதிப்படுத்தக்கூடிய சான்றிதழ் ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், முதலாவது தடுப்பூசியை பெற்றுக்கொண்ட அல்லது தடுப்பூசி பெற்றுக்கொள்ளாத பயணிகளை அழைத்து வரும் விமானத்தில் 75 பேர் மாத்திரமே இருக்கவேண்டும் எனவும் அவர்கள் இலங்கைக்கு வருகை தந்த பின்னர் 14 நாட்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கல்முனையில் 79 கர்ப்பிணிகளுக்கு கொரோனா

கல்முனை பிராந்தியத்தில் இதுவரை 79 கர்ப்பிணிப் பெண்களுக்கு கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளதாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜி.சுகுணன் தெரிவித்தார். 02»

## அமைச்சர் விமல் தனிமைப்படுத்தலில்



### பாதுகாப்புப் பிரிவினர் சிலர் கொரோனா பாதிப்புக்குள்ளானதையடுத்து சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை

**•நா. தினுஷா**

அரசாங்கத்தின் பிரதான பங்காளிக் கட்சிகளில் ஒன்றான தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் கைத்தொழில் அமைச்சருமான விமல் வீரவங்ச அவரது வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

அவரது பாதுகாப்புக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரிகள் சிலருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருப்பது உறுதிசெய்யப்பட்டது. இதனையடுத்தே, விமல் வீரவங்சவும் தனிமைப்படுத்தப்பட்டார்.

அத்துடன், கைத்தொழில் அமைச்சு அலுவலகத்தின் ஒரு பகுதியை தற்காலிகமாக மூடுவதற்கும் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். அமைச்சர் விமல் வீரவங்சவை எதிர்வரும் 11 ஆம் திகதிவரை தனிமைப்படுத்தலில் இருக்குமாறு அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

## சொல்லாடல்

தெரிந்ததும் தெரியாததும்



**நாட்டில் தற்போது முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்...**

**ரிஷாட்டின் கைது உட்பட்ட பல்வேறு கேள்விகளுக்கு**

**மனந்திறக்கிறார் மு.கா. தலைவர் ஹக்கீம்**

**தமிழன் ஞாயிறு வார இதழில்...**



# கொரோனா நோயாளர்களில் திடீர் அதிகரிப்பு ஆபத்தான நிலைக்கு முகங்கொடுக்க நேரிடலாம்

## சுகாதார அமைச்சு எச்சரிக்கை

யோ.தர்மராஜ்

நாட்டில் கடந்த காலங்களை விட தற்போது தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள இந்தத் திடீர் அதிகரிப்பை சாதாரணமாக எடுக்கமுடியும். இவ்வாறு தொடர்ந்து அதிகரித்தால் நாங்கள் மீண்டும் மே மாதத்தில் முகம்கொடுத்த ஆபத்தான நிலைமைக்கு முகங்கொடுக்க நேரிடலாம் - என சுகாதார சேவைகளின் பிரதி பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

நாட்டில் நேற்றுமுன்தினம் ஆயிரத்து 900ஐ தாண்டிய கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டதையடுத்து கொரோனா தொற்றின் தீவிரம் குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் கடந்த காலங்களில் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 400 என்று காணப்பட்ட நிலையில், தற்போது ஆயிரத்து 900 வரை அதிகரித்துள்ளது. தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள இந்தத் திடீர் அதிகரிப்பை சாதாரணமாக எடுக்கமுடியாது.

குறிப்பாக, நேற்று (நேற்றுமுன்தினம்) ஆயிரத்து 900 ஐ தாண்டியுள்ள நிலையில், இந்த எண்ணிக்கை நாளை (இன்று) 2 ஆயிரமாக அதிகரிக்கலாம். அடுத்த நாள் 2 ஆயிரத்து 500 அதிகரித்தால், நாங்கள் மீண்டும் மே மாதத்தில் முகங்கொடுத்த ஆபத்தான நிலைமைக்கு முகங்கொடுக்க நேரிடலாம்.

குறிப்பாக, நாட்டில் ஒரே நாளில் 63 மரணங்கள் ஏற்பட்டுள்ள நிலையில் அது டெல்ட்டா தொற்றுடன் தொடர்பற்றவர்கள் என்று கூற முடியாது. ஆனால், டெல்ட்டா பரவுவதற்கு இடமளிக்காதிருந்தால் அதனுடன் தொடர்பு இருக்கின்றதா என்ற அச்சம் கொள்ளாமால் முன்னோக்கிச்செல்ல முடியும்.

கடந்த காலங்களில் தொழில் நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள் மற்றும் மக்கள் அதிகம் நடமாடும் இடங்களில் முன்னர் காணப்பட்ட சுகாதார நடவடிக்கைகள் தற்போது குறைந்துள்ளன. எனினும், கைகளை கழுவியதன் பின்னர் நிலையங்களுக்குள் செல்லுதல், உடல் வெப்பநிலையை பரிசோதித்தல் மற்றும் வருகை தருவோரின் தகவல்களை பெற்றுக்கொண்டு அனுமதித்தல் போன்ற செயற்பாடுகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும் - என்றார்.

# கொவிட் உயிரிழப்பு 21 வீத அதிகரிப்பு; தடுப்பூசி ஒன்றே இப்போதுள்ள தீர்வு!

## உலக சுகாதார ஸ்தாபனம் அறிவிப்பு



உலகளவில் கொவிட் பெருந்தொற்றின் 2ஆவது அலை கட்டுக்குள் வரும் நிலையில், தற்போது திடீரென மீண்டும் பாதிப்பும் உயிரிழப்பும் அதிகரித்து வருவதாக உலக சுகாதார ஸ்தாபனம் அச்சம் தெரிவித்துள்ளது.

இது குறித்து உலக சுகாதார ஸ்தாபனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:


உலகளவில் இதுவரை 19.5 கோடி பேர் கொவிட் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், 41.8 இலட்சம் பேர் உயிரிழந்துள்ளனர். கடந்த வாரத்தில் மட்டும் 69 ஆயிரம் பேர் கொவிட் தொற்றால் உயிரிழந்துள்ளனர். இதனால் கொவிட் உயிரிழப்பு 21 சதவீதம் அதிகரித்துள்ளது.

இதில் பெரும்பாலான உயிரிழப்பு அமெரிக்கா மற்றும் தென்கிழக்காசிய நாடுகளில் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, கொவிட் தடுப்பூசியின் இரு டோஸ்களையும் செலுத்திக்கொள்ளாதவர்களே தீவிர தொற்றுக்குள்ளாகி உயிரிழந்துள்ளனர்.

தடுப்பூசி செலுத்திக்கொள்வதே உயிரிழப்பை தடுக்கும். ஆனால், பல ஏழை நாடுகளில் முன்களப் பணியாளர்களுக்கே தடுப்பூசி கிடைக்காத நிலை நீடிக்கிறது. இந்த நிலையை மாற்ற வளர்ந்த நாடுகள் உதவ முன்வர வேண்டும். அதேபோல், கொவிட் புதிய பாதிப்புகளும் கடந்த வாரத்தில் 8 சதவீதம் அதிகரித்துள்ளது. இதேவேகத்தில் சென்றால், இன்னும் இரு வாரங்களில் ஒட்டுமொத்த பாதிப்பு 20 கோடியை மிஞ்சிவிடும்.

அமெரிக்கா, பிரேஸில், இந்தோனேஷியா, இங்கிலாந்து, இந்தியா ஆகிய நாடுகளில் புதிய பாதிப்பு அதிகமாகி வருகிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொரோனா காரணமாக பள்ளிவாசல்களுக்கு பூட்டு



(மீராவோடை நிருபர் -

கோறளைப்பற்று மேற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி மூன்றாம் வட்டாரத்தில் அதிகளவான கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன் காரணமாக அப்பகுதியிலுள்ள நான்கு பள்ளிவாசல்களை சுகாதாரப் பிரிவினர் தற்காலிகமாக மூடிவைத்துள்ளனர்.

இந்நிலையில், ஓட்டமாவடி மூன்றாம் வட்டாரத்தில் 27ஆம் திகதி கொரோனா தொற்றினால் 69 வயதுடைய நபரொருவரும் மரணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தீர்வு எட்டப்படும் வரையில் வேலைநிறுத்தம் தொடரும்!

## இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவிப்பு

கற்பித்தலிலிருந்து விலகி ஆசிரியர், அதிபர்கள் இன்றோடு 18ஆவது நாளாகவும் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளனர்.

சம்பளப் பிரச்சினைக்கு இதுவரை தீர்வு கிடைக்காதமையால் பணிப்பகிஷ்கரிப்பு தொடர்கின்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 24 வருடங்களாக நிலவும் சம்பளப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு எட்டப்படும் வரை தொழிற்சங்க நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் - என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இன்றும் நாடளாவிய ரீதியில் கவனயீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

ஆசிரியர், அதிபர்களின் சம்பள முரண்பாடுகள் தொடர்பில் எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறும் அமைச்சரவை கூட்டத்தைத் தொடர்ந்து இறுதித் தீர்மானம் எட்டப்படும் என பிரதமர் கூறுகின்றபோதிலும், அதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறும் ஜோசப் ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

எவ்வாறாயினும், உரிய தீர்வு காணப்படாத பட்சத்தில் தமது தொழிற்சங்கப் போராட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுப்பதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கூறியுள்ளார்.

தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக பல்வேறு குழுக்களை நியமித்தும், பரிசீலனைகளை மேற்கொண்டும் அரசாங்கம் காலம் தாழ்த்துவதாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் செயலாளர் மஹிந்த ஜயசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆசிரியர், அதிபர்களின் சம்பளப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படாத பட்சத்தில், மாணவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளுக்கு அரசாங்கமே பொறுப்பு கூறவேண்டும் - என இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.





டயகம சிறுமியின் மரணத்துக்கு நீதிகோரி கேகாலை, கந்தலோயாவில் நேற்று (29) ஆர்ப்பாட்டம் இடம்பெற்றபோது...

(படப்பிடிப்பு: அருண் யுகேஷ்)

# ஓட்டமாவடி மஜ்மா நகரில் நல்லடக்கம் அதிகரிப்பு; அடையாளப்படுத்திய வேறு இடத்தில் அனுமதி தேவை

## ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.நௌபர் வேண்டுகோள்



(மீராவோடை நிருபர் - எச்.எம்.எம்.பர்ஸான்)

கொரோனா தொற்றினால் மரணிப்போரை நல்லடக்கம் செய்யும் ஓட்டமாவடி பிரதேச சபை பிரிவுக்குட்பட்ட மஜ்மா நகர் பகுதியில் நல்லடக்கம் அதிகரித்துச் செல்கின்றன. அதை சாப்பமடு எனும் பகுதிக்கு மாற்றுமாறு ஓட்டமாவடி பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.நௌபர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்திற்கான ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் நேற்று (29) மாவட்டத்தின் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்களின் பங்குபற்றலுடன் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமாகிய கே. கருணாகரனின் ஏற்பாட்டில் நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருமான சிவனேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்திலேயே தவிசாளர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஓட்டமாவடி மஜ்மா நகரில் கொரோனா உடல்கள் அதிகரித்துச் செல்வதைத் தொடர்ந்து நாம் ஆராய்ந்த போது கிரான் பிரதேச செயலகம், ஓட்டமாவடி பிரதேச சபை ஆகிய பிரிவுகளுக்கு உட்பட்ட சாப்பமடு எனும் பிரதேசத்தை அடையாளம் கண்டுள்ளோம்.

அடையாளம் காணப்பட்டுள்ள குறித்த இடத்தில் உடல்களை நல்லடக்கம் செய்ய அவசர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று தவிசாளர் மேலும் தெரிவித்தார்.

இதுவரை ஓட்டமாவடி மஜ்மா நகர் மையவாடியை மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹாபீஸ் நசீர் அஹமடை தவிர மாவட்டத்திலுள்ள ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் பார்வையிடவில்லை என்று கூட்டத்தில் தெரிவித்த தவிசாளர், இனி வரும் நாட்களில் குறித்த இடத்தைப் பார்வையிட்டு புதிய இடத்தில் நல்லடக்கம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

குறித்த மையவாடியில் புதன்கிழமை 28 ஆம் திகதி வரை ஆயிரத்து 170 உடல்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளதாக தவிசாளர் ஏ.எம்.நௌபர் மேலும் தெரிவித்தார்.

# மெண்டிஸ், குணதிலக்கவிற்கு 2 வருட போட்டித் தடை!

இலங்கை கிரிக்கெட் வீரர்களான குசல் மெண்டிஸ் மற்றும் தனுஷ்க குணதிலக்க ஆகியோருக்கு 2 வருடங்களுக்கு போட்டித் தடையும், நிரோஷன் டிக்வெல்லவிற்கு ஒன்றரை வருடம் போட்டித் தடை விதிக்கவும் இலங்கை கிரிக்கெட் சபையின் 5 பேர் கொண்ட விசாரணைக் குழு பரிந்துரை செய்துள்ளது.

மேலும், இவர்கள் மூவருக்கும் 25 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் அபராதம் விதிக்கவும் இந்தக் குழு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

### கல்முனையில்...

அக்கரைப்பற்றில் 15 பேரும் பொத்துவிலில் 13 பேரும் சம்மாந்துறையில் 11 பேரும் ஏனைய பிரதேசங்களில் 10இற்கும் குறைந்த கர்ப்பிணிகள் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, கல்முனை பிராந்தியத்துக்கான இரண்டாம் கட்ட தடுப்பூசி செலுத்தும் பணிகள் இன்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

### புர்கா தடைக்கு...

ஆடைகளை தடைசெய்வதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்து அதற்கு அனுமதியும் பெறப்பட்டுள்ளது.

இதனையடுத்து, அதற்கு தேவையான சட்டமூலம் தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. சட்ட ஆலோசனைக்கமைய அந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. சட்டமூலம் வரையப்பட்டதன் பின்னர் அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து அதனை நிறைவேற்றுவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றன. நான் முன்னெடுத்த செயற்பாடுகள் ஒருபோதும் நிறுத்தப்படாது – என்றார்.

### உள்ளூராட்சி உறுப்பினர்களின்...

கூட்டங்களில் பங்கேற்பதற்கும் அக்கூட்டங்களுடன் இணைந்த வகையிலான பணிகளில் ஈடுபடுவதற்குமாக இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பொதுச் சேவைகள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறி சகல திணைக்களத் தலைவர்களுக்கும் உள்ளூராட்சிமன்ற செயலாளர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பி வைத்துள்ளார்.

புதிய சுற்றறிக்கையின்படி அரசாங்க உத்தியோகத்தராக இருக்கும் உள்ளூராட்சி சபையொன்றின் தலைவருக்கு தற்போது வழங்கப்படும் சம்பளத்துடனான மாதாந்த விடுமுறை நாட்களின் எண்ணிக்கை 07 முதல் 08 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, அரசாங்க உத்தியோகத்தராக இருக்கும் உள்ளூராட்சி சபையொன்றின் உப தலைவர் அல்லது உறுப்பினர் ஒருவருக்கு தற்போது வழங்கப்படும் சம்பளத்துடனான மாதாந்த விடுமுறை நாட்கள் 5 முதல் 06 ஆக அதிகரிக் கப்பட்டுள்ளன.

அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி இந்தத் தீர்மானம் 2021 மே மாதம் 03ஆம் திகதிமுதல் அமுலுக்கு வரும் விதத்தில் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது விடயமாக அரசாங்க உத்தியோகத்தர்களாக உள்ள ஒவ்வொரு உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்களுக்கும் அந்தந்த சபை அமர்வுகளில் தெளிவுபடுத்தப்பட்டு வருகிறது.

### டயகம சிறுமியின்...

பங்கேற்புடன் பலத்த பாதுகாப்பு வழங்குமாறும் நீதவான் லூஷா குமாரி தர்மகீர்த்தி அறிவுறுத்தினார்.

டயகம சிறுமியின் சடலம் மீது மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனையில் சந்தேகம் நிலவுவதாக பெற்றோர் தெரிவித்ததையடுத்து மீண்டும் பிரேத பரிசோதனை செய்யுமாறு கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. அதற்கமைய கொழுப்பு தெற்கு குற்றத்தடுப்புப் பிரிவினர் டயகமவுக்கு சென்று விசேட விசாரணைகளை மேற்கொண்டதுடன், சடலத்தை தோண்டுவதற்கான அனுமதியை சட்டத்தரணி ஹன்ஷா அபேவர்தனவின் ஊடாக நீதிமன்றில் கோரியிருந்தனர்.

இந்த மனுவை பரிசீலித்த நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதவான் லூஷா குமாரி தர்மகீர்த்தி சிறுமியின் சடலத்தை விசேட சட்ட வைத்திய நிபுணர் குழுவின் முன்னிலையில் சுகாதார விதிமுறைகளை பேணி பிரதேச கிராம உத்தியோகத்தர் மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர் முன்னிலையில் இன்று காலை தோண்டுமாறு உத்தரவிட்டார்.

மனுவை மன்றுக்கு சமர்ப்பிக்கையில் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவு அத்தியட்சகர் நெவிந்த சில்வா, கொழும்பு தெற்கு குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி, பொலிஸ் பரிசோதகர் அஜித் குமார், சிறுவர் குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் ஹினோகா உள்ளிட்டோர் மன்றுக்கு வருகைதந்திருந்தனர்.

### சிறுவர் ஆபாச....

துன்புறுத்தல் உள்ளிட்ட விடயங்கள் குறித்து பொலிஸாரினால் விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்ற நிலையில், சிறுவர்களின் ஆபாச படங்கள், காணொளிகள் குறித்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

பொலிஸ் மற்றும் மகளிர் மற்றும் சிறுவர் பிரிவினரால் சமூக வலைத்தளங்களில் சிறுவர்களின் ஆபாச படங்கள் குறித்தும் தொடர்ந்து சமூக வலைத்தளங்களை கண்காணிப்பதற்கும் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டு கண்காணிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

அதன்படி, ஜூன் 17ஆம் திகதி தொடக்கம் நேற்று (நேற்றுமுன்தினம் 28) வரையான காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட கண்காணிப்பில் கணினி, தொலைபேசி மற்றும் மடிக்கணினி உள்ளிட்டவற்றிலிருந்து சிறுவர்களின் ஆபாச படங்கள் மற்றும் காணொளிகள் 17 ஆயிரத்து 629 பதிவேற்றப்பட்டுள்ளது.

இவ்வாறு சமூக வலைத்தளங்களில் பதிவேற்றுவோரின் தகவல்கள் திரட்டப்பட்டுள்ளதுடன், அவர்களை கைதுசெய்வதற்கான நடவடிக்கைகளும் இன்று (நேற்று) முதல் முன்னெடுக்கப்படுகின்றன.

சமூக வலைத்தளங்களில் இவ்வாறு சிறுவர்களின் ஆபாச படங்கள் மற்றும் காணொளிகளை தொடர்ந்து பதிவேற்று வோர் குறித்து கண்காணிப்புகள் செய்யப்படுவதோடு, சிறுவர்களை ஆபாச படங்கள் எடுப்பதற்கு உட்படுத்தல் தொடர்பாக கைது செய்யப்படுவோருக்கு எதிராக வழக்கு தொடரப்படுவதோடு, அவ்வாறான படங்களை பகிர்வோருக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

### போதைப்பொருள்...

வைப்பிலிட்பட்டுள்ளதாகவும் மத்திய வங்கியின் நிதி விசாரணைப் பிரிவினால் வழங்கப்பட்ட தகவலுக்கமைய இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் நேற்றுமுன்தினம் தெஹிவளை பிரதேசத்தைச் சேர்ந்த 41 வயதுடைய நபரொருவர் கைதுசெய்யப்பட்டிருந்தார். ஐந்து வங்கிக் கணக்குகளில் போதைப்பொருள் வியாபாரத்தினூடாக பணம் சம்பாதித்தமை தொடர்பிலேயே இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கணக்குகளுக்கு கடந்த நான்கு வருடங்களில் 600 கோடி ரூபா பணம் வைப்பிலிடப்பட்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது. அதேபோன்று, நிதி மோசடி ஒழிப்பு கட்டளைச்சட்டத்துக்கமையவே இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறிப்பாக, மத்திய வங்கியின் நிதி விசாரணை பிரிவினால் வழங்கப்பட்ட தகவலுக்கமையவே இதுதொடர்பான விசாரணைகள் இடம்பெற்றிருந்தன. இவரின் கணக்குகளில் நிதி வைப்பிலிட்டுள்ள நபர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், அவர்கள் பிரதேச மட்டத்தில் போதைப்பொருள் வியாபாரத்தை முன்னெடுத்து வருபவர்கள் என்பது தெரியவந்துள்ளது. மேலும் அவர்கள் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் என்பதும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அதற்கமைய, இந்த நிதித் தொகையை போதைப்பொருள் வியாபாரத்தினூடாக உழைத்துள்ளார் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நிதி மோசடி ஒழிப்புச் சட்டத்தில் பல்வேறு சட்டவிரோத நடவடிக்கைகள் அடையாளப்படுத்தப்படுகின்றன. அந்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டவிரோத நடவடிக்கைகளினூடாக பணம் உழைக்கப்படுமாக இருந்தால் அது பாரிய குற்றமாகும். போதைப்பொருள் வியாபாரமும் அவ்வாறான பாரதூர குற்றமாகவே கருதப்படுகின்றது.

அதுதொடர்பில் சம்பந்தப்பட்ட நபர்கள் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்டிருந்தால் அந்தப் பணம், அசையும் அசையா சொத்துகளை பொலிஸ் பொறுப்புக்கு எடுத்துக்கொள்ளவும் அவற்றை தடைசெய்வதற்குமான வாய்ப்புகள் இருக்கின்றன. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை குற்றப்புலனாய்வுத் திணைக்களம் முன்னெடுத்து வருகின்றது - என்றார்.




## கொரோனா தொற்றுக்குள்ளானோர் விபரம்

| மொத்த பாதிப்பு | சிகிச்சை பெறுவோர் | குணமடைந்தோர் | புதிதாக அடையாளம் | மரணம் |
|---|---|---|---|---|
| 303,682 | 25,928 | 273,496 | 1,940 | 4,258 |

# டெல்ட்டா திரிபுள்ளவர்களை அடையாளம் காண்பதற்கான பரிசோதனைகள் அடுத்தவாரம்முதல் மீண்டும் ஆரம்பம்



டெல்ட்டா திரிபு ஏற்பட்டுள்ளவர்கள் தொடர்பான பரிசோதனைகள் எதிர்வரும் வாரம்முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தின் வைத்திய பீட ஒவ்வாமை மற்றும் உயிரியல்துறையின் பிரதானி கலாநிதி சந்திம ஜீவேந்திர தெரிவித்தார்.

தேவையான மாதிரிகள் கிடைத்தவுடன் அந்த பரிசோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுமென அவர் மேலும் குறிப்பிட்டார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல்வேறு மாதிரிகள் தொடர்பான பரிசோதனைகள் கடந்த தினங்களில் நிறைவுசெய்யப்பட்டிருந்ததுடன், அதன் அறிக்கை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் கையாளிப்பட்டுள்ளது. அந்த பரிசோதனைகளில் மேலும் சிலருக்கு டெல்ட்டா தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

கொழும்பு பிரதேசத்தில் பெற்றுக்கொண்ட மாதிரிகளிலேயே அதிகளவானோருக்கு டெல்ட்டா தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. நாடுபூராகவும் இதுவரையில் 38 பேருக்கு டெல்ட்டா தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

இதேவேளை, இந்த மாதிரி பரிசோதனை நடவடிக்கைகளை நாட்டிலுள்ள ஏனைய வைத்தியசாலைகளிலும் முன்னெடுக்கவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. அதற்காக 15 ஆயிரம் பி.சி.ஆர். தொகுதிகளை கொள்வனவுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# டிசம்பர் மாதத்திற்குள் 15 மில்லியன் மக்களுக்கு கொரோனா தடுப்பூசி!

நாட்டில் 12 முதல் 30 வயதுக்குட்பட்ட அனைவருக்கும் கொரோனா தடுப்பூசி வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இத்திட்டங்கள் செயற்படுத்தப்படும்போது, 2021 டிசம்பர் 31ஆம் திகதிக்குள் இலங்கையில் சுமார் 15 மில்லியன் மக்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டிருக்கும் - என ஜனாதிபதி ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழுவின் தலைவருமான லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மத்திய நிலையத்தை நேற்று திறந்துவைத்து அங்கு இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது குறித்து ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது,

கொவிட் ஒழிப்புக்கான தடுப்பூசி ஏற்றுதலுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் நாட்களில் 1.47 மில்லியன் கொவிசீல்ட் தடுப்பூசிகள் இலங்கைக்குக் கிடைக்கவுள்ளன. அவற்றில் 6 இலட்சம், கொழும்பு மாவட்டத்தில் முதலாவது ஊசியை பெற்றுக்கொண்டவர்களுக்காக வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து கேகாலை மாவட்டத்தில் முதலாவது மற்றும் இரண்டாவது கட்டத்திற்காக பெற்றுக்கொடுக்கப்படவுள்ளது. நாட்டின் அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கிய வகையில் தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டங்கள் வேகமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நாட்டில் 30 வயதுக்கு மேற்பட்டவர்களில் 72 சதவீதமானவர்களுக்கு, முதலாவது தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. அதுபோன்று, 16 சதவீதமானவர்களுக்கு இரண்டாம் தடுப்பூசிகளையும் வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

எண்ணிக்கை ரீதியில், 82 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு, கொவிட் தடுப்பூசியின் முதலாவது ஊசி வழங்கப்பட்டுள்ளது. அதுபோன்று, 18 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு, இரண்டாம் தடுப்பூசியும் வழங்கப்பட்டுள்ளது. கொழும்பு மாவட்டத்தில் 30 வயதுக்கு மேற்பட்டவர்களில் 84 சதவீதமானவர்களுக்கு முதலாவது தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. கம்பஹா மாவட்டத்தில், முதலாவது தடுப்பூசி 93 வீதமானவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. களுத்துறை மாவட்டத்தில் இது 85 சதவீதத்தையும் கடந்துள்ளது. மாத்தளை மாவட்டத்தில் 30 வயதுக்கும் மேற்பட்டவர்களில் 99 சதவீதத்துக்கும் அதிகமானவர்களுக்கு முதலாவது தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. 12 முதல் 30 வயதுக்குட்பட்ட அனைத்து இலங்கையர்களுக்கும் தடுப்பூசி வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இத்திட்டங்கள் செயற்படுத்தப்படும் போது, இலங்கையில் சுமார் 15 மில்லியன் மக்களுக்கு 2021 டிசம்பர் 31ஆம் திகதிக்குள் தடுப்பூசி போடப்பட்டிருக்கும்.

கொவிட் -19 தடுப்பூசியைப் பெறுவது கட்டாயமாக்குவதற்கு ஒரு முடிவு எட்டப்படுமா என்பதை எதிர்காலத்தில் ஜனாதிபதியுடனான கலந்துரையாடல்கள் தீர்மானிக்கும்.

# தம்புள்ளை நகரில் மீண்டும் தலைதூக்கும் கொரோனா அபாயம்

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையம் மற்றும் தம்புள்ளை நகரை அண்மித்த பிரதேசங்களில் கொரோனா பரவலடைவதற்கான அபாயநிலை இருப்பதாக தம்புள்ளை மாநகர சபையின் பிரதான பொதுச் சுகாதார பரிசோதகர் பிரியந்த த சில்வா தெரிவித்துள்ளார்.

அதற்கமைய தம்புபள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை மற்றும் அவசர பரிசோதனைகளில் அநேகமானவர்களுக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த கொரோனா நோயாளர்களில் தம்புள்ளை பிரதேச சபையின் உப தலைவர், அவரின் மனைவி மற்றும் மகன் ஆகியோருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்திலுள்ள கடைத்தொகுதிகள் இரண்டு இதுவரையில் மூடப்பட்டுள்ளன.

கடந்த 14 நாட்களில் இதுவரையில் 50இற்கும் கொரோனா நோயாளர்கள் தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்துக்கு அருகிலும் தம்புள்ளை நகரத்துக்கு அருகிலும் தொற்றுக்குள்ளானவர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களுடன் தொடர்பைப் பேணியவர்களை அடையாளம் காண்பதற்கான தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பண்டாரகமையில் மேலும் 46 பேருக்கு தொற்று உறுதி

பண்டாரகம சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவில் 46 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அந்த பிரதேசத்தில் இனங்காணப்பட்டுள்ள நோயாளர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 311 ஆக அதிகரித்துள்ளதாக அந்த சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஏப்ரல் மாதம் 19ஆம் திகதியிலிருந்து இது வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட 3 ஆயிரத்து 678 பி.சி.ஆர். பரிசோதனைகளில் இந்த கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவர்களில் 25 கர்ப்பிணித் தாய்மாருக்கும் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது,

இந்தப் பிரதேசத்தில் கொரோனா தொற்றினால் 47 பேர் வரையில் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இன்றைய ராசி பலன்

**நாள்: 30.07.2021 வெள்ளிக்கிழமை**

**ஜோதிடர் நற்பவி**

**தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141**

**மேடம்** வேலைகளுக்கான புதிய சந்தர்ப்பங்கள் உருவாகலாம். குடும்பத்தினரை தவிர்த்து வேற்று நபர்களிடம் எண்ணங்களை பகிராமல் இருப்பது நல்லது. பணியிடங்களில் நன்மை.

**ரிஷபம்** வணிகத்தில் அதிக முயற்சி தேவைப்படலாம். பணியிடங்களில் மற்றவர்களின் ஒத்துழைப்பின்மை கவலை தரலாம்.

**மிதுனம்** காதலர்களுக்கு தங்களுக்குள் உறவில் சரியான நிலைமையில் இருக்க வேண்டும். உங்களுக்கான சந்தர்ப்பங்கள் காத்திருக்கிறது. தம்பதியரிடையே உறவு பலப்படும். புதிய தொழில் துவங்கலாம்.

**கடகம்** மாணவர்களுக்கு கல்வியில் உதவிகள் கிடைக்கும். குழந்தைகள், வயதில் பெரியவர்களின் விடயங்களில் கவனம் தேவைப்படலாம். அனைத்து விடயங்களிலும் நிதானம் தேவை.

**சிம்மம்** இறையை தியானித்து மனதை நல்ல நிலையில் வைத்திருக்கலாம். பிறரின் பிரச்சினைகளில் தலையீடு தவிர்ப்பது நன்மை. பெற்றோருடன் அன்பில் குறை வேண்டாம்.

**கன்னி** நிதி விடயங்களில் கவனம் தேவை. வணிகத்தில் புதிய நிதி ஒதுக்கீடு இன்று செய்யாமல் இருக்கலாம். தம்பதியரிடையே விட்டுக்கொடுத்தல் நன்மை.

**துலாம்** பொறியியல் தொழில் தேடுவோருக்கு நல்ல செய்தி கிடைக்கலாம். கூட்டு வியாபாரம் மேன்மை பெறும். தம்பதியரிடையே மகிழ்ச்சி பெருகும்.

**விருச்சிகம்** பணியிடங்களில் வேலைகள் சிறப்பாக நிறைவேறும். ஊடகங்களில் உள்ளோர் சிறிய பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரிடலாம்.

**தனுசு** பிள்ளைகளின் சுப நிகழ்வுகளுக்கு இறையருள் நன்மை தரும். பணிகளில் கூடுதல் சுமை உண்டாகலாம்.

**மகரம்** பணிகளில் அயராத உழைப்பு மட்டுமே வெற்றி தரும். பண வரவுகள் சிறப்பாக இருக்கும். வயதில் மூத்த உறவுகளில் நல்ல முறையில் இருப்பது நன்மை.

**கும்பம்** தம்பதியரிடையேயும், காதலர்களுக்கிடையிலும் அன்பு அதிகரிக்கும். உங்கள் எண்ணங்கள் புதிய வடிவம் பெறலாம். வீட்டுத் தேவைகளுக்காக அதிக செலவுகள் ஏற்படலாம்.

**மீனம்** பணியிடங்களில் செல்வாக்கு/சொல்வாக்கு பலம் பெறலாம். பொறுமையுடனான மென்மையான இயல்பால் மட்டுமே வெற்றிகளை பெறலாம். இறைவணக்கம் நன்மைகளை அதிகரிக்கும்.

# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 112 பேர் கைது

நாட்டில் நேற்றுக் காலை வரையான 24 மணிநேரத்தில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 112 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அதற்கமைய, இதுவரையில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் மொத்தமாக 52 ஆயிரத்து 513 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அதேபோன்று, மேல்மாகாணத்துக்கு நுழையும் மற்றும் வெளியேறும் பிரதான இடங்களில் 8 ஆயிரத்து 214 பேர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் பயணித்த 3 ஆயிரத்து 953 வாகனங்களும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்து தடையை மீறிய 335 பேர் எச்சரிக்கப்பட்டு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறுவது தொடர்பான சுற்றிவளைப்புகள் பொலிஸாரினால் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மீள் அறிவித்தல்வரை மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்து தடை மீள் அறிவித்தல்வரை தொடர்ந்து அமுலில் இருக்கும்.

விசேடமாக பொது போக்குவரத்து சேவைகளை பயன்படுத்தும்போதும், மொத்தவிற்பனை நிலையங்களுக்கு செல்லும்போதும் தொடர்ந்து சுகாதார வழிமுறைகளை பின்பற்ற வேண்டும். முகக்கவசம் அணியாமை மற்றும் முகக்கவசத்தை முறையாக அணியாத குற்றச்சாட்டில் நேற்று முன்தினம் 90 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

# இரு தடுப்பூசிகளையும் பெற்ற வைத்தியருக்கு கொரோனா



சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் விசேட வைத்திய நிபுணர் ஜயருவன் பண்டார கொரோனா தொற்றுக்குள்ளானதாக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

பிரதி வைத்திய நிபுணர் ஜயருவன் பண்டார கொரோனா தொற்றுக்குள்ளானதாக அடையாளம் காணப்பட்ட நிலையில், தற்போது வீட்டில் சிகிச்சைபெற்று வருகிறார்.

முதலாவது தடுப்பூசியாக எஸ்ட்ராசெனிகா தடுப்பூசியையும் இரண்டாவதாக பைசர் தடுப்பூசியையும் பெற்றுக்கொண்டுள்ளார்.

# தெல்லிப்பழை பிரதேச ஊழியர் கொவிட் - 19 தொற்றால் மரணம்!

தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் பணியாற்றும் உத்தியோகத்தர் ஒருவர் கொவிட்-19 தொற்றினால் உயிரிழந்துள்ளார்.

கடந்த ஒரு வாரமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைபெற்றுவந்த அவர், நேற்று நண்பகல் உயிரிழந்தார் என்று வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்தன.

அச்சுவேலியைச் சேர்ந்த ராஜா ரமேஸ்குமாரன் (வயது -44) என்ற தெல்லிப்பழை பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தரே இவ்வாறு உயிரிழந்தார்.

கொவிட்-19 நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட அவர், சுயநினைவற்ற நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சையளிக்கப்பட்டபோதும் இன்று நண்பகல் உயிரிழந்தார். தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் ஊழியர்கள் 09 பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பிறந்து மூன்றே நாட்களான சிசு கொரோனாவுக்கு பலி

களுத்துறை – வெலிபென்ன, பெலிவத்தகந்த பிரதேசத்தைச் சேர்ந்த பிறந்து மூன்றே நாட்களான சிசு ஸ்ரீ, கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளது.

குறித்த சிசுவானது, பெற்றோருக்குப் பிறந்த முதல் குழந்தை என்பதும் குறிப்பிடத்தக்கது. நாகொடை வைத்தியசாலையின் சிறுவர் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைபெற்றதன் பின் வீடு திரும்பிய நிலையில் குழந்தை இவ்வாறு உயிரிழந்துள்ளது.

அதற்கமைய குழந்தையின் பெற்றோர் உள்ளிட்ட குடும்பத்தாருக்கு பரிசோதனை மேற்கொள்ளவும் அவர்களை தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தவும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# 7 இலட்சம் எஸ்ட்ராசெனிக்கா தடுப்பூசிகளை நாளை நாட்டுக்கு கொண்டுவர ஏற்பாடு




நாட்டுக்கு மேலும் 7 இலட்சம் எஸ்ட்ராசெனிகா தடுப்பூசிகள் நாளைய தினம் கொண்டுவரப்படவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

அதற்கமைய, 7 இலட்சத்து 28 ஆயிரத்து 460 எஸ்ட்ராசெனிகா தடுப்பூசிகள் சனிக்கிழமை இலங்கைக்கு கொண்டு வரப்படவுள்ளன.

கொவெக்ஸ் திட்டத்தின் கீழ் ஜப்பானிலிருந்து நன்கொடையாக வழங்கப்பட்ட தடுப்பூசிகளே இவ்வாறு நாட்டுக்கு கொண்டு வரவுள்ளன.

இதேவேளை, எஸ்ட்ராசெனிகா தடுப்பூசியின் முதலாவது டோஸ் வழங்கப்பட்டவர்களுக்கு, இரண்டாவது டோஸ் வழங்குவதற்காக இந்தத் தடுப்பூசிகள் பயன்படுத்தப்படும்.

# 12 - 18 வயதுக்கிடைப்பட்ட மாணவர்களுக்கு பைசர் - மொடர்னா தடுப்பூசி வழங்க யோசனை

நாட்டிலுள்ள 12 - 18 வயதுக்கு இடைப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு கொரோனா தடுப்பூசி வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக கொரோனா தடுப்பூசி கொள்முதல் தொடர்பான ஜனாதிபதி பணிக்குழுவின் பிரதானி, ஜனாதிபதி ஆலோசகர் லலித் வீரதுங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஜனாதிபதி ஊடக மையத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டபோதே அவர் இதனைக் குறிபிபிட்டார்.

அதற்கமைய, குறித்த வயதெல்லை மாணவர்களுக்கு பைசர் அல்லது மொடர்னா தடுப்பூசி வழங்குவதற்கு எதிர்பார்த்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.




தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2021, ஜூலை 30ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# சஜித் அரசியல் கற்க வேண்டும்!

**பொ**துத் தேர்தலின்போது ரிஷாட் பதியுதீனின் கட்சியுடன் அவரது கோரிக்கைக்கமைவாக கூட்டணி அமைத்துக்கொண்டதாகவும் இப்போது அவர்கள் அந்தக் கூட்டணியிலிருந்து விலக்கிவைக்கப்பட் டுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கொழும்பில் நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பின் 20ஆவது திருத்தத்துக்கு ரிஷாட் கட்சியின் உறுப்பினர்கள் ஆதரவளித்தமையால் அவர்கள் கூட்டணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோவிடம் வாக்குமூலம் பெறுவதற்கு குற்றப்புலனாய்வுப் பிரிவினரின் அழைப்பிற்கமைய நேற்றுமுன்தினம் காலை 10 மணியளவில் திணைக்களத்திற்கு வருகைதந்தபோது, அவருடன் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் உடனிருந்தனர்.

இதனையடுத்து அங்கிருந்த ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்தபோது, ஊடகவியலாளர்களினால் ரிஷாட் பதியுதீன் தொடர்பாக கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ரிஷாட் பதியுதீன் தவறு செய்திருந்தால் அவருக்கு எதிராக குற்றச்சாட்டுகளை முன்வைத்து அவரை சட்டத்தின்முன் கொண்டுவருமாறே நாங்களும் கோரிக்கை விடுக்கின்றோம். அதனை விரைவாக முன்னெடுக்க வேண்டும். எந்த நபராக இருந்தாலும் அது எங்களுக்கு அப்பாற்பட்டது. அவர் தவறு செய்திருந்தால் சட்டத்தின் முன் கொண்டுவந்தாக வேண்டும்.

தவறு செய்தவர்களை, சாட்சியங்கள் முன்வைத்து சட்டத்தின்முன் கொண்டுவர வேண்டும். இந்நிலையில், அவருக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக எங்களிடம் கேட்க வேண்டாம். அதனை அரசாங்கத்துடன் இருக்கும் அவருடைய கட்சியின் உறுப்பினர்கள் மூவரிடமே கேட்கவேண்டும். பொதுத் தேர்தலின்போது, எங்களுடன் கூட்டணி அமைப்பதற்கு ரிஷாட் பதியுதீன் கோரிக்கை முன்வைத்தார். தேர்தலுக்குப் பின்னர் நாங்கள் கூட்டணி அமைக்கும்போது, ஒரு தரப்பினரைத் தவிர, ரிஷாட் பதியுதீன் தரப்பினருடன் கூட்டணி அமைக்கவில்லை. அதேபோன்று, 20ஆவது திருத்தத்திற்கு ஆதரவளித்த உறுப்பினர்கள் இருக்கும்வரையும் தற்போது சில பிரச்சினைகள் இருப்பதாலும் ரிஷாட் பதியுதீன் தரப்புடன் கூட்டணி அமைக்க தீர்மானிக்கவில்லை.

20ஆவது திருத்தத்திற்கு ரிஷாட் பதியுதீனின் உறுப்பினர்கள் ஆதரவளித்தமையினால் அந்த தரப்பினர் எங்களின் கூட்டணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவித்திருக்கிறார் சஜித் பிரேமதாஸ.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித்தின் இந்தக் கருத்து குறித்து முஸ்லிம் சமூகத்தில் பல்வேறு கருத்துகள் வெளிவந்துள்ளன. ஏற்கனவே ரிஷாட் மீது சிங்கள பெரும்பான்மை மக்களும் ஆளுங்கட்சியும் அதிருப்தியான கருத்துகளை வெளியிட்டுவரும் சூழ்நிலையில் சஜித்தின் இந்தக் கருத்து அதனை சமாளிக்கும் வகையிலான சாணக்கியமான கருத்தாக இருக்கலாம். ஆனால், தேசிய அரசியல் கட்சியொன்றின் தலைவருக்கு இது உசிதமானதல்ல.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ரிஷாட் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், சஜித் பிரேமதாஸவுக்கு முழு ஆதரவை வழங்கியது. அதேபோல் நாடாளுமன்ற தேர்தலிலும் முஸ்லிம்களின் கணிசமான வாக்குகள் சஜித்துக்கு கிடைப்பதற்கு ரிஷாட் காரணமாக இருந்தார். அப்படியான ஒரு பின்னணியில் நிலைமைகள் இருக்கும்போது எடுத்த எடுப்பிலேயே ரிஷாட் கட்சி அரசியல் கூட்டணியில் இல்லையென சஜித் கூறியிருப்பது அவரின் அரசியல் முதிர்ச்சியற்ற தன்மையை காட்டுகிறது.

ரிஷாட் எம்.பியின் வீட்டில் சிறுமியொருவர் மரணித்தது, அது தொடர்பான விசாரணைகள் நடைபெறுவது பரகசியம். இன்னும் ரிஷாட்டோ அல்லது அவரது குடும்ப உறுப்பினர்களோ சந்தேகநபர்கள்தான். குற்றவாளிகளாக எவரும் நீதிமன்றத்தால் அறிவிக்கப்படாதவரை அவர்களை குற்றவாளிகள்போல் சித்திரிப்பது தர்மமல்ல. அரசியல் நாகரீகமும் அந்த வரையறைக்குள் இருக்கிறது. சிங்களப் பெரும்பான்மை மக்களை அல்லது ஆளுங்கட்சியாளர்களின் வாயடைக்க சஜித் அப்படி கூறியிருப்பாராயின், அது சந்தர்ப்பவாத அரசியலேயன்றி வேறெதுவாக இருக்கமுடியும்.

தற்போதைய ஆட்சியாளர்களின் செயற்பாடுகளால் அதிருப்தியில் இருக்கும் முஸ்லிம்கள், எதிர்க்கட்சியாவது தங்களுக்கு குரல் கொடுக்கும் என்ற நம்பிக்கையை ஓரளவு கொண்டு ஆறுதலடையும் ஒரு சூழ்நிலையில் எதிர்க்கட்சித் தலைவரே சிங்கள பேரினவாதிகளுக்கு முட்டுக்கொடுக்கும் வகையில் செயற்படுவது நீதியானதல்ல. நாளை மலையக அல்லது வடக்கு, கிழக்கு தமிழ் அரசியல் பிரமுகர்களுக்கு ஓர் இக்கட்டு ஏற்பட்டால் அவர்களையும் நட்டாற்றில் விட்டுவிடுவார் எதிர்க்கட்சித் தலைவர். அதுதான் யதார்த்த நிலைமை.

ரிஷாட் பதியுதீன் ஐக்கிய மக்கள் சக்தியின் வளர்ச்சிக்காக முன்னின்றவர். அவரை அரசியல் ரீதியாக பயன்படுத்த வேண்டாம். நீதிமன்றம் ஒரு முடிவை சொல்லும்வரை அவர் ஐக்கிய மக்கள் சக்தி அரசியல் கூட்டணியில் இருப்பார் என்று சஜித் கூறியிருந்தால் அது அவரின் சாணக்கியத்தை காட்டியிருக்கும்.

இப்போதைய ஆட்சியாளர்கள் எதிர்க்கட்சியில் இருந்தபோது, அதாவது முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால ஆட்சிக்காலத்தில் இப்போதைய பிரதமர் மஹிந்தவுடன் இருந்த பலர் அப்போதைய ஆட்சியில் இணைந்தனர். மஹிந்தவுடன் இரவில் ஒன்றாக சாப்பிட்டவர்கள் மறுநாள் அரசுடன் இணைந்துகொள்ளுமளவு நிலைமை இருந்தது. அப்படி சென்றவர்கள் மஹிந்த ராஜபக்ஷவை திட்டித் தீர்த்தனர். ஆனால், அவர்களுக்கு எதிராக எந்த கருத்துகளையும் பொதுவெளியில் மஹிந்த சொல்லவில்லை. அவரின் அந்த மதிநுட்பமே பின்னர் ராஜபக்ஷமார் அரசியலில் முன்னோக்கிச்செல்ல ஏதுவாகவும் இருந்தது.

சஜித் பிரேமதாஸ அரசியலில் இன்னும் கற்கவேண்டியவை உள்ளன. ரிஷாட் இல்ல சிறுமி விவகாரம் நீதித்துறையால் கையாளப்படவேண்டும். ஐக்கிய மக்கள் சக்தியின் அரசியல் கூட்டணியில் ரிஷாட் தள்ளிவைக்கப்பட்டாலும் அவரின் ஆதரவாளர் களான மக்களிடமிருந்து அவரை பிரித்துவிடமுடியாது. ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட தலைவர்கள் இந்த விடயத்தை கருத்திற்கொள்ள வேண்டும்.

# இணையவழி ஆயுதம் பெகாசஸ்!

# சில உண்மைகள்



**பெ**காசஸ் (pegasus) என்னும் செல்போன் ஒட்டுக்கேட்பு விவகாரம் உலகம் முழுக்கவே பெரும் அதிர்வலைகளை உண்டாக்கி இருக்கிறது. பத்திரிகையாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள் உள்ளிட்டோரை உளவு பார்க்க உலகின் பல்வேறு நாடுகளால் இந்த மென்பொருள் பயன்படுத்தப்பட்டதாக குற்றஞ்சாட்டப்படுகிறது.

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த “பார்பிடன் ஸ்டோரீஸ்” (Forbidden Stories) என்னும் லாப நோக்கமற்ற வலைத்தள நிறுவனமும், சர்வதேச மன்னிப்புச் சபையும் இந்த விவகாரத்தை முதலில் வெளிக்கொண்டு வந்தன.

அதனைத் தொடர்ந்து சர்வதேச அளவில் புகழ்பெற்ற 17 ஊடக நிறுவனங்கள் பல்வேறு புலனாய்வுகளை நடத்தி , இந்த ஒட்டுக்கேட்பு விவகாரம் குறித்த பல்வேறு உண்மைகளைத் தொடர்ந்து வெளிப்படுத்தி வருகின்றன.

ஒட்டுக்கேட்பு குற்றச்சாட்டுகள் அடிப்படை ஆதாரமற்றவை என பெகாசஸ் மென்பொருளை உருவாக்கிய என்.எஸ்.ஓ. நிறுவனம் தெரிவித்த போதும், உலகின் பல்வேறு நாடுகளில் என்.எஸ்.ஓ. நிறுவனம் மீதான விசாரணை ஆரம்பமாகிவிட்டது.

இந்தியாவிலும் இந்த விவகாரம் பெரும் புயலைக் கிளப்பியுள்ளது. இதனால் நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் கடந்த சில நாட்களாக முழுவதும் முடங்கிப் போய் உள்ளன.

**என்.எஸ்.ஓ. நிறுவனம் ஒரு பார்வை:**

★ 2000 ஆம் ஆண்டில் ஹூலியோ மற்றும் லாவி ஆகிய இரு நண்பர்கள் இணைந்து ஒரு ஸ்டார்ட்-அப் நிறுவனத்தைத் துவங்கினர்.

★ ‘மீடியாஎண்ட்’ என்று பெயரிடப்பட்ட அந்த ப்ரொடக்ட் ப்ளேஸ்மெண்ட் நிறுவனம் செல்போன்களின் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு சார்ந்த பணிகளுக்கு முக்கியத்துவம் அளித்தது.

★ ஒரு மொபைல்போனை வெகு தொலைவில் ,ருந்து கட்டுப்படுத்தும் செயலியான “கம்யூனிடேக்” என்ற தொழில்நுட்பத்தை மீடியாஅண்ட் நிறுவனம் கண்டறிந்தது.

★ செல்போனில் தொழில்நுட்பக் கோளாறுகள் ஏற்படும்போது, அதனை சரிசெய்ய வாடிக்கையாளர்களின் மொபைல் போன்களை தாங்கள் இருந்த இடத்திலிருந்தே அணுக, மொபைல் ஒப்பரேட்டர்களுக்கு இந்தத் தொழில்நுட்பம் மிகவும் பயன்பட்டது.

★ இஸ்ரேலின் புகழ்பெற்ற உளவு நிறுவனமான “மொசாட்” அமைப்பின் முன்னாள் அதிகாரியும்,இணையதள பாதுகாப்பு நிபுணருமான “நிவ் கார்மியை” தங்களுடன் இணைத்துக்கொண்டு ஹூலியோ மற்றும் லாவி ஆகியோர் 2010 இல் என்.எஸ்.ஓ. (NSO Group) என்னும் பெயரில் ஒரு குழுமத்தை உருவாக்கினர்.

★ நிவ் கார்மி, ஷாலெவ் ஹுலியோ மற்றும் ஓம்ரி லாவி என்னும் மூன்று பங்குதாரர்களின் முதல் எழுத்துகளின் சுருக்கமே என்.எஸ்.ஓ.

★ தொடர்ந்து நடத்த முடியாத காரணத்தால், 2014 ஆம் ஆண்டில் அமெரிக்காவைச் சேர்ந்த தனியார் முதலீட்டு நிறுவனமான பிரான்சிஸ்கோ பார்ட்னர்சிற்கு தங்கள் என்.எஸ்.ஓ. குழுமத்தை 130 மில்லியன் டொலருக்கு விற்றனர்.

★ கம்யூனிடெக் தொழில்நுட்பத்தை நவீன தொழில்நுட்ப வடிவில் மேம்படுத்தி, 2018இல் அதற்கு “பெகாசஸ்” (Pegasus) என்று பெயரிட்டனர்.

★ பிரான்சிஸ்கோ பார்ட்னர்ஸுக்கு விற்ற என்.எஸ்.ஓ. நிறுவனத்தை புதிய சிந்தனைகள் மற்றும் நம்பிக்கையுடன் 2019 ஆம் ஆண்டில் நண்பர்கள் திரும்ப வாங்கினர்.

★ பெகாசஸ் ஸ்பைவெயாரின் ஆழ்ந்த பயன்பாட்டையும், செயல்திறனையும் பற்றி அறிந்த இஸ்ரேல், என்.எஸ்.ஓ. நிறுவனத்திற்கு பற்பல சலுகைகளை வாரி வழங்கியது.

★ இறுதியில் உலகப் புகழ்பெற்ற இஸ்ரேலின் உளவு அமைப்பான மொசாட்டின் (Mossad) மறைமுகக் கட்டுப்பாட்டில் என்.எஸ்.ஓ. நிறுவனம் இயங்கத் தொடங்கியது.

**“பெகாசஸ்” என்ன செய்யும்?:**

❍ பெகாசஸ் என்பது ஒருவரின் செல்போனை உளவு பார்க்கும், அதில் இருக்கும் இரகசியங்களைத் திருடும் ஒரு மிக நவீனமான மென்பொருள்.

❍ இது இஸ்ரேல் அரசாங்கத்தால் “இணையவழி ஆயுதம்” என வகைப்படுத்தப்பட்ட ஒரு செயலியாகும்.

❍ உலகின் மிகவும் தீவிரமான கண்காணிப்பை மேற்கொள்ளும் உளவு ஸ்பைவேர் பெகாசஸ் ஆகும்.

❍ பெகாசஸ் ஸ்பைவேர் மூலம் ஒருவரின் ஐபோன் அல்லது எண்ட்ரொய்ட் போனை எவ்வளவு தொலைவில் இருந்தாலும் ஹெக் செய்ய முடியும்.

❍ ஐபோன் மற்றும் ஆண்ட்ராய்ட் போன்களை ஹெக் செய்யவேண்டும் என்னும் நோக்கத்திற்காகவே பெகாசஸ் வடிவமைக்கப்பட்டுள்ளது.

❍ போன் பயன்படுத்தும் நபருக்கே தெரியாமல் ஒரு டெக்ஸ்ட் மெசேஜ் வடிவிலோ, வாட்ஸ்அப் மிஸ் கோல் மூலமாகவோ, ஏதேனும் லிங்க் மூலமோ செல்போனுக்குள் பெகாசஸ் வந்துவிடும்.

❍ ஐமேசேஜில் பெகாசஸை வரவேற்க குறுஞ்செய்திக்கான ஒரு “பிரிவியூ” போதுமானதாக இருக்கும்.

❍ இதற்காக எந்தவொரு இணைப்பையும் க்ளிக் செய்யவேண்டிய அவசியம் இல்லை என்றும் ஸீரோ-க்ளிக் முறைக்கு தற்போது பெகாசஸ் மாறியுள்ளது.

❍ ஒரு நபரின் போனில் பெகாசஸ் ஸ்பைவெயார் நுழைந்தவுடனே, போனை வேவு பார்ப்பதற்குத் தேவையான மொட்யூல்களை தானாக இன்ஸ்டால் செய்யும். பின்னர் ஃபோனின் முழு கட்டுப்பாட்டையும் ஸ்பைவெயார் எடுத்துக்கொள்ளும்.

❍ ஹேக்கர்கள் அந்த போனிலிருந்து மெசேஜ், போட்டோ, வீடியோக்கள், மின்னஞ்சல், பயனாளர் செல்லும் இடம்போன்ற அனைத்து தகவல்களையும் பெற முடியும். போனின் வொய்ஸ் அழைப்புகள் அனைத்தையும் ஒட்டுக்கேட்கவும் முடியும்.

❍ முழுக்க முழுக்க மறையாக்கம் செய்யப்பட்ட (Encrypted) மெசேஜ்களை கூட பெகாசஸ் மூலம் ஹேக்கர் படிக்கலாம்.

❍ பெகாசஸ் ஸ்பைவெயார், போனின் டெவலப்பருக்கும் அதன் மென்பொருளுக்கும் தெரியாத இலக்குகளிலும் ஊடுருவும். மேலும் அந்த போனை வெளியிலிருந்து இயக்கவும் முடியும்.

❍ ஹெக் செய்யப்பட்ட போனில் இருக்கும் மைக்ரோபோன், கெமரா உள்ளிட்ட அனைத்தையும் போனின் உரிமையாளருக்குத் தெரியாமல் தூரத்தில் இருந்தே செயற்படுத்த முடியும்.

❍ போன் உரிமையாளரின் தனிப்பட்ட விவரங்களை பெகாசஸ் மிகச் சுலபமாகத் திருடிவிடும்.

❍ இந்த மென்பொருளைப் பயன்படுத்தும் ஹெக்கர் வெகுதொலைவில் இருந்தே இதனை இயக்க முடியும்.

❍ தரவு திருட்டைத் தவிர, அழைப்பு பதிவுகள், கலண்டர் நிகழ்வுகள் உள்ளிட்ட அனைத்தையும் போனிலிருந்து அழிக்கும் வேலையையும் பெகாசஸ் செய்யும். அதாவது தனக்கு வேண்டிய தரவுகளைத் திருடுவது மட்டுமல்லாமல், தனக்கு வேண்டாத தரவுகளை அழிக்கவும் முடியும்.

❍ இதில் ஆச்சரியப்படுத்தும் இன்னொரு முக்கிய விஷயம் மென்பொருளின் தன்னைத்தானே அழித்துக்கொள்ளும் செயற்பாடு. இந்த மென்பொருள் தன்னைக் கட்டுப்படுத்தும் ஹெக்கருடன் 60 நாட்களுக்கு மேலாக தொடர்புகொள்ள முடியவில்லை என்றாலோ அல்லது தவறான போனில் இன்ஸ்டால் செய்யப்பட்டுவிட்டாலோ தானாகவே அழிந்துகொள்ளும் வகையில் வடிவமைப்பட்டுள்ளது.

**பெகாசஸ் – சில உண்மைகள்:**

❖ பெகாசஸின் முதல் வாடிக்கையாளர் மெக்சிக்கோ.

❖ மெக்சிக்கோ, பங்களாதேஷ், சவுதி அரேபியா உள்ளிட்ட பல நாடுகள், என்.எஸ்.ஓ. நிறுவனத்திடமிருந்து பெகாசஸ் மென்பொருளை வாங்கிப் பயன்படுத்துகின்றன.

❖ இந்த மென்பொருள் அரசாங்கங்கள் கேட்டால் மட்டும்தான் வழங்கப்படுமே தவிர தனிநபர்களுக்கு தரப்படாது என்பது என்.எஸ்.ஓ. நிறுவனத்தின் முதன்மைக்கொள்கை.

❖ எனவேதான் பெகாசஸ் விவகாரம் ஆளும் அரசுகளுக்குப் பெரும் தலைவலியாக மாறியுள்ளது.

❖ பெகாசஸ் ஸ்பைவெயார் உரிமத்தின் அடிப்படையில் பல்வேறு நாடுகளின் மத்திய அரசாங்கங்களால் மட்டுமே ஆரம்பத்தில் பயன்படுத்தப்பட்டது. மே 2019 முதல் மென்பொருளின் விற்பனை மாநில புலனாய்வு அமைப்புகளுக்கும் வழங்கப்படுகிறது.

❖ பயங்கரவாதம், போதைப்பொருள் கடத்தல் மற்றும் பல்வேறு குற்றங்களை முன்கூட்டியே கண்டறிந்து தடுக்க அரசாங்க நிறுவனங்களுக்கு உதவ சிறந்த தரமான தொழில்நுட்பத்தை உருவாக்குவதே எங்கள் நோக்கம் என்று என்.எஸ்.ஓ. குழுமம் கூறுகிறது.

❖ ஆனால், செல்போன்களை ஒட்டுக்கேட்டு,தனிமனித உரிமைகளில் தலையிடுவதாக பெகாசஸ் மென்பொருள் மீது குற்றச்சாட்டுகள் வைக்கப்படுகின்றன.

8) தங்கள் தனியுரிமையில் அனுமதியின்றி தலையிடுவதாக பேஸ்புக் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்கள் என்.எஸ்.ஓ. நிறுவனத்துக்கு எதிராக வழக்கு தொடர்ந்துள்ளன.

❖ ”செல்போன் பயனர்கள் தங்கள் சாதனத்தில் பெகாசஸ் ஊடுருவுவதை கவனிக்கவோ அல்லது ஊடுருவிய பிறகு அதனைக் கண்டுபிடிக்கவோ வாய்ப்பில்லை” என்று ரஷ்யாவைத் தலைமையிடமாகக்கொண்டு இயங்கிவரும் உலகின் புகழ்பெற்ற கஸ்பர்ஸ்கி (Kaspersky) என்னும் சைபர் செக்யூரிட்டி நிறுவனம் தெரிவித்துள்ளது.

❖ மனித உரிமைகளைப் பாதுகாக்க உருவாக்கப்பட்ட சர்வதேச அமைப்பான சர்வதேச மணிப்புச் சபை (Amnesty International) “பெகாசஸ் ஊடுருவல் மனித உரிமைகளை நசுக்கும் செயல்” என்று தெரிவித்துள்ளது.

தொழில்நுட்பம் என்னும் இருமுனைக் கத்தியின் எதிர்மறைப் பக்கம் படிப்படியாக உலகைத் தாக்கத் தொடங்கியிருக்கிறது. செல்போன்களைத் தொடர்ந்து பயன்படுத்தினால் கெடுதல் என்பதைத் தாண்டி, போன்களைப் பயன்படுத்தினாலே பாதிப்பு என்பது அறிவியல் - தொழில்நுட்பத்தின் மிக மோசமானதொரு நிலை.

ஒவ்வொரு மனிதனின் இரகசியமும், தனியுரிமையும் மதிக்கப்படுவதே நாகரீக சமுதாயத்திற்கு அடையாளம். தொழில்நுட்பத்தால் ஏற்படும் இத்தகைய உரிமை மீறல்களைத் தொழில்நுட்பத்தின் துணைகொண்டே முறியடிக்க வேண்டும் என்பது காலத்தின் கட்டாயம். நாக்கை விற்று விட்டுத் தேனை வாங்கி என்ன பயன்!

**– அகன் சரவணன்**
**நன்றி – விகடன்**

## மக்கள் கடிதம்

***வாசகர்களே ,***

***உங்கள் ஊரிலுள்ள குறைநிறைகளை, பிரச்சினைகளை எங்களுக்குத் தபால் மூலமாகவோ, மின்னஞ்சலினூடாகவோ எழுத்துமூலம் தெரிவியுங்கள்.***

***பிரதி சனிக்கிழமைகளில் எமது பத்திரிகையில் வெளிவரவுள்ள மக்கள் கடிதம் பகுதியில் அவற்றைப் பிரசுரிப்போம்.***

thamilaneditor@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அல்லது 0761393805 என்ற தொலைபேசி இலக்கத்தின் வட்ஸப்புக்கு அனுப்பலாம்.

# சீனப் பெருமழையின் துயரங்களும் பாடங்களும்



ஜூலை 17 அன்று தொடங்கியது அந்தப் பெருமழை. ஜூலை 20 அன்று உக்கிரமடைந்தது. இதுநாளதுவரை வடியவில்லை. இன்னும் ஜெங்ஜோ நகரம் வெள்ளக்காடாகத்தான் இருக்கிறது. சீனாவின் மையப் பகுதியில் அமைந்திருக்கும் ஹெனான் மாநிலத்தின் தலைநகர் இது. மஞ்சள் நதிக்கரை நகரம்.

ஜூலை 20 அன்று மாலை 4 மணிக்கும் 5 மணிக்கும் இடைப்பட்ட ஒரு மணிநேரத்தில் பெய்த மழையின் அளவு 202 மில்லிமீற்றர் (8 அங்குலம்). ஜூலை 17இற்கும் 20இற்கும் இடைப்பட்ட மூன்று நாட்களில் பெய்த மழை 640 மிலலிமீற்றர். ஜெங்ஜோ நகரில் ஓராண்டில் பெய்யக்கூடிய சராசரி மழையளவு 640 மில்லிமீற்றர். அதாவது, ஆண்டுமுழுவதும் பெய்யவேண்டிய மழை மூன்றே நாட்களில் பெய்தது. அதில் மூன்றில் ஒரு பங்கு ஒரு மணிநேரத்திற்குள் கொட்டித்தீர்த்தது.

சாலைகளில் வெள்ளம் ஆறாகப் பெருக்கெடுத்து ஓடியது. வாகனங்கள் பொம்மைகளைபோல் மிதந்தன. கட்டிடங்கள் பலவற்றுள் வெள்ளம் புகுந்தது. மின்சாரமும் தண்ணீரும் இணையமும் தடைப்பட்டன. ஜெங்ஜோ நகரைச் சுற்றியுள்ள 12 நகரங்களும் பல்வேறு கிராமங்களும் பாதிக்கப்பட்டன. 5 இலட்சம் ஏக்கருக்கு மேல் பயிர்கள் பாழாகிவிட்டன. அணைக்கட்டுகள் நிரம்பி வழிகின்றன. இலட்சக்கணக்கான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டுசெல்லப்பட்டார்கள்.



பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஒரு கோடியாக இருக்கலாம். இதுவரை 70இற்கும் மேற்பட்டோர் பலியாகியிருக்கின்றனர்.

**அரசு சொல்லும் காரணங்கள்**

இப்போது இரண்டு கேள்விகள் எழுகின்றன. முதலாவதாக, இப்படியொரு பெருமழையை நிர்வாகம் எதிர்பார்க்கவில்லையா? ஹெனான் மாநிலத்துக்குக் கோடையில் பெருமழை என்பது புதியதல்ல. பொதுவாக, அது சூறாவளியுடன் சேர்ந்து வரும். இந்த முறை இன்-ஃபா என்று பெயரிடப்பட்ட சூறாவளி, பல்லாயிரம் மைல்களுக்கப்பால் மையம் கொண்டிருந்தபோதே இந்தப் பெருமழை நகரைத் தாக்கிவிட்டது. இது எதிர்பாராதது. வானிலை மையத்தால் முன்னதாகக் கணிக்க முடியவில்லை.

இரண்டாவது கேள்வி, நகரின் மழைநீர் வடிகால்கள் என்னவாயின? அவை போதுமானவையாக இல்லையா? இதற்கு நகராட்சி பதிலளித்திருக்கிறது. 'சீனாவின் பல நகரங்களும் இருநூறாண்டு வெள்ளத்தைக் கடத்திவிடக் கூடிய வடிகால்களைக் கொண்டவை. ஆனால், இந்த மழை ஆயிரம் ஆண்டுகளில் பெய்திராத பேய் மழை' என்பது அந்தப் பதில். ஜெங்ஜோ நகரத்தின் மழைமானிகள் 1951இல் நிறுவப்பட்டவை. அதாவது, கடந்த 70 ஆண்டுகளில் பெய்த மழைக்குத்தான் கணக்கு இருக்கிறது. அப்படியானால் அதை வைத்துக்கொண்டு, எப்படி இருநூறாண்டு வெள்ளம், ஆயிரமாண்டு மழை என்றெல்லாம் சொல்கிறார்கள்?

குறைவான ஆண்டுகளுக்கு மட்டுமே



தரவுகள் இருந்தாலும் வானியலர்களும் பொறியியலாளர்களும் ஐம்பது ஆண்டுகளில், நூறாண்டுகளில் பெய்வதற்குச் சாத்தியமுள்ள அதிகபட்ச மழையைக் கணக்கிடுவார்கள். இவை முறையே ஐம்பதாண்டு மழை, நூறாண்டு மழை எனப்படும். இந்த அடிப்படையில்தான் 'இருநூறாண்டு மழைக்கான வடிகால்களை அமைத்திருந்தோம், ஆனால், இது ஆயிரமாண்டு மழை' என்கிறது நிர்வாகம். விரைவில், இந்தப் பேரிடர் குறித்து கூடுதல் தரவுகளோடு ஆய்விதழ்களில் கட்டுரைகள் வெளியாகும். அப்போது, 'ஆயிரமாண்டு மழை' என்கிற நகராட்சியின் கூற்று சரிதானா என்பதில் தெளிவு ஏற்படலாம்.

**ஆய்வாளர்கள் சொல்லும் காரணங்கள்**

எனில், சர்வதேச ஆய்வாளர்கள் வேறு இரண்டு காரணங்களைச் சுட்டுகிறார்கள்.

முதலாவதாக, சீனாவில் அதிகமான எண்ணிக்கையில் கட்டப்பட்டிருக்கும் அணைகள். இவை ஆறு, குளங்களை இணைக்கும் நீர்வழிப் பாதைகளின் இயல்பான போக்கை மாற்றிவிட்டன, அவற்றின் திறனை வெகுவாகக் குறைத்துவிட்டன.

இரண்டாவதாக, பருவநிலை மாற்றமும் புவிவெப்பமாதலும், உலகின் பல இடங்களில் பெய்யும் மாமழைக்குக் காரணமாக அமைகின்றன என்று ஆய்வாளர்கள் எச்சரிக்கிறார்கள். உலகம் முழுமையிலிருந்தும் வெளியேறும் பசுங்குடில் வாயுக்களில் 27 வீதம் சீனாவைச் சேர்ந்தவை. இதில் சீனாதான் முதலிடம் வகிக்கிறது. அமெரிக்கா இரண்டாவது இடம் 11 வீதம், இந்தியா மூன்றாவது இடம் 6.6 வீதம். தான் ஒரு வளரும் நாடு, தனக்குப் பசுங்குடில் வாயுக்களைக் குறைப்பதில் கூடுதல் காலஅவகாசம் தர வேண்டும் என்று சீனா சர்வதேச அரங்கில் கோரிவருகிறது. ஆனால், இயற்கை, கால அவகாசம் வழங்கத் தயாராக இல்லை. இனியும் காலம் தாழ்த்தாமல் சீனா இந்தப் பிரச்சினைக்கு முகங்கொடுக்க வேண்டும். மேலும், நூறாண்டு, இருநூறாண்டு மழையைக் கணக்கிடும் வரைமுறைகளையும் பருவநிலை மாற்றத்துக்கு இணங்க மறுபரிசீலனை செய்யவேண்டும்.

**நமக்கான பாடங்கள்**

இந்தப் பெருமழையில் நமக்கான பாடங்களும் இருக்கின்றன.

முதலாவதாக, கிராமங்களைக் காட்டிலும் நகரங்களில்தான் வெள்ளத்தின் பாதிப்பு அதிகமாக இருக்கும். ஏனெனில், நகரங்களில் தான் மக்கள் செறிந்து வாழ்கிறார்கள்; மேலும், அங்கு வெள்ளத்தை உறிஞ்சக்கூடிய மண் தளங்கள் குறைவாக இருக்கும். ஆகவேதான், உலகின் பல நகரங்களிலும் நூறாண்டு, இருநூறாண்டு வெள்ளத்தைக் கடத்தும் வடிகால்கள் அமைக்கப்படுகின்றன.

அரசு, ஒவ்வொரு நகரின் மழையளவு குறித்தும் விரிவாக ஆராயவேண்டும். இப்போதைய சாலையோர வடிகால்களின் கொள்ளளவைப் பரிசோதித்து அவற்றை மேம்படுத்த வேண்டும். சாலையோர வடிகால்கள் பிரதான வடிகால்களோடு முறையாக இணைக்கப்பட வேண்டும். இந்தப் பிரதான வடிகால்கள்தான் நீரைக் கடலிலோ ஆற்றிலோ சேர்ப்பிக்கும். இவை நூறாண்டு அல்லது இருநூறாண்டு வெள்ளத்தைக் கடத்தத்தக்கதாக வடிவமைக்கப்பட வேண்டும்.

இரண்டாவதாக, புவிவெப்பமாதல் என்பது இனியும் சூழலியலாளர்களின் பிரச்சினை மட்டும் அன்று.

'இது மிக மோசமான வெள்ளம்' என்று சொல்லியிருக்கிறார் சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங். சீன அரசும் ஆய்வாளர்களும் புதிய திட்டங்களுடன் வரக்கூடும். இந்த வெள்ளத்திலிருந்து சீனா மட்டுமல்ல, உலக நாடுகளும் தங்களுக்கான படிப்பினைகளைப் பெற வேண்டும்.

**-மு.இராமனாதன், எழுத்தாளர்,**
**நன்றி - தி ஹிந்து**







# “அப்பா அப்பான்னு கதறுற சத்தம் மட்டுமே கேட்டுச்சு!”

# மகாராஷ்டிரா வெள்ளத்தின் துயர சாட்சிகள்...



தெற்கு மும்பையிலிருக்கும்ஜெ.ஜெ. மாநகராட்சி மருத்துவமனையில் சிகிச்சையிலிருக்கும் நிதேஷின் கதறல் கடும் மழைச் சத்தத்தையும் மீறி எதிரொலிக்கிறது.

ரோய்கட் மாவட்டம், சுதர்வாடி கிராமத்தைச் சேர்ந்த இவரின் இரு பெண் குழந்தைகளும் இவர் கண்முன்னாலேயே இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்திருக்கிறார்கள். காலுடைந்த நிலையிலும் போராடி, தன் மனைவி மற்றும் ஒரு மகனை மட்டுமே காப்பாற்ற முடிந்தவரால், கடைசிவரை இரு குழந்தைகளைக் காப்பாற்றவே முடியாமல்போனது பெரும் துரதிர்ஷ்டம். மகாராஷ்டிர மாநிலத்தில் ஏற்பட்ட வெள்ளப் பேரிடர் சோகத்தின் ஒரு துளி உதாரணம் மட்டுமே இது!

“இராத்திரி 8 மணியிருக்கும்... திடீர்னு பெரிய பெரிய பாறைங்க டம் டம்’னு என் வீட்டு மேல வந்து விழுந்துச்சு. அப்ப நான் வீட்டோட முன்பக்கமா நின்னுட்டு இருந்தேன். மேல்தளம் உடைஞ்சு பெரிய கொங்கிரீட் என் கால் மேல விழுந்ததுல நான் கீழே விழுந்துட்டேன். வீட்டுக்குள்ள இருந்து என் மனைவி உதவி கேட்டு கதறுறாங்க. கால்மேல கிடந்த கொங்கிரீட் பாறையைத் தூக்கிப் போட்டுட்டு உள்ளே போனேன். அங்கே இடிபாடுல சிக்கியிருந்த என் மனைவியையும், நாலு வயசு மகனையும் போராடிக் காப்பாத்தி வெளியே கொண்டுவந்து விட்டுட்டேன். உள் ரூம்ல எங்களோட அஞ்சு வயசு, ஆறு வயசு மகள்கள் படுத்திருந்தாங்க. அந்தப் பக்கமே போக முடியாதபடி பாறைகள் அடைச்சிருந்துச்சு.

உள்ளேயிருந்து அவங்க ‘அப்பா... அப்பா’னு கதறுற சத்தம் மட்டுமே கேட்டுச்சு. நான் என்ன பண்ணியும் உள்ளே போக முடியலை. அரை மணிநேரத்துல அவங்களோட சத்தமும் அடங்கிடுச்சு. ரெண்டு மணி நேரம் கழிச்சு மீட்புப் படையினர் வந்த பிறகு என் ரெண்டு குழந்தைகளையும் பொணமாத்தான் பார்க்க முடிஞ்சுது” தலையில் அடித்துக்கொண்டு அழுகிறார் நிதேஷ்.

மகாராஷ்டிராவின் கொங்கன் பகுதியிலிருக்கும் ரத்னகிரி, ரோய்கட், சாங்கிலி, சதாரா மாவட்டங்களில் மரண ஓலங்கள் நிற்காமல் கேட்கின்றன. இதுவரை 200 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. மும்பையில் மட்டுமே ஜூலை 26ஆம் திகதி காலைவரை 40 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. இன்னும் ஏராளமானோரின் உடல்கள் மழை வெள்ளத்தில் ஆங்காங்கே சிக்கியிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

“அப்பா அப்பான்னு கதறுற சத்தம் மட்டுமே கேட்டுச்சு!” மகாராஷ்டிரா வெள்ளத்தின் துயர சாட்சிகள்...

கொங்கன் பகுதியிலுள்ள ரத்னகிரி, ரோய்கட், சாங்கிலி, சதாரா மாவட்டங்களில் ஜூலை 19ஆம் திகதியிலிருந்து கடும் மழை தொடர்ந்து பெய்தது. இதில் ரோய்கட் மாவட்டத்தில் தாலியா, சுதர்வாடி, கவாலே, ரத்னகிரியிலுள்ள தமானந்த் ஆகிய கிராமங்களில் 22ஆம் திகதி மாலை ஏற்பட்ட நிலச்சரிவுகளால் சாலைகள் அடித்துச் செல்லப்பட்டு, அந்தக் கிராமங்கள் தனித்தீவுகள் போலாகின. உள்ளே யாராலும் செல்ல முடியவில்லை.

ஒருவழியாக போராடி சுமார் 24 மணிநேரத்துக்கு பிறகே மீட்புக் குழுவினர் கிராமங்களுக்குள் செல்ல முடிந்தது. தொடர்ந்து கடற்படை, விமானப்படை, இராணுவம் ஆகியவை மீட்புப் பணிகளில் இறங்கின. ஆனாலும், கிராமங்கள் வெள்ளக்காடாகக் காட்சியளித்ததால் ஹெலிகொப்டர்களைத் தரையிறக்க முடியவில்லை.

நிலச்சரிவால் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட தாலியா கிராமத்தில் மட்டும் 49 பேரின் உடல்கள் மீட்கப்பட்டன. 47 பேரைக் காணவில்லை. தாலியா கிராமத்தைச் சேர்ந்த மிலிந்த் கங்காவானே, “இந்த அளவுக்கு மழை பெய்யும்னு எங்களுக்கு எந்த எச்சரிக்கையும் தரப்படலை. முன்கூட்டியே தெரிஞ்சுருந்தா நாங்க கிராமத்தைவிட்டு வெளியேறியிருப்போம். திடீர்னு மலை உச்சியிலிருந்து பெரிய பெரிய பாறைங்க எங்க வீடுங்க மேல விழுந்ததுல 90 பேருக்கு மேல சிக்கியிருக்காங்க. கடவுள் புண்ணியத்துல நான் தப்பிச்சுட்டாலும் உள்ளே எத்தனை பேரு உயிரோட இருக்காங்கன்னு தெரியலை...” என்கிறார் கண்ணீர் வழிய.

கவாலே கிராமத்தில் வசிக்கும் லட்சுமண் சொல்வதைக் கேட்டால் பதைபதைக்கிறது... ‘‘தெரு முழுக்க வரிசையா வீடுங்க சரிஞ்சு விழுந்துட்டு வருது. நான் என் வீட்டுக்குள்ள இருந்து வெளியே வந்து பக்கத்து வீட்டுல இருந்தவங்ககிட்ட ‘வெளியே வாங்க... வெளியே வாங்க’னு கத்தினேன்.

ஆனா, அவங்க அப்பதான் சாப்பிட உட்கார்ந்திருந்தாங்க. சாப்பிட உட்கார்ந்துட்டா, சாப்பிடாம எழக்கூடாதுங்கிற ஐதிகத்தால அவங்க எந்திரிக்கவே இல்லை... என் கண் முன்னாடியே அவங்க வீட்டை மண் மூடிடுச்சு” என்றார் பயம் விலகாமல்.

கொங்கன் பகுதியில் கனமழையால் பாதிக்கப்பட்ட ஐந்துக்கும் மேற்பட்ட மாவட்டங்களில் மக்கள் தங்கள் இரு சக்கர வாகனங்கள், கார்கள், டிராக்டர்கள், கால்நடைகள் உட்பட அனைத்தையும் இழந்து தவிக்கிறார்கள்.

80,000இற்கும் மேற்பட்ட மின்கம்பங்கள் சரிந்து, மின் விநியோகம் அடியோடு பாதிக்கப்பட்டுள்ளது. கர்நாடகாவிலிருந்து வரும் கிருஷ்ணா ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால் மும்பை - பெங்களூரு மற்றும் கோவா செல்லும் சாலைகள் சேதமடைந்து ஆயிரக்கணக்கான லொறிகள் நகர முடியாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இதனால், போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டுள்ளது. இன்னொரு பக்கம் இடிபாடுகளில் சிக்கியவர்களின் உறவினர்கள், தங்களின் உறவுகளைத் தேடி அலைந்துகொண்டிருக்கும் காட்சிகளும், சிலர் தங்கள் உறவுகளின் உடல்களை மடியில் ஏந்திக் கதறும் காட்சிகளும் மனதை ரணமாக அறுக்கின்றன.

நிலச்சரிவு ஏற்பட்ட கிராமங்களிலிருந்து ஒரு இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தங்களது ஊருக்குத் திரும்பினாலும் இறந்துபோன உறவுகள், சிதைந்துபோன இருப்பிடம் உட்பட பழைய வாழ்க்கையை மீட்டெடுக்க அதிக நாட்கள் பிடிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனாலும், இந்தத் துயரத்திலிருந்து விரைவில் மீண்டெழ வேண்டும் மகாராஷ்டிரா!

**நன்றி - விகடன்**

# ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்கு தீர்வுகோரி மலையகத்தில் ஆர்ப்பாட்டம்

## மாவனல்லையில்...







(கண்டி நிருபர்)

அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களது சம்பள முரண்பாட்டை நீக்கக் கோரியும் ஐக்கிய ஆசிரியர் சங்கத்தால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரியும் ஐக்கிய ஆசிரியர் சங்கம், அதிபர்கள் சங்கம் என்பன இணைந்து நேற்று மாவனல்லை நகர மத்தியில் எதிர்ப்பு ஊர்வலம் ஒன்றையும் ஆர்ப்பாட்டத்தையும் நடத்தினர்.

மாவனல்லை கல்வி வலயத்திற்கு உட்பட்ட தமிழ் மற்றும் சிங்கள மொழிமூல பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் இந்த கவனயீர்ப்பு ஊர்வலத்திலும் ஆர்ப்பாட்டத்திலும் கலந்துகொண்டனர்.

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக் கான நீண்டகாலமாக இழுத்தடிப்பு செய்யப்பட்டு வருகின்ற சம்பள முரண் பாட்டை அரசாங்கம் கவனம் செலுத்தி உடனடியாக நிவர்த்திக்க வேண்டும். ஆசிரியர்கள் கௌரவமான முறையில் நாட்டுக்காக சேவையாற்றுகின்றனர். அவர்கள் நேரத்தை வீணடிப்பவர்களல்ல. ஆசிரியர்களுக்கு பாதகமான அநீதி இழைக்கக்கூடிய சட்டங்கள், நடவடிக்கை களை அரசாங்கம் மீளப் பெறவேண்டும் என்ற அடிப்படையில் பதாகைகளை தாங்கியவண்ணமாக இவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கோஷம் எழுப்பினர்.

## கலவான நகரில்..

அதிபர் - ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டை தீர்க்கக்கோரி கலவான நகரில் இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்ட பாரிய ஆர்ப்பாட்டப் பேரணி நேற்று இடம்பெற்றது. இதில் பல தொழிற்சங்கங் களும், பல்லாயிரக்கணக்கான ஆசிரியர் களும் கலந்துகொண்டனர்.

கடந்த 24 ஆண்டுகளாக தீர்க்கப் படாத அதிபர் - ஆசிரியர் சம்பள முரண்பாட்டினை தீர்த்தல், கொத்தலா வலை சட்டத்தை வாபஸ் பெறல், நிகழ்நிலைக் கல்விக்குத் தேவையான வசதி வாய்ப்புகளை மாணவர்களுக்கும் ஆசிரியர் களுக்கும் ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற முக்கிய கோரிக்கைகளை அரசாங்கத்திடம் முன்வைத்து இப்பாரிய போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் உபதலைவர் சுந்தர லிங்கம் பிரதீப் உரையாற்றுகையில்:

கடந்த 24 ஆண்டுகளாக ஆட்சிக்கு வருகின்ற அரசாங்கங்கள் சம்பள உயர்வு விடயத்தில் எம்மை தொடர்ச்சியாக ஏமாற்றி வருகின்றன. இன்று அரசாங்க ஊழியர்களில் மிகக் குறைந்தளவு சம்பளத்தைப் பெறுபவர்களாக ஆசிரியர்களே காணப்படுகின்றனர். வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்துள்ள இக்காலத்தில் ஆசிரியர்கள் நாட்சம்பளமாக ஆயிரத்து 200 ரூபாவையே பெற்றுக்கொள்கின் றனர்.

ஒரு நாள் பெற்றுக்கொள்கின்ற மிகக் குறைந்த இச் சம்பளத்தைக் கொண்டே இந்நோய் தொற்றுக்காலத்தில் ஆசிரியர் கள் நிகழ்நிலைக் கல்வியை முன்னெடுத்தார்கள். இக்கட்டான சூழ்நிலையிலும் எமது மாணவர் களினதும், நாட்டினதும் முன்னேற்றத் திற்காக எம் ஆசிரியர்கள் அளப்பரிய சேவையாற்றி வந்துள்ளனர்.

எனவே, எமது இச்சம்பள உயர் விற்கான நியாயமான, சரியான தீர்வினை அரசாங்கம் வழங்கும் வரையில் எமது அதிபர் - ஆசிரியர்களின் இப்போராட்டம் தொடரும் எனக் குறிப்பிட்டார்.

மேலும் இப்போராட்டத்தில் இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் ராஜமாணிக்கம் அசோக்குமார் மற்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் மூக்கன் சந்திரகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.








ஹிஷாலினியின் மரணத்திற்கு நீதி வேண்டும், பெண்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என பல கோரிக்கைகளை முன்வைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தொழிற்சாலையிலிருந்து ஊர்வலமாக கோவில்வரை சென்றடைந்து பெண்களுக்கு பாதுகாப்பு வேண்டும். சிறுமிகளை வேலைக்கு அமர்த்துவதை தடை செய் என நாவலப்பிட்டி - கட்டப்புலா தோட்டத்திலுள்ள ஐந்து தோட்டப் பிரிவு மக்கள் ஹிஷாலினியின் மரணத்திற்கு நீதி கோரி ஆலயத்தில் தேங்காய் உடைத்து ஆர்ப்பாட்டம் செய்தனர். (எம்.கிருஸ்ணா)

# இரத்தினபுரி தமிழ்க்கல்வி வளர்ச்சியின் பொற்காலம்

### இ.தொ.கா. உப செயலாளர் ரூபன் பெருமாள் தெரிவிப்பு

இரத்தினபுரி தமிழ்த் தேசிய கல்லூரியின் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு மாகாண கல்வி அமைச்சு பூரண ஒத்துழைப்பை வழங்கியுள்ளமை இரத்தினபுரி தமிழ்க் கல்வி வளர்ச்சியின் பொற் காலமாகும் - என இ.தொ.கா. உப செயலாளர் ரூபன் பெருமாள் தெரிவித்தார்.

இரத்தினபுரி மாவட்ட தமிழ்க் கல்வி வளர்ச்சி குறித்து சப்ரகமுவ மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச். டி சிசிரவுக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப செயலாளர் ரூபன் பெருமாளுக்கும் இடையிலான கலந்துரையாடல் சப்ரகமுவ மாகாண சபையின் கல்வி அமைச்சில் இடம்பெற்றுள்ளது.

இரத்தினபுரி தமிழ்த் தேசிய கல்லூரியின் அபிவிருத்தி விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டதுடன், இதுவரை குறித்த வேலைத்திட்டத் தின் அடைவுமட்டம் குறித்து மாகாண கல்வியமைச்சின் செயலாளருக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

இதன்போது, கல்லூரிக்கான காணியை பெற்றுக்கொடுக்க பிரதமரின் இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமானின் பங்களிப்பு வரவேற்கத்தக்கது எனவும் மாகாண கல்வி செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.



மேலும், இரத்தினபுரி தமிழ்த் தேசிய கல்லூரியின் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு மாகாண கல்வி அமைச்சு பூரண ஒத்துழைப்பை வழங்கும் என கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இக்கலந்துரையாடலில் மாகாண திட்டமிடல் பணிப்பாளர் நெவில் குமாரகே, இரத்தினபுரி தமிழ்த் தேசிய கல்லூரியின் அதிபர் இருளப்பன் ரவி மற்றும் இளைஞர் அணியின் அமைப்பாளர் இராஜேந்திரன் பெருமாள் ஆகியோர் கலந்துகொண்ட அதேவேளை, இரத்தினபுரி மாவட்டத்தில் 6 தமிழ் பாடசாலைகளை தேசிய பாடசாலை களாக தரமுயர்த்துவதற்கு கல்வி அதிகாரிகள் வழங்கிய பங்களிப்பு குறித்து ரூபன் பெருமாள், மாகாண கல்வியமைச்சின் செயலாளருக்கு நன்றி தெரிவித்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.

மலையக
செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# பம்பரகலை நீர்வீழ்ச்சியை பார்த்துவிட்டு திரும்பியவர்கள் விபத்தில் சிக்கி படுகாயம்




(பதுளை நிருபர்)

ஹல்துமுல்லைப் பகுதியின் வள்ளப்பத்தனை என்ற இடத்தில் நேற்று காரொன்று பாதையை விட்டு விலகி, அப்பாதைக்கு கீழுள்ள வீட்டு முற்றத்தில் விபத்திற்குள்ளாகியது. இவ்விபத்தில் மூன்று பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இவர்கள் உடனடியாக ஹல்துமுல்லை பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டு, ஆரம்ப சிகிச்சைகள் அளிக்கப்பட்டன. அதன்பின்னர் அவர்கள் மேலதிக சிகிச்சைக ளுக்காக தியத்தலாவை அரசினர் மருத்துவ மனைக்கு கொண்டுசெல்லப்பட்டு, தீவிர சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

மாத்தறை பகுதியிலிருந்து, ஹல்துமுல்லை பகுதிக்கு வந்து, பம்பரகலை நீர்வீழ்ச்சியைப் பார்த்துவிட்டு, மீளவும் மாத்தறைக்கு புறப்பட்ட வேளையிலேயே, இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்து குறித்து ஹல்துமுல்லை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# டிக்கோயாவில் 30 பேருக்கு கொரோனா தொற்று

(எம்.கிருஸ்ணா)

ஹட்டன் - டிக்கோயா நகர சபைக் குட்பட்ட பகுதியில் எட்டு குடும்பங் களைச் சேர்ந்த 30 பேருக்கு கொரோனா தொற்று 29/07 உறுதி செய்யப்பட்டுள்ளதாக பொது சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

காமினிபுர, தும்புருகிரிய, விஜிராபுர, தும்புருகிரிய, பண்டார நாயக்கபுர ஆகிய பகுதிகளில் உள்ளவர்களே இவ்வாறு தொற்றுக்குள்ளாகிய நிலையில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

40 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்டதில் 30 பேர் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், இவர்களை சுயதனிமைப் படுத்தல் நிலையத்திற்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள் ளதாக பொது சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

# சுண்ணாம்புக்கல் நீரூற்று குளத்தை மக்கள் பார்வைக்கு விடுமாறு கோரிக்கை

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

பலாங்கொடை ரஜவக்க சுண்ணாம்புக்கல் இயற்கை நீரூற்று வலயத்தினுள் பொதுமக்கள் மற்றும் உல்லாசப் பயணிகளுக்கு செல்ல மறு அறிவித்தல்வரை பொதுமக்கள் பார்வைக்கு தடைசெய்யப்பட்டுள்ள நிலையில், அதனை மக்கள் பார்வைக்கு அனுமதிக்குமாறு பொதுமக்கள் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு அமைப்புகள் கோரிக்கை விடுக்கின்றன.

இப்பிரதேசத்தில் உல்லாசப் பொழுதைக் கழிக்க வரும் சில இளைஞர்கள் மற்றும் குழுக்களால் இந்த இயற்கை வளங்களுக்கு ஏற்படுத்தப்படும் பாதிப்புகள் காரணமாக இப்பிரதேசத்தில் பொது மக்கள் நுழைவதை பலாங்கொட பிரதேச சபை தடைசெய்துள்ளது.

இந்த இயற்கை வளம்மிக்க நீரூற்றை கண்டுகளிக்க பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள் மற்றும் உல்லாசப் பயணிகள் ஆர்வம் காட்டி வருகின்றபோதிலும் இப்பிரதேசம் பலாங்கொடை பிரதேச சபையினால் தொடர்ந்தும் மூடப்பட்டு வருகிறது.

இந்த இயற்கை வளமிக்க பிரதேசத்தை மீண்டும் திறப்பதன் மூலம் உல்லாசப்பயணிகளை கவரவும் பலாங்கொட பிரதேச சபைக்கு வருமானத்தைப் பெற்றுக்கொள்ளும் மூலமாகவும் இவ்வளத்தை பயன்படுத்தலாம் எனவும் இவர்கள் சுட்டிக்காட்டு கின்றனர்.



# மஸ்கெலியாவில் இரு கொரோனா மரணங்கள்

(மஸ்கெலியா, கினிகத்தேனை நிருபர்கள்)

கொரோனா தொற்று காரணமாக மஸ்கெலியா சுகாதார அத்தியட்சகர் பிரிவில் இரு கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன.

கிளன்டில் லெங்கா தோட்டத்தைச் சேர்ந்த 36 வயதுடைய பெண் ஒருவரும் மஸ்கெலியா காட்மோர் பிரதேசத்தைச் சேர்ந்த 64 வயதுடைய பெண் ஒருவரும் இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

கொரோனா தொற்றால் உயிரிழந்த கிளன்டில் லெங்கா தோட்டத்தைச் சேர்ந்த பெண் கொரோனா நோயாளி புற்றுநோய் காரணமாக நாவலப்பிட்டிய ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று கொண்டிருந்தவேளையில் கொரோனா தொற்றால் உயிரிழந்ததைத் தொடர்ந்து 28ஆம் திகதி நாவலப்பிட்டியவில் தகசாலையில் தகனம் செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

மற்றைய பெண் மஸ்கெலியா காட்மோர் தோட்டத்தைச் சேர்ந்த 64 வயதுடைய கொரோனா நோயாளி கிளங்கன் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில், கொவிட் தொற்றால் உயிரிழந்ததை தொடர்ந்து அவரது சடலமும் 28ஆம் திகதி நோர்வூட் தகனசாலையில் தகனம் செய்யப்பட்டுள்ளது.

# காட்டுப் பன்றிகளின் நடமாட்டத்தால் மஸ்கெலியா மக்களுக்கு அசௌகரியம்



(மஸ்கெலியா, கினிகத்தேனை நிருபர்கள்)

கடந்த சில நாட்களாக மஸ்கெலியா நகரத்தில் காட்டுப் பன்றிகளின் நட மாட்டம் அதிகரித்துக் காணப்படுவதால் மக்களும் பல வழிகளிலும் அசௌகரி யங்களை ஏற்படுத்தியுள்ளதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு காட்டுப் பன்றிகள் இரவு நேரத்தில் நகரத்தின் உள்வீதிகளில் நடமாடுவதால் குறித்த இரவுநேரங்களில் அத்தியாவசிய தேவைகளுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தியுள்ளது. நரகத்தில் பொருட்களுக்கும் சேதங்களை ஏற்படுத்துவதாகவும் கவலை தெரிவிக் ன்றனர்.

அத்துடன், அதிகாலை உடற்பயிற்சி யில் ஈடுபடுவோர் வீதிகளில் நடமாடு வதற்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதோடு அதிகாலைவேளை நேரத்துடன் நகரத்திற்கு வருகைதந்து ஏனைய பிரதேசங்களுக்கு பஸ்ஸில் பயணிக்க முடியாத நிலையையும் பயணிகளுக்கு ஏற்படுத்தியுள்ளது.

தவிரவும் நகரிலுள்ள அங்காடி களில் பழுதடைந்த மரக்கறிகளை மற்றும் பழங்களை மூட்டையில் சேமித்து வைக்கப் பட்டிருக்கும்போது அவற்றையும் பன்றிகள் சேதமடையச் செய்வதாகவும் தெரிவிக்கின்றனர். அவ்வாறு வரும் பன்றிகளும் கூட்டம் கூட்டமாக வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி பிரச்சினைக்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் தீர்வை பெற்றுத்தருமாறு மக்கள் கோரிக்கை முன்வைக்கின்றனர்.

தமிழன்

# வணிக உலகம் Business world

www.thamilan.lk GROWTH

# ரீலோட் பொறியிலிருந்து வாடிக்கையாளரை விடுவிக்கும் எயார்டெல் தொலைத்தொடர்புத்துறையில் Freedom Packsகளுடன் மறு வரையறை செய்கிறது

எயார்டெல் உலகத் தரம் வாய்ந்த - இடையூறுகளற்ற 4G வலைப்பின்னலில் 'Freedom Packs'களை அறிமுகம்செய்வதன் மூலம் தொலைத்தொடர்பு நிலப்பரப்பை மாற்றியமைத்துள்ளது. ஒரேயொரு Reload மூலம் எயார்டெல் 'Freedom Packs' முழு மாதத்திற்கும் போதுமான மற்றும் சகல தரவு மற்றும் உரையாடல் நன்மைகளை வழங்குகின்றது. இதில் எந்த நிபந்தனைகளும் உட்படுத்தப்படவில்லை. இவை அனைத்தும் எயார்டெல்லின் உலகளாவிய தரம் வாய்ந்த, இடையூறு இல்லாத (Buffer-free) 4G வலைப்பின்னலில் சிறந்த அனுபவத்துடன் வருகின்றது.

இந்த 'Freedom Packs' மூலம் வாடிக்கையாளர்கள் ஒரு மாதத்திற்கு பல முறை அதிக வெளிப்படைத்தன்மை, நிபந்தனையற்ற மற்றும் அதிக அழைப்பு நன்மைகளுடன் மீண்டும் Reload செய்ய வேண்டிய அவசியத்தை எயார்டெல் நீக்கியுள்ளது. கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக இணையப் பயன்பாடும் கணிசமாக அதிகரித்துள்ளது. புதிய Packs வாடிக்கையாளர் புரிதலை அடிப்படையாகக்கொண்டது மற்றும் புத்தாக்கமான வாடிக்கையாளர் சேவையை பற்றிய எயார்டெல்லின் உட்பார்வையை எடுத்துக்காட்டுகிறது.

வெவ்வேறு பயன்பாட்டுத் தேவைகளுக்கு ஏற்றவாறு நான்கு வெவ்வேறு விதங்களில் இந்த Packsகள் வெளிவந்துள்ளன, மேலும் ஒப்பிடமுடியாத வாடிக்கையாளர் அனுபவத்துடன் 5 மடங்கு அதிக மதிப்பை வழங்குகிறது. இந்த Packகளில் ஒவ்வொன்றும் சமூக ஊடகங்கள், WFH, SFH உள்ளிட்ட எந்தவொரு இணையத் தேவைக்கும் பயன்படுத்தக்கூடிய தாராள அதிவேக தினசரி Dataவை உள்ளடக்கியது. உரையாடல் பயன்பாட்டிற்காக அனைத்து Packsகளும் எல்லையற்ற எயார்டெல் அழைப்பு மற்றும் எந்தவொரு வலைப்பின்னல் அழைப்புக்கும் போதுமான நிமிடங்கள் மற்றும் SMS ஆகியவற்றை வழங்குகின்றன. அத்துடன், நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களுக்கப்பால் எந்தவொரு தொலைத்தொடர்புக்கும் அழைப்பை ஏற்படுத்தினால் அதற்கான ஏனைய வலைப்பின்னல் அழைப்புக் கட்டணத்தை 66% எயார்டெல் குறைத்துள்ளது, இது 'Freedom Pack'இன் மற்றொரு தனித்துவமான அம்சமாகும்.

எயார்டெல் தங்களது 'Freedom Pack' பயன்பாட்டிற்கு அப்பால் கூடுதலான Dataவைத் தேடும் வாடிக்கையாளர்களுக்காக சிறந்த விலையுடன் கூடிய Data Top-up அட்டைகளையும் அறிமுகப்படுத்தியுள்ளது. இது அனைத்து Data பயனர்களை மகிழ்விக்கும் ஓர் அம்சமாகும்.

இந்த பிரம்மாண்டமான அறிமுகத்தின் மூலம் எயார்டெல் லங்கா தொலைத்தொடர்பு வாடிக்கையாளர்களுக்கு மிகவும் தேவையான எளிமையையும் சிறந்த மதிப்பையும் கொடுக்கிறது. பாவனையாளர்கள் இப்போது உலகத்தரம் வாய்ந்த 4G வலைப்பின்னலில் எந்தவொரு கட்டுப்பாடுகளையும் பற்றி கவலைப்படாமல், எங்களது 'Freedom Packs'களை பயன்படுத்தி அதிக பயனடையலாம். இப்போது எயார்டெல்லுக்கு மாறவேண்டிய நேரம் வந்துவிட்டதென எயார்டெல் ஸ்ரீலங்காவின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான அஷீஷ் சந்திரா கூறினார்.

இலங்கையில் ஒரு நாளில் சுமார் 3 மில்லியன் ரீசார்ஜ்கள் மொத்தமாக பயன்படுத்தப்படுகின்றன. இது 14 மில்லியனுக்கும் அதிகமான வயதுவந்தோருடன் ஒப்பிடும்போது ஓர் அதிர்ச்சியூட்டும் புள்ளிவிவரமாகும். சந்தையில் கார்ட்களின் பெருக்கத்தால் இந்த போக்கு தீவிரமடைகிறது. இது பொதுவாக உரையாடல் மற்றும் Dataகளுக்கான சிறப்பு Dataகள், பயன்பாட்டின் நேர நிபந்தனைகள், தரம் குறித்த நிபந்தனைகள் மற்றும் சமூக ஊடகங்களில் கவனம் செலுத்தும் தனித்தனி Packsகள் மற்றும் வீட்டிலிருந்து வேலைசெய்வது போன்ற அனைத்தையும் விரிவுபடுத்துகிறது. இதன் விளைவாக, பாவனையாளர்கள் அவர்கள் எதை செலவிடுகிறார்கள் என்பதையும், அவர்கள் அதற்கு ஈடாக வாங்குவதையும் கண்காணிக்க முனைகிறார்கள் - எப்போதும் மீண்டும் ரீலோட் பொறிமுறைக்கு செல்கிறார்கள்.

எயார்டெல் மூலம் 'Freedom Packs' பாவனையாளர்கள் இப்போது




இந்த சுழற்சியை தவிர்க்க முடியும், மாதத்திற்கு ஒருமுறை மட்டுமே Reload செய்யவேண்டும். பயன்பாட்டு கட்டுப்பாடுகள் இல்லாததால் ஒரு பாவனையாளர் தங்கள் மொபைல் தேவைகளை வழக்கமாக எடுத்துக்கொள்வதற்கு ஒரு தடவை Reload செய்வது போதுமானது. Packsகளின் வடிவமைக்கப்பட்ட விலைப்புள்ளிகள் சராசரி Prepaid பயனர்களின் மாதாந்திர செலவீனத்தின் மதிப்பை விட 5 மடங்குவரை வழங்குகிறது.

2011ஆம் ஆண்டுமுதல் நாடு முழுவதிலும் இலங்கையில் தொலைத்தொடர்பின் மிகப்பெரிய முதலீடாக 'Freedom Packs' கருதப்படுகின்றது. எயார்டெல்லின் நோக்கத்திற்காக கட்டப்பட்ட 4G வலைப்பின்னல் 99% இடையூறு இல்லாத Streaming, குறிப்பிடத்தக்க வகையில் விரைவாக பதிவேற்றல் (Loading) நேரங்கள் மற்றும் 4G சமிக்ஞைகளைக்கொண்ட மேம்பட்ட உட்புற கவரேஜ் உள்ளிட்ட சிறந்த பாவனையாளர் அனுபவத்திற்கும் உறுதியளிக்கிறது.

**பாரதி எயார்டெல் லங்கா நிறுவனம் தொடர்பாக:**

2009 ஜனவரி 12ஆம் திகதி இலங்கையில் தமது நடவடிக்கைகளை ஆரம்பித்த பாரதி எயார்டெல் (எயார்டெல் லங்கா) நிறுவனம் தற்போது ஒரு மில்லியன் வாடிக்கையாளர் மட்டத்தை நெருங்கிய இலங்கையின் வேகமான தகவல் தொலைத்தொடர்பு வலயமாகும். தமது வணிக செயற்பாடுகளை ஆரம்பித்த 2009ஆம் ஆண்டிலிருந்து 3 வருட குறுகிய காலப்பகுதிக்குள் எயார்டெல், நாட்டில் எல்லா பகுதிகளிலும் பரந்து விரிந்த சேவையை வழங்கியதோடு இன்று நாடு முழுவதிலும் தமது சேவையை வழங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. இலங்கை முதலீட்டுச் சபையின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள எயார்டெல் லங்கா தொலைத்தொடர்பு வலயமைப்பு சேவைகள் மற்றும் நிறுவன ரீதியான தீர்வுகள் உட்பட டிஜிட்டல் தொலைத்தொடர்பு சேவைகள் பலவற்றையும் வழங்குகின்றது. மேலதிக தகவல்களுக்கு www.airtel.lk என்ற இணையத்தளத்தைப் பார்வையிடவும்.

| | PRICE | VALIDITY | DATA | AIRTEL CALLS | OTHER NETWORK MINUTES | EXCESS USAGE RATE | LOCAL SMS |
|---|---|---|---|---|---|---|---|
| FREEDOM | Rs. 999 | 30 DAYS | 2GB Per Day (60GB Per Month) | UNLIMITED | 300 | 50 CENTS + TAX/MIN | 50 |
| | Rs. 599 | | 1GB Per Day (30GB Per Month) | | 300 | | |
| | Rs. 399 | | 500MB Per Day (15GB Per Month) | | 200 | | |
| | Rs. 199 | | 1GB Per Month | | 100 | | |
| FREEDOM LITE | Rs.98 | 30 DAYS | 100MB | UNLIMITED | 50 | 50 CENTS + TAX/MIN | 50 |
| | Rs.48 | 15 DAYS | 50MB | | 25 | | |
| 4G DATA TOP-UP | Rs.198 | N/A | 5GB | N/A | N/A | N/A | N/A |
| | Rs.58 | | 1GB | | | | |


## தன நிதானய

NLB

உத்தியோகபூர்வ முடிவுகள்

ஆங்கில எழுத்து: H

வெற்றி இலக்கங்கள்: 09 17 60 62

திகதி: 29.07.2021

சீட்டிழுப்பு இலக்கம்: 0550

| | கட்டமைப்பு | பரிசுகள் | வெற்றியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 1,000,000.00 | 0 |
| 2 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 100,000.00 | 4 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 3,000.00 | 82 |
| 4 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 1,000.00 | 159 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா. 100.00 | 4254 |
| 6 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூபா. 60.00 | 2856 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூபா. 20.00 | 72625 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூபா. 20.00 | 13530 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூபா. 3,124,860.00
பரிசுகளை வென்ற வெற்றியாளர்களின் எண்ணிக்கை. 93,510

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத் தொகை
ரூ. 100,969,116.80

தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
இல 32 தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01, தொலைபேசி: 0112-324324, 0114 607000 Web: www.nlb.lk

## கொவிசெத

NLB

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 2815 சீட்டிழுப்பு திகதி: 29.07.2021

ஆங்கில எழுத்து: Y

வெற்றி இலக்கங்கள்: 18 20 47 60

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 0 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 7 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 2,000.00 | 154 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 1,000.00 | 321 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 8517 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 5565 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 139838 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 25494 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றியாளர்களின் எண்ணிக்கை 179,896

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத் தொகை
ரூ. 5,709,940.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 61,037,308.80

தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
இல 32 தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01, தொலைபேசி: 0112-324324, 0114 607000 Fax: 0114 663416 Web: www.nlb.lk

துடிப்பான செய்திகளுக்கு thamilan.lk உடன் இணைந்திருங்கள்

## ஜாதிக சம்பத

JATHIKA SAMPATHA

NLB

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 1127

திகதி: 29.07.2021

லக்னம்

வெற்றி இலக்கங்கள்: 5 0 4 0 3 3

வலமிருந்து இடமாக பரிசுக்கட்டமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| 01 பரிசு | 5 0 4 0 3 3 | ரூ. 1,000,000.00 | 1 |
| 02 பரிசு | 0 4 0 3 3 | ரூ. 100,000.00 | 2 |
| 03 பரிசு | 4 0 3 3 | ரூ. 10,000.00 | 22 |
| 04 பரிசு | 0 3 3 | ரூ. 1,000.00 | 248 |
| 05 பரிசு | 3 3 | ரூ. 100.00 | 2398 |
| 06 பரிசு | 3 | ரூ. 20.00 | 24140 |

இடமிருந்து வலமாக பரிசுக்கட்டமைப்பு

| பரிசு | இலக்கங்கள் | தொகை | பரிசுகள் |
|---|---|---|---|
| 07 பரிசு | 5 0 4 0 3 | ரூ. 10,000.00 | 1 |
| 08 பரிசு | 5 0 4 0 | ரூ. 1,000.00 | 22 |
| 09 பரிசு | 5 0 4 | ரூ. 200.00 | 245 |
| 10 பரிசு | 5 0 | ரூ. 100.00 | 2451 |
| 11 பரிசு | லக்னம் | ரூ. 20.00 | 20150 |
| 12 பரிசு | வெற்றி இலக்கங்கள் ஆறும் எந்த ஒழுங்கில் பொருந்தினாலும் | ரூ. 200.00 | 40 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ. 3,127,700.00

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத் தொகை அரசாங்க வரிச் சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசினைப் பெறுவதற்கு அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அடுத்த சனிக்கிழமைக்கான சுப்பர் பரிசு ரூ. 16,285,970.90

தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

## மஹஜன சம்பத

NLB

சீட்டிழுப்பு இலக்கம்: 4520 உத்தியோகபூர்வ முடிவுகள்

திகதி: 29.07.2021

வெற்றி எழுத்து: X வெற்றி இலக்கங்கள்: 8 7 0 3 4 9

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| பரிசு | இலக்கங்கள் | தொகை | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1ஆம் பரிசு | 8 7 0 3 4 9 | ரூபா. 2,000,000/- | 2 |
| 2ஆம் பரிசு | 7 0 3 4 9 | ரூபா. 100,000/- | 9 |
| 3ஆம் பரிசு | 0 3 4 9 | ரூபா. 10,000/- | 100 |
| 4ஆம் பரிசு | 3 4 9 | ரூபா. 1,000/- | 999 |
| 5ஆம் பரிசு | 4 9 | ரூபா. 100/- | 10029 |
| 6ஆம் பரிசு | 9 | ரூபா. 20/- | 99398 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| பரிசு | இலக்கங்கள் | தொகை | வெற்றிபெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 7ஆம் பரிசு | 8 7 0 3 4 | ரூபா. 10,000/- | 10 |
| 8ஆம் பரிசு | 8 7 0 3 | ரூபா. 1,000/- | 107 |
| 9ஆம் பரிசு | 8 7 0 | ரூபா. 100/- | 991 |
| 10ஆம் பரிசு | 8 7 | ரூபா. 50/- | 9951 |
| 11ஆம் பரிசு | X | ரூபா. 20/- | 39801 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை – ரூ. 11,489,530.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 15,963,815.00

NLB வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்

தேசிய லொத்தர் சபை www.nlb.lk
32, தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு - 01. தொலைபேசி: 011-4607000, 011-2324324. Fax: 011-4664616.

## Mega POWER மெகா பவர்

NLB

சீட்டிழுப்பு இலக்கம்: 0868

உத்தியோகபூர்வ முடிவுகள்

திகதி: 29.07.2021

ஆங்கில எழுத்து: G சுப்பர் இலக்கம்: 13 வெற்றி இலக்கங்கள்: 39 47 65 78

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 0 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 5 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000.00 | 74 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500.00 | 170 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 4565 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 2941 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 73739 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 13619 |

இலங்கையின் அதிகூடிய சுப்பர் பரிசு

அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 139,510,106.80

அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 2,980,300.00

தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

# கல்முனை தெற்கில் தடுப்பூசி வழங்கல்

( எம்.என் .எம்.அப்ராஸ்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை பிரிவிலுள்ள 13 சுகாதார வைத்திய பிரிவுகளில் இரண்டாவது தடவையாக கிடைக்கப்பெற்ற தடுப்பூசிகள் செலுத்தும் நடவடிக்கை நேற்றுமுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை பணிப்பாளர் வைத்தியர் ஜீ.சுகுணனின் வழிகாட்டலில்,

கல்முனை தெற்கு சுகாதார அலுவலக சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.ஆர்.எம்.அஸ்மி தலைமையில் கல்முனை தெற்கு சுகாதாரப் பிரிவில் தடுப்பூசிகள் செலுத்தும் நடவடிக்கை



நேற்று தொடக்கம் (29ஆம் திகதிமுதல் -ஓகஸ்ட் 01ஆம் திகதிவரை) இடம்பெறவுள்ளன.

கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்திய சாலை, கல்முனை மஹ்மூத் மகளிர் தேசிய பாடசாலை, கல்முனை அல்-பஹ்ரியா தேசிய பாடசலை, மாவட்ட வைத்தியசாலை - மருதமுனை, மருதமுனை அல்-மனார் (ஆரம்ப பிரிவு )பாடசலை, மருதமுனை அல்-மதினா பாடசாலை, நற்பிட்டிமுனை அல்-அக்ஸா மத்திய மகா வித்தியாலயம் என தெற்கு சுகாதார பிரிவில் 07 இடங்களில் கொரோனா தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் பொதுமக்கள் ஆர்வத்துடன் வருகை தந்து தடுப்பூசியை பெற்றுக்கொண்டனர்.

இதேவேளை, முதல் தடவையாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்கு 50,000 சினோபார்ம் தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றதுடன், இதில் கல்முனை தெற்கு சுகாதாரப் பிரிவில் 4,700 பேருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி ஏ.ஆர்.எம்.அஸ்மி தெரிவித்தார்.

# மட்டக்களப்பு பொதுச் சந்தையில் இரு வர்த்தக நிலையங்களுக்கு பூட்டு

## 10 பேருக்கு கொரோனா தொற்று உறுதி



( மட்டக்களப்பு )

மட்டக்களப்பு நகர் பொதுச் சந்தை தொகுதியிலுள்ள வர்த்தக நிலைய பகுதியில் 79 பேரிடம் அன்ரிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதில் 10 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி கே.கிரிசுதான் தலைமையில் பொதுச் சுகாதார வைத்திய அலுவலகக் குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட இந்த அன்ரிஜன் பரிசோதனையின்போதே 10 பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டது.

இதற்கமைய அதிக தொற்றாளர்கள் இனங்காணப்பட்டதைத் தொடர்ந்து இரு வர்த்தக நிலையங்கள் தற்காலிகமாக பொதுச் சுகாதார பரிசோதகரினால் சீல் வைக்கப்பட்டன.

இந்நிலையில் தொடர்ந்து வர்த்தக ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் சுகாதார நடைமுறையை பேணி நடந்துகொள்ளுமாறு சுகாதாரத் தரப்பினர் எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பில் சுற்றுலா விடுதி உரிமையாளர் மர்ம உயிரிழப்பு





(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் பிரபல சுற்றுலா விடுதி (சதுனா ஹோட்டல்) உரிமையாளர் மர்மமான முறையில் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸார் விசாரணைகளை மேறகொண்டுள்ளனர்.

59 வயதுடைய இரு பிள்ளைகளின் தந்தையான செல்வராசா ஞானரஞ்சன் என்ற குறித்த விடுதி உரிமையாளரின் உடலில் மட்டக்களப்பு சுகாதார வைத்தியதிகாரி டாக்டர் எஸ்.கிரிசுதனினால் அன்ரிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

அன்ரிஜன் பரிசோதனை முடிவுகள் நெகடிவ் நிலையைக் காட்டியபோதிலும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அதன் முடிவுகள் இன்னும் கிடைக்கப் பெறவில்லையெனவும் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கிரிசுதன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் மாலை குறித்த சுற்றுலா விடுதி உரிமையாளர் தனது அறையில தூங்கியதாகவும் நேற்று நள்ளிரவுவரை எழுந்திருக்காமையால் சந்தேகம்கொண்ட விடுதி பணியாளர்கள் பொலிஸாருக்கு அறிவித்தனர். இதனையடுத்து அறையை உடைத்துப் பார்த்தபோது உரிமையாளர் இறந்த நிலையில் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சடலம் மட்டக்களப்பு போதனா வைத்திய சாலைக்கு பிரேத பரிசோதனைகளுக்காக எடுத்துச்செல்லப்பட்டுள்ள நிலையில் மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கெண்டுள்ளனர்.

# சட்டவிரோத கட்டுமானங்களை அகற்றக்கோரி திருகோணமலையில் மீனவர்கள் ஆர்ப்பாட்டம்



(அப்துல்சலாம் யாசீம்)

மீன்பிடித் தொழிலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் சட்டவிரோத கட்டுமானங்களை உடன் அகற்றுமாறு கோரி திருகோணமலையில் மீனவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திருகோணமலை டைக் வீதியில் அமைந்துள்ள டச்பே கடற்கரையில் நேற்றுமுன்தினம் மாலை இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

மக்கள் விடுதலை முன்னணி மற்றும் அகில இலங்கை பொது மீனவர்கள் சங்கம் இணைந்து ஏற்பாடுசெய்துள்ள இக்கவன யீர்ப்புப் போராட்டத்தில் எரிபொருள் விலையை உடனே குறை, மீன்பிடித் தொழிலை நாசமாக்கும் சட்டவிரோத கட்டிடங்களை உடனே அகற்று, வேண்டாம் நாடகம் போன்ற பதாகைகளை ஏந்தியவாறு மீனவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# காரைதீவில் தடுப்பூசி செலுத்தும் பணிகள் மீண்டும் ஆரம்பம்

(காரைதீவு நிருபர்)

கல்முனை சுகாதாரப் பிரிவுக்குட்பட்ட 13 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் கொரோனா தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் மீண்டும் நேற்று ஆரம்பமாகின.

கடந்த 24ஆம் திகதிமுதல் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மூன்று நாட்களாக தடுப்பூசியேற்றும் பணிகள் இடம்பெற்றன. இந்நிலையில், தடுப்பூசி பற்றாக்குறையால் சில பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் சில இடங்களில் அதிகமானோர் ஏமாற்றத்துடன் வீட்டுக்குத் திரும்பிச்சொன்றதையும் அவதானிக்க முடிந்தது.

அதற்கமைய மீண்டும் தடுப்பூசி கிடைக்கப் பெற்றமையால் கல்முனை பிராந்திய சுகாதார பணிப்பாளர் வைத்தியா குணசிங்கம் சுகுணனின் பணிப்புரைக்கமைவாக காரைதீவு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் தஸ்லிமா பஸீரின் தலைமையில் காரைதீவு சுகாதாரசேவை பணிமனைக்குட்பட்ட பிரிவின் பொது மக்களுக்கும் கொவிட - 19 தடுப்பூசி மருந்து ஏற்றல் நிகழ்வு வியாழக்கிழமை காரைதீவு பிரதேசத்தில் இடம்பெற்றது. இதில் காப்பிணித்தாய்மார், 60வயதிற்கு மேற்பட்டோர், பாலுட்டும் தாய்மார் என பல பொதுமக்கள் ஆர்வத்துடன் வருகைதந்து சினோபார்ம் தடுப்பூசியை பெற்றுக்கொண்டனர்.

தொற்றுக்குள்ளானவர்கள் பரிசோதனைக்குட் படுத்தப்பட்டதுடன், அவர்களுக்கு மருத்துவ ஆலோசனைகளும் வழங்கப்பட்டன. இதில் வைத்தியர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், தாதி உத்தியோகத்தர்கள், சுகாதார ஊழியர்கள் கலந்துகொண்டனர்.

கல்முனை பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் வைத்தியர் குணசிங்கம் சுகுணன் காரைதீவு கொரோனா தடுப்பூசி செலுத்தும் இடங்களுக்கு களவிஜயம் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.



கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

# நற்பிட்டிமுனை சமுர்த்தி வங்கி இணையவழி சேவை ஆரம்பம்

(ஏ.எல்.எம்.ஷினாஸ் )

ஜனாதிபதியின் தேசிய வேலைத்திட்டத்திற்கமைய சமுர்த்தி திணைக்களத்தின் கீழுள்ள சமுர்த்தி வங்கிகளை கணினிமயப்படுத்தி பொதுமக்களுக்கு துரித சேவையை வழங்கும் பணிகள் தற்போது நாடுபூராகவும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நற்பிட்டிமுனை சமுர்த்தி வங்கியில் கணணி ஊடான ஒன்லைன் வங்கிச் சேவையை ஆரம்பித்துவைக்கும் நிகழ்வு வங்கி முகாமையாளர் சட்டத்தரணி எம்.எம்.எம்.முபீன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

நற்பிட்டிமுனை சமுர்த்தி வங்கி, மருதமுனை சமுர்த்தி வங்கியுடன் இணைந்ததாக பயனாளிகளுக்கு சேவையாற்றி வருகின்றது. இங்கு சுமார் 20 ஆயிரம் பொதுமக்களின் வங்கிக் கணக்குகள் நடைமுறையில் உள்ளதோடு சமுர்த்தி உதவிபெறும் 3400 குடும்பங்களின் வங்கிக் கணக்குகளும் தற்போது கணினி மயப்படுத்தப்பட்டு ஒன்லைன் ஊடான சேவை வழங்கப்பட்டு வருகின்றது.

தேசிய ரீதியாக 40ஆவது இடத்தையும் பெற்றுள்ள இந்த சமுர்த்தி வங்கியின் செயற்பாடுகள் அம்பாறை மாவட்டத்தில் முன்னணியில் இருப்பதாக வங்கி முகாமையாளர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கல்முனை பிரதேச செயலாளர் ஜெ.லியாகத் அலி, சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சாலிஹ், திட்ட முகாமையாளர் ஏ.எம்.எஸ்.நயீமா உட்பட உதவி முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலர் கலந்துகொண்டு பயனாளி களுக்கான வங்கிச் சேவையை ஆரம்பித்துவைத்தனர்.

இதன்போது சமுர்த்தி பாதுகாப்பு நிதியம் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தினால் மாணவர்களுக்கு வழங்கப்படும் சமுர்த்தி சிப்தொர புலமைப்பரிசில் கொடுப்பனவும் வழங்கப்பட்டன.



# அக்கரைப்பற்று பிரதேசத்திற்கு மேலும் ஆறாயிரம் தடுப்பூசிகள்

## ஒன்லைன் மூலமாக பதிவுசெய்யும் நடவடிக்கையும் முன்னெடுப்பு



(அட்டாளைச்சேனை)

அக்கரைப்பற்று பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய பிரிவிற்கு இரண்டாம் கட்டமாக சுமார் ஆறாயிரம் தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இத்தடுப்பூசிகள் காலை 8 மணிமுதல் செலுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு, இத்தடுப்பூசிகளை இலகுவில் பெற்றுக்கொள்ளும் வகையில் ஒன்லைன் மூலம் வீடுகளில் இருந்தவாறு பொதுமக்கள் பதிவினை மேற்கொள்வதற்கான வசதிகளையும் செய்து வருவதாக அக்கரைப்பற்று பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி எப்.எம்.ஏ.காதர் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வசித்துவரும் மக்களில் சுமார் 25 ஆயிரம் பேர் கொவிட் தடுப்பூசி பெற்றுக்கொள்வதற்கான வகுதியினராக கணக்கிடப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் அறிவுறுத்தல்களுக்கமைவாக ஒன்லைன் மூலமாக தடுப்பூசிகள் செலுத்தப் படுவதற்கான பதிவுகள் தற்போது மேற்கொள் வதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருவதால், பொதுமக்கள் நீண்டநேரம் தாமதிக்காது குறித்த மத்திய நிலையங்களுக்கு சென்று விரைவாக தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ளவும் முடியும்.

கடந்த சனி மற்றும் ஞாயிறு ஆகிய தினங்களில் அக்கரைப்பற்று பிரதேசத்திற்கென வழங்கப்பட்ட 4600 கொவிட் தடுப்பூசிகள் செலுத்தும் பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில், இப்பகுதி மக்களுக்காக மேலும் 4600 தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இதனை ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவுகளிலும் வசித்துவரும் மக்களுக்கு தடுப்பூசி செலுத்தப்படுவதற்கான வகுதியினர் கருத்திற்கொள்ளப்பட்டு, அவர்களுக்கு இத்தடுப்பூசிகள் முன்னுரிமை அடிப்படையில் செலுத்தப்படவுள்ளன.

அக்கரைப்பற்று பிரதேசத்தில் அமைக்கப் பட்டுள்ள ஐந்து மத்திய நிலையங்களிலும் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையிலும் இத்தடுப்பூசிகள் செலுத்தும் பணிகள் முன்னெடுக் கப்படவுள்ளன. காலை எட்டு மணிமுதல் மாலை 4 மணிவரை பொதுமக்களுக்கு தடுப்பூசிகள் செலுத்தப்படவுள்ளன.

அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி, ஆயிஷா பாலிகா மகளிர் கல்லூரி, அஸ்-ஸிறாஜ் மகா வித்தியாலயம், பாத்திமிய்யா வித்தியாலயம், பள்ளிக்குடியிருப்பு பாயிஷா மகாவித்தியாலயம் ஆகிய ஐந்து மத்திய நிலையங்களிலும் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையிலும் இவ்வாறு கொவிட் தடுப்பூசிகள் செலுத்தப்படவுள்ளன.

ஒவ்வொரு மத்திய நிலையங்களிலும் தனித்தனியாக பதிவுக் கருமபீடம் ஸ்தாபிக்கப்பட்டு அவற்றில் பதிவுசெய்யும் பொதுமக்களும், ஒன்லைன் மூலமாக பதிவு செய்யப்படும் பொதுமக்களுக்கும் இத்தடுப்பூசிகள் செலுத்தப்படவுள்ளதாகவும் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எப்.எம்.ஏ.காதர் மேலும் தெரிவித்தார்.

# கலாநிதி ஹனீபா இஸ்மாயிலின் இரு நூல்களின் வெளியீட்டு விழா

## நாளை சனிக்கிழமை நிகழ்வு







(அட்டாளைச்சேனை நிருபர்)

எழுத்தாளரும், அக்கரைப்பற்று கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளருமான கலாநிதி ஹனிபா இஸ்மாயில் எழுதிய 'கிழக்கிலங்கை கவி மரபு' மற்றும் 'ஈழத்து நாட்டார் பாடல் மரபில் கவிகள்' ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

கல்விப் பணிப்பாளர் மௌலவி ஏ.எம்.றஹ்மத்துல்லாஹ் தலைமையில் காலை 9.30மணிக்கு இடம் பெறவுள்ள இந்நிகழ்வின்போது கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் மொழித் துறைத் தலைவர் பேராசிரியர் செ.யோகராசா பிரதம அதிதியாகக் கலந்துகொள்ள வுள்ளார்.

இந்நிகழ்வின் கௌரவ அதிதி களாக அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர்மௌலவி ஏ.எல்.எம்.காசிம், சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம். ஹனீபா, பட்டய நில அளவையாளர் ஏ.எல்.முகைடீன்பாவா, பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எஸ். அகமட் கியாஸ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதுடன், சிறப்பு அதிதிகளாக ஓய்வுநிலை அதிபர்களான எம்.ஏ.உதுமாலெவ்வை, எம்.ஐ.எம்.சஹாப்தீன், எம்.ஏ.சி.அப்துல் ஹை மற்றும் அதிபர் எஸ்.றிபாயுடீன்ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

அம்பாறை மாவட்ட தமிழ்ப் பட்டறை இலக்கியப் பேரவையின் மூலம் வெளியிட்டுவைக்கப்பட வுள்ள இந்நூல்கள் மீதான சிறப்புரைகளை எழுத்தாளர் எம்.அப்துல் றஸ்ஸாக் மற்றும் ஆய்வாளர் சிறாஜ் மஸ்ஹூர் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

இதன்போது கிழக்கு மாகாணத் தின் கவி மரபினைப் பின்பற்றி கலைஞர்களான எழுகவி எம்.ஐ.எம். ஜெலீல் மற்றும் மௌலவி எஸ்.எம். அப்துல் சுக்கூர் ஆகியோர் கவி பாடவுள்ளனர்.

இந்நிகழ்வின்போது கிழக்கு மாகாணத்தின் கவி மரபு மற்றும் நாட்டார் பாடல்கள் தொடர்பில் பல் வேறான கருத்துரைகள் துறைசார் கல்வியியலாளர்களினால் நிகழ்த்தப் படவுள்ளதோடு, கலை, கலாசார பாரம்பரிய விடயங்கள் பலவும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி மேடையேற்றப்பட வுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# சுயதொழில் செயலமர்வு நிகழ்வு தம்பலகாமத்தில்




(கிண்ணியா)

பெண்கள் சுயதொழில் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கிலான முழுநாள் செயலமர்வொன்று தம்பலகாமம் பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

இச்செயலமர்வானது மகளிர் விவகார வலுவூட்டல் அமைச்சின் ஏற்பாட்டில் பிரதேச பெண்கள் சங்கங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கடன் திட்டங்களை மேற்கொண்டு சுயதொழில் முயற்சியாளர்களை விருத்திசெய்தல் தொடர்பான விடயங்களை உள்ளடக்கியதாக அமையப்பெற்றது. இதில் சுயதொழில் விருத்தி,சந்தைப்படுத்தல், உற்பத்தி திறன்களை வளர்த்தல், கணக்கு நடவடிக்கைகள் போன்ற பல விடயங்களை இலங்கை மத்திய வங்கியின் திருகோணமலை பிரதேச முகாமையாளர் மைக்கல் நிரோசன் வளவாளராக கலந்துகொண்டு முன்வைத்தார்.

இந்நிகழ்வில் தம்பலகாமம் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர் தெ.புரபானந்தன், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.பாமினி, பெண்கள் வெளிக்கள உத்தியோகத்தர் எம்.ஏ.நஸ்ரின் டிலானி உட்பட பெண்கள் சுயதொழிலாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# அரசுக்கு ஜால்ரா அடிக்கும் மயில் எம்.பிக்களினால் சஜித்தின் ஆதரவையும் மக்கள் காங்கிரஸ் இழந்தது

## கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஷிபான் தெரிவிப்பு

(நூருல் ஹுதா உமர்)

எரிபொருள் விலையேற்றத்தின்போது நம்பிக்கையில்லாப் பிரேரணையை தோற்கடித்து உதய கம்மன்பிலவை காப்பாற்றுவதற்கு அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் எம்.பிக்கள் காட்டிய முன்னெடுப்பானது, இன்று தலைவர் ரிஷாட் பதியுதீனை அவர் சார்ந்திருந்த ஐக்கிய மக்கள் சக்தியும் அதன் தலைவர் சஜித் பிரேமதாஸவும் கைவிடும் நிலையை தோற்றியுள்ளது - என அகில இலங்கை மக்கள் காங்கிரசின் கல்முனை மாநகர சபை உறுப்பினர் பீ.எம்.ஷிபான் தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர் கூறியதாவது,

உதய கம்மன்பிலவை காப்பாற்ற அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் எம்.பிக்களான இவர்கள் எடுத்த முன்னெடுப்பை நாடாளு மன்றில் தமக்கிருந்த சிறப்புரிமையை முன்வைத்து பேசி தலைவர் ரிஷாட் பதியுதீனையும் அவரது குடும்பத்தையும் காப்பாற்றுவதில் காட்டவில்லை. கடந்த நல்லாட்சி அரசில் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும் பிரதியமைச்சர்களாகவும் இருந்த அமீர் அலி, அப்துல்லா மஹ்ரூபின்




வெற்றிடங்கள் தற்போதுதான் கட்சிப் போராளிகளினால் உணரப்படுகிறது.

கடந்த நாடாளுமன்றத்தில் ஈஸ்டர் தாக்குதலை மையமாக வைத்து முஸ்லிம்களையும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீனையும் விஷமிகள் குறிவைத்து தாக்கிய போதெல்லாம் பக்கபலமாகவும், எந்தவிதமான ஐயப்பாடுகளுமின்றி தலைவருக்குத் துணையாகவும் இணையாகவும் நின்று போராடியவர்கள் முன்னாள் எம்.பிக்களான அமீர் அலியும், அப்துல்லா மஹ்ரூபுமாவர்.

இன்றைய நாட்களில் ஐக்கிய மக்கள் சக்தியின் முஜிபுர் ரஹ்மானுக்கு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் மீது இருக்கின்ற அக்கறையைக்கூட அவரின் நாமத்தை மையமாக வைத்து அரசியல்செய்த எம்.பிக்களான இவர்களிடம் காணமுடியாமலுள்ளது. ஆகவேதான் போராட வக்கற்ற புழுக்களை நாடாளுமன்றம் அனுப்பி அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சோதனையை அனுபவித்துக் கொண்டிருக்கின்றது. அறிவார்ந்து அரசியல் செய்கின்றோம் என மக்களைக் குழப்பி எதிர்க்கட்சியிலிருந்து ஆளும் கட்சியிடம் சலுகைகளுக்கும், தங்களுடைய பணப் பைகளை நிரப்பிக்கொள்வதற்காக வீதி கொந்தராத்துகளையும், ஜப்பான் விஸாக்களையும், பிரதி, இராஜாங்க அமைச்சுப் பதவிகளையும் கனவு காணும் இவர்கள், இன்று தலைவர் ரிஷாட் பதியுதீன் தொடர்பில் கரிசனை இல்லாமல் ஐக்கிய மக்கள் சக்தியில் தோப்பாக இருந்த தலைவரை தனிமையில் ஆக்கிவிட்டனர். இது தொடர்பில் கல்முனை மாநகர சபை உறுப்பினர் என்ற ரீதியில் வெட்கமடைகின்றேன் - என்றார்.

# பேண்தகு விவசாய அபிவிருத்தி தொடர்பான திருகோணமலை மாவட்ட கலந்துரையாடல்

## விவசாய அமைச்சர் மஹிந்தானந்த தலைமையில்




(கந்தளாய்)

சுபீட்சத்தின் நோக்கு கொள்கை பிரகடனத்திற் கமைய பேண்தகு விவசாய அபிவிருத்தி தொடர்பான திருகோணமலை மாவட்ட கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் மாவட்ட செயலகத்தில் விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தலைமையில் நடைபெற்றது.

அடுத்து பெரும்போகத்துக்குத் தேவையான சேதனப் பசளைகள் விவசாயிகளுக்கு உரிய காலத்தில் வழங்கப்படும் என்றும் இது தொடர்பில் விவசாயிகள் பீதியடைய வேண்டிய அவசியம் கிடையாது என்றும் இதன்போது அமைச்சர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது,

இரசாயன வளமாக்கி இறக்குமதிக்காக பாரிய நிதி வெளிநாடுகளுக்கு வருடாந்தம் செல்லுகின்றது. இதன் மூலம் நாடு பாரிய பின்னடைவை நோக்குகின்றது. எனவே, இந்நிலைமையை மாற்றியமைத்து எமது நாட்டுக்கு தேவையான சேதனப் பசளைகளை நாட்டிலேயே உற்பத்திசெய்து அதனை விவசாயிகளுக்கு வழங்குவதன்மூலம் சுற்றாடல்நேயமிக்க விவசாய செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும். இன்று நாட்டில் அதிகமான பிரதேசங்களில் இரசாயன வளமாக்கி பாவனை காரணமாக மக்கள் சிறுநீரக நோய் உட்பட பல்வேறு வகையான நோய்களுக்கு உட்பட்டு சிரமப்படுகின்றனர்.

எனவே, எதிர்கால பரம்பரையினரையாவது சிறுநீரக நோய் உட்பட பல்வேறு வகையான நோய்களிலிருந்து பாதுகாத்து ஆரோக்கியமான சமூகமொன்றை கட்டியெழுப்பும் நோக்கில் சேதன முறையிலான விவசாயம் தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. சேதன முறையைப் பயன்படுத்தி பயிர்ச்செய்கை மேற்கொள்கின்ற சந்தர்ப்பத்தில் ஹெக்டேயர் ஒன்றிற்கு 12 ஆயிரத்து 500 ரூபா அரசாங்கத்தினால் சேதனப் பசளை உற்பத்திக்கு மானியமாக வழங்கப்பட வுள்ளது.

சேதனப் பசளையை பயன்படுத்தி விவசாயம் மேற்கொள்கின்ற சந்தர்ப்பத்தில் விவசாயிகளுக்கு உற்பத்தி அல்லது வருமான இழப்பு ஏற்படும் சந்தர்ப்பத்தில் அதனையும் வழங்குவதற்கு அரசாங்கம் தயாராக இருக்கின்றது. தூரநோக்கு அடிப்படையில் ஜனாதிபதியால் இந்தத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது. மக்கள் இதற்கு அனுமதி வழங்கியுள்ளார்கள். அதனையே நாம் செயற்படுத்துகின்றோம்.

அத்துடன், திருகோணமலை மாவட்டத்திலுள்ள கமநல அபிவிருத்தித் திணைக்கள அலுவலகங்கள் விரைவில் புனர்நிர்மாணம் செய்யப்படும். எதிர்வரும் காலங்களில் கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்கு தேவையான இயந்திர சாதனங்களை வழங்கவுள்ளோம். இச்செயற்பாடு விவசாயிகளுக்கு சாதகமானதாக அமையும்.

இன்னும் இரண்டு மாதங்களில் விவசாயம் தொடர்பான தேசிய கொள்கை வெளியிடப்பட வுள்ளது. விவசாயம் தொடர்பான தகவல்கள் ஒன்றுசேர்க்கப்பட்ட ஒரு தகவல் கட்டமைப்பு ஏற்படுத்தப்படும். இதன் மூலமாக நாட்டின் எந்தவொரு பிரதேசத்தில் இருக்கக்கூடிய விவசாயியும் தங்களுடைய பிரதேசத்திற்கு காலத்துக்கு ஏற்றாற்போல் என்ன வகையான பயிர்களை மேற்கொள்ள முடியும் என்பது தொடர்பான தகவல்களை உடனுக்குடன் பெறக்கூடிய வகையில் அந்த கட்டமைப்பு ஏதுவாக அமையும்.

திருகோணமலை மாவட்டத்தில் விவசாயத் துறையுடன் தொடர்புடைய வெற்றிடங்களை விரைவில் நிரப்ப தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். குறிப்பாக, திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு இதன்போது முன்னுரிமை வழங்கும் செயற்பாடு ஏற்படுத்தப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

மாவட்டத்தில் தூர்ந்துபோயுள்ள குளங்களை புனர்நிர்மாணம் செய்தல் மற்றும் வடிகால் அமைப்புகள் புனர்நிர்மாணம் செய்தல் உட்பட பல்வேறு வகையான விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டன. அத்துடன், மாவட்ட விவசாய சங்க பிரதிநிதிகள் இதன்போது அமைச்சரிடம் பல்வேறு பிரச்சினைகளை முன்வைத்ததுடன், குறிப்பாக குறித்த பிரச்சினைகளுக்கு உடனுக்குடன் தீர்வுகளை வழங்கி அவசியமான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துமாறு உரிய அதிகாரிகளை அமைச்சர் இதன்போது அறிவுறுத்தியமை விசேட அம்சமாகும்.

திருகோணமலை மாவட்டம் பல்வேறு வகையான இயற்கை வளங்களைக்கொண்ட மாவட்டமாக காணப்படுகின்றது. தற்போதைய அரசாங்கம் மக்களுடைய சாதகமான பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றை நிவர்த்திசெய்ய முற்படும். எனவே, போலியான பிரசாரங்களை நம்பி விவசாயிகள் அதற்குள் அகப்படவேண்டாம்.

ஜனாதிபதி இந்த நாட்டு மக்களின் நலன்கருதி ஆக்கபூர்வமான செயற்பாடுகளை மேற்கொண்டு வருவதாகவும் அனைவரும் இந்த செயற்றிட்டத்திற்கு தங்களுடைய ஒத்துழைப்புகளை வழங்குமாறும் இதன்போது அமைச்சர் வேண்டிக்கொண்டார்.

திருகோணமலை மாவட்ட விவசாய அபிவிருத்திக்கு இவ்வருடம் அரசாங்கத்தினால் 500 மில்லியனுக்கு மேற்பட்ட ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்மூலமாக பாலிய விவசாய அபிவிருத்தி செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விவசாயி களின் செயற்பாடுகளை பலப்படுத்தி தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு அவசியமான செயற்பாடுகள் தற்போது அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

எமது நாட்டுக்குத் தேவையான சேதனப் பசளைகளை உற்பத்திசெய்து எமது நாட்டில் உற்பத்திசெய்யக்கூடிய அனைத்து நிலப்பகுதிகளிலும் பயிர்ச்செய்கையை மேற்கொண்டு உள்நாட்டு உற்பத்தியை அதிகரித்து வெளிநாட்டுச் செலாவணியை அதிகரிப்பது இதனுடைய மூல நோக்கமாகும். மக்களை ஆரோக்கியமான சமூகமாக மாற்றியமைக்கின்ற ஒரு செயற்பாடாக இந்தத் திட்டம் அமையும் என்றும் இதன்போது அமைச்சர் தெரிவித்தார்.

தெரிவுசெய்யப்பட்ட சில விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்கள், மரமுந்திரிகை மற்றும் மாமரக் கன்றுகளும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது

இந்தக் கலந்துரையாடலில் இராஜாங்க அமைச்சர் சசீந்திர ராஜபக்ஷ, திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமாகிய கபில நுவன் அத்துக்கோரல, பிரதேச அரசியல் தலைமைகள், கிழக்கு மாகாண பிரதம செயலாளர் துசித்த பீ வணிகசிங்க, திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோராள, அமைச்சின் அதிகாரிகள், திணைக்கள தலைவர்கள், சக உத்தியோகத்தர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள் பலரும் கலந்துகொண்டனர்.

# போதைப்பொருளுடன் இளைஞன் கல்முனையில் கைது



(பெரியநீலாவணை)

சாய்ந்தமருது உஸ்மான் வீதியைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் மாலை ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

கல்முனை பொலிஸ் விசேட குற்றத்தடுப்புப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைவாக திடீரென மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது குறித்த இளைஞன் கைதுசெய்யப்பட்டுள்ளார். சூட்சுமமான முறையில் மறைத்துவைக்கப்பட்டிருந்த ஹெரோயின் போதைப்பொருள் இளைஞனிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளுக்காக குறித்த இளைஞர் கல்முனை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

கல்முனை பொலிஸ் விசேட குற்றத்தடுப்புப் பிரிவினரும் மருதமுனை விசேட அதிரடிப்படையினரும் ஒன்றிணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே இந்த இளைஞன் கைதுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாலர் பாடசாலைகளுக்கு சுகாதார உபகரணங்கள்

## - கிண்ணியாவில் வழங்கிவைப்பு

(அப்துல்சலாம் யாசீம்)

கிழக்கு மாகாண முன்பள்ளி பாடசாலை ஆசிரியர் சங்கத்தினூடாக ஜேர்மன் தூதுரக நிதி உதவியுடன் கிண்ணியா வலயக்கல்விப் பணிமனைக்குட்பட்ட 53 முன்பள்ளி பாடசாலைகளுக்கு நேற்றுமுன்தினம் மாலை கொரோனா நோய்த் தொற்று பாதுகாப்பு உபகரணங்கள் கிண்ணியா அப்துல் மஜீத் வித்தியாலயத்தில் வைத்து வழங்கப்பட்டது

இந்நிகழ்வுக்கு பிதம விருந்தினராக கிண்ணியா வலயக்கல்வி முன்பள்ளி உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம்.என்.எம்.சமீம், கிழக்கு மாகாண முன்பள்ளி வெளிக்கள உத்தியோகத்தர் நவாஸ்தீன், கிழக்கு மாகாண முன்பள்ளி ஆசிரியர் சங்கத்தின் தலைவி சாஸியா மற்றும் கிண்ணியா வலய முன்பள்ளி ஆசிரியர் சங்கத் தலைவி ஆகியோர் கலந்துகொண்டனர்

முன்பள்ளி பாடசாலைகளுக்கு உடல் வெப்பநிலை அளக்கும் உபகரணம், கைகழுவும் பாத்திரம், கிருமித்தொற்று நீக்கி, முகக்கவசம் மற்றும் சவர்க்காரம் போன்ற பொருட்கள் வழங்கப்பட்டன.

அடுத்த மாதம் இறுதியில் பாடசாலை களை ஆரம்பிப்பதற்கான சாத்தியம் காணப்படுவதால் முன்பள்ளி மாணவர்கள் பாடசாலைகளுக்கு வரும்போது சுகாதார நடைமுறைகளை பின்பற்றி கொரோனா வைரஸ் தொற்று பரவாமல் பாதுகாப்பதற்காக இந்தப் பொருட்கள்



கிழக்கு மாகாண முன்பள்ளி ஆசிரியர் சங்கத்தினூடாக ஜேர்மன் தூதரக நிதி உதவியுடன் வழங்கப்பட்டன.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# சிறுபோக நெல் அறுவடை அம்பாறையில் ஆரம்பம்



(பாரூக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டத்தில் சிறுபோக நெல் அறுவடை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இம்முறை அம்பாறை மாவட்டத்தில் சுமார் 80 ஆயிரம் ஹெக்டேயர் விவசாய நிலப்பரப்பில் சிறுபோக வேளாண்மை மேற்கொள்ளப்பட்டிருந்தது. நாவிதன்வெளி, அக்கரைப்பற்று, ஒலுவில், நிந்தவூர், அட்டாளைச்சேனை, சம்மாந்துறை போன்ற பிரதேசங்களில் தற்போது அறுவடை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன .

தற்போது அம்பாறை மாவட்டத்தில் உலர்ந்த நிலையில் 60 கிலோ நிறைகொண்ட ஒரு மூடை நெல் 3400 ரூபா தொடக்கம் 3800 ரூபா வரைக்கும் விற்பனைசெய்யப்பட்டு வருகின்றது.. அறுவடை செய்த ஈரலிப்பான நெல் 3000 ரூபா தொடக்கம் தொடக்கம் 3400 ரூபா வரைக்கும் விற்பனைசெய்யப்பட்டு வருகின்றது.

கொரோனா தொற்று நோயின் அச்சுறுத்தலுக்கு



மத்தியிலும் விவசாயிகள் வேளாண்மைச் செய்கையில் ஈடுபடுவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் அரசாங்கம் மேற்கொண்டிருந்தது . இதனால் தற்போது விவசாயத்தில் கூடுதலான அறுவடையை மேற்கொள்ளக்கூடியதாக இருந்தது என விவசாயிகள் தெரிவித்தனர்.

# நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐவரின் பங்குபற்றுதலுடன் மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்





**(மண்முனை)**

மட்டக்களப்பு மாவட்டத்திற்கான ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் மாவட்டத்தின் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்களின் பங்குபற்றுதலுடன் நேற்று வியாழக்கிழமை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

மாவட்ட செயலாளரும், அரசாங்க அதிபருமாகிய கே.கருணாகரனின் ஏற்பாட்டில், நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத்தலைவருமான சிவனேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் இக்கூட்டம் இடம்பெற்றது.

இதன்போது கடந்த ஆண்டில் மாவட்டத்தில் மெற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் , இவ்வாண்டு நடைமுறைப்படுத்துவதற்காக முன்மொழியப்பட்டுள்ள திட்டங்களுக்கான அனுமதியினை பெற்றுக்கொள்வது தொடர்பாகவும் ஆராயப்பட்டன.

மேலும், இம்மாவட்டத்தின் பொருளாதாரம், கல்வி, சுகாதாரம், சமுர்த்தி, சுற்றாடல் உட்பட அனைத்து திணைக்களங்கள் சார் விடயங்களும் ஆராயப்பட்டதுடன், அவற்றில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

இவற்றில் கிழக்கு மாகாண சபையின் ஒதுக்கீட்டிலான அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான முன்னேற்றங்களும், அரச சார்பற்ற நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்கள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டது.

இதுதவிர மாவட்டத்தின் விவசாயிகள் எதிர் கொள்ளும் நீர்ப் பிரச்சினை தொடர்பாகவும், குளங்கள் தொடர்பான அபிவிருத்தி தொடர்பாகவும், காட்டு யானைகளின் தாக்கத்திலிருந்து விவசாய நிலங்களைப் பாதுகாக்க யானை வேலி அமைப்பது தொடர்பாகவும் இதன்போது ஆராயப்பட்டது.

இக்கூட்டத்தில் பின்தங்கிய கிராமிய அபிவிருத்தி மற்றும் மனைசார் கால்நடை வளர்ப்பு, சிறு பொருளாதாரப் பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான நஸீர் அஹமட், கோவிந்தன் கருணாகரம், இரா.சாணக்கியன், மேலதிக அரசாங்க அதிபர் சுதர்சினி ஸ்ரீகாந்த், காணிப்பிரிவிற்கான மேலதிக அரசாங்க அதிபர் நவரூபரஞ்சனி முகுந்தன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் சசிகலா புண்ணியமூர்த்தி, மட்டக்களப்பு மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் டினேஸ் கருணாநாயக்க, இராணுவ தரப்பு பிரதானி, கிழக்கு மாகாண பிரதி பிரதம செயலாளர் (திட்டமிடல்), உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள் மற்றும் ஏனைய திணைக்களங்களின் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# சஹ்ரானின் சகோதரி உட்பட 62 பேருக்கு எதிர்வரும் 5 ஆம் திகதி வரை விளக்கமறியல்

**(கனகராசா சரவணன்)**

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் தொடர்பாக காத்தான்குடி பிரதேசத்தில் கைதுசெய்யப்பட்ட சஹ்ரானின் சகோதரி, சியோன் தேவாலய தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் உட்பட வெவ்வேறு 4 வழக்குகளை கொண்ட 62 பேரையும் எதிர்வரும் 05 திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு காணொளி மூலம் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.சி.எம்.றிஸ்வான் நேற்று வியாழக்கிழமை (29) உத்தரவிட்டார்.

கடந்த 21.4.2019 உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம் பெற்ற தாக்குதலின் பின்னர் சஹ்ரான் குழுவோடு தொடர்புடையவர்கள் என்றும், இவர்கள் ஹம்பாந்தோட்டை மற்றும் நுவரெலியா போன்ற இடங்களுக்கு பயிற்சிக்காக சென்றார்கள் என்ற சந்தேகத்தின் பேரிலும், காத்தான்குடியைச் சேர்ந்த 63 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்களில் 5 பேர் பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையிலும், அவர்களில் இருவர் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்ட நிலையிலும், 56 பேர் தொடர்ந்து விளக்கமறியல் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த 56 பேருடன் குண்டுத்தாக்குதல் தொடர்பாக வெவ்வேறு 4 வழக்கு இலக்கங்களை கொண்ட சஹ்ரானின் சகோதரி மற்றும் அவரின் கணவர், சியோன் தேவாலய தற்கொலை குண்டு தாக்குதலை மேற்கொண்ட ஆசாத் என்பவரின் தாயார், சீயோன் தேவாலய தற்கொலை குண்டுதாரிக்கு பிரயாணம் செய்ய பஸ் ஆசனப் பதிவு செய்த சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்ட 6 பேர் உட்பட 62 பேரும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் குறித்த வெவ்வேறு 4 வழக்கு இலக்கங்களை கொண்ட 62 பேரின் வழக்குகள் நேற்று வியாழக்கிழமை (29) மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது பிணையில் விடுவிக்கப்பட்ட 3 பேரும் நீதிமன்றத்தில் ஆஜராகிய நிலையில் ஏனைய 62 பேரும் வெவ்வேறு மாவட்டங்களிலுள்ள சிறைகளில் வைக்கப்பட்டுள்ளதுடன், நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் காரணமாக அழைத்து வரமுடியாத காரணத்தினால் காணொளி மூலம் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.சி.எம். றிஸ்வான் 62 பேரையும் எதிர்வரும் 5 திகதிவரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்..

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# சம்மாந்துறையிலும் தடுப்பூசி பணிகள் நேற்று ஆரம்பம்

**(சம்மாந்துறை நாஸீம்)**

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை பிரிவிலுள்ள 13 சுகாதார வைத்தியப் பிரிவுகளில் இரண்டாவது தடவையாக கிடைக்கப் பெற்ற தடுப்பூசிகள் செலுத்தும் நடவடிக்கை நேற்று (29) முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை பணிப்பாளர் வைத்தியர் ஜீ.சுகுணனின் வழிகாட்டலில், சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எஸ்.ஐ.எம்.கபீர் தலைமையில், சம்மாந்துறை சுகாதார வைத்தியப் பிரிவுகளில் தடுப்பூசிகள் செலுத்தும் நடவடிக்கை நேற்று முதல் ஒகஸ்ட் 02ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.



சம்மாந்துறை அல்-மர்ஜான் மகளிர் பாடசாலை, சம்மாந்துறை அல் - முனீர் பாடசாலை, சம்மாந்துறை அப்துல் மஜீட் மண்டபம், சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம் என சம்மாந்துறை சுகாதார பிரிவில் 04 இடங்களில் கொரோனா தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், பொதுமக்கள் ஆர்வத்துடன் வருகை தந்து தடுப்பூசியினை பெற்றுக் கொண்டனர்.

தடுப்பூசி செலுத்தும் நிலையங்கள் கிராம சேவகர் ரீதியாகப் பிரிக்கப்பட்டு காலம், நிலையம் என்பன குறிப்பிடப்பட்ட அட்டவணை ஒன்றினை சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# போதைப்பொருள் வியாபாரத்தை ஒழிக்கக்கோரி திரண்ட மக்கள்

## பிறைந்துறைச்சேனையில் அதிகாரிகளிடம் கோரிக்கை

**(மீராவோடை)**

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிறைந்துறைச்சேனை பகுதியில் போதைப்பொருள் வியாபாரம் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.




குறித்த பகுதியில் அதிகரித்து வரும் போதைப்பொருள் விற்பனை மற்றும் பாவனையை கட்டுப்படுத்தும் நோக்கில் நேற்று (29) பிறைந்துறைச்சேனை முகைதீன் தைக்கா பள்ளிவாசலில் விசேட கூட்டமொன்று இடம்பெற்றது. அதில் கலந்துகொண்ட மக்கள் போதைப்பொருள் விற்பனையை இல்லாமல் செய்ய அதிகாரிகள் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்து கிளந்தெழுந்தனர்.

பிறைந்துறைச்சேனை பகுதியில் போதைப்பொருள் விற்பனை நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டு செல்கின்றது. போதை மாத்திரை விற்பனை செய்தவர்கள் ஐஸ் போதைப்பொருளும், கஞ்சா விற்பனை செய்தோர் கேரளா கஞ்சாவும், ஹெரோயினும் விற்பனை செய்து வருகின்றனர். இவ்வாறு அவர்களின் தொழில் ஒவ்வொரு நாளும் அபிவிருத்தியடைந்தே செல்கின்றது என்று அங்கு வந்த மக்கள் தங்களுடைய ஆதங்கங்களை அதிகாரிகள் முன் தெரிவித்தனர்.

இவ்வாறு போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வரும் நபர்களை சமூகத்திலிருந்து ஒதுக்கி வைக்க வேண்டும் என்றும், அவர்களுக்கு அரசாங்கம் மற்றும் நிறுவனங்கள் வழங்கும் உதவிகளை நிறுத்த வேண்டும் என்றும், கூட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

குறித்த பகுதியில் அதிகரித்து வரும் போதைப்பொருள் வியாபாரத்தை இல்லாதொழிக்க நாங்கள் முன்வருகிறோம். அதற்கு பொலிஸாரும், அதிகாரிகளும் எங்களுக்கு ஒத்துழைப்புகளை தாருங்கள் என்று ஆண்களும், பெண்களும் குறித்த கூட்டத்தில் கிளர்ந்தெழுந்தனர்.

இக்கூட்டத்தில் வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொலிஸ் அதிகாரி, கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.ரீ.எம்.நஜீப்கான், வாழைச்சேனை மத்தி பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எச்.எம்.எம்.றுவைத், கல்குடா அல்கிம்மா சமூக சேவைகள் நிறுவனத்தின் பணிப்பாளர் எம்.எம்.ஹாரூன் சஹ்வி, கிராம உத்தியோகத்தர் எம்.அமானுல்லாஹ், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.இர்பான் மற்றும் கிராம அபிவிருத்தி சங்கம் மற்றும் பிரதேச பள்ளிவாசல்கள் உறுப்பினர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

# தரமுயர்ந்த பாடசாலைகளின் கடிதங்கள் சந்திரகாந்தன் எம்.பி.யால் வழங்கிவைப்பு

**(மட்டக்களப்பு நிருபர்)**

சுபீட்சத்தின் நோக்கு தேசிய வேலைத் திட்டத்திற்கு அமைய, நாடு பூராகவும் பல பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தும் வேலைத்திட்டத்திற்கமைய மட்டக்களப்பு மாவட்டத்திலும் பல பாடசாலைகள் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற




உறுப்பினரும், மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தனின் சிபாரிசிற்கு அமைய தரமுயர்த்தப்பட்டுள்ளன.

அவ்வாறு தரமுயர்த்தப்பட்ட பாடசாலைகளுக்கான உத்தியோகபூர்வ கடிதங்கள் கட்டங்கட்டமாக வழங்கிவைக்கப்படுகின்றன.

அதனடிப்படையில் மட்/ மகாஜனக்கல்லூரி, மட்/ மெதடிஸ்த மத்திய கல்லூரி, மட்/ இந்துக் கல்லூரி போன்ற பாடசாலைகளுக்கும், அதேபோன்று மட்/ முனைக்காடு விவேகானந்தா மகா வித்தியாலயம், மட்/ துறைநீலாவணை மகா வித்தியாலயம், மட்/ கதிரவெளி விக்னேஸ்வரா வித்தியாலயம் போன்ற பாடசாலைகளுக்கும், தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தப்பட்டமைக்கான உத்தியோகபூர்வ கடிதங்களையும் வழங்கிவைத்துள்ளார். இதன்போது அந்தந்த பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை நிர்வாகம் போன்றோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# மட்டு. மாவட்ட மூன்று தொகுதிகளில் பாரிய விளையாட்டு மைதானங்கள்

## சந்திரகாந்தன் எம்.பி. நடவடிக்கை

**(மட்டக்களப்பு)**

மட்டக்களப்பு மாவட்டத்தின் மூன்று தொகுதிகளிலும் 400 மீற்றர் சுற்றுவட்ட ஓட்டப் பாதையினைக் கொண்ட பாரிய விளையாட்டு மைதானங்கள் அமைக்கப்படவுள்ளன.

மைதானங்களைப் புனரமைக்கும் தேசிய வேலைத் திட்டத்திற்கு அமைவாக கல்குடா, மட்டக்களப்பு, பட்டிருப்பு போன்ற தேர்தல் தொகுதிகளில் 400 மீற்றர் ஓட்டப் பாதை மற்றும் வலைப்பந்து, கால்பந்து, மென்பந்து போன்ற பல விளையாட்டுகளை விளையாடக் கூடிய பாரிய



விளையாட்டு மைதானங்கள் அமைப்பதற்கான நடவடிக்கைகளை மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன், இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் ஊடாக முன்னெடுத்துள்ளார்.

இதன் முதற்கட்டமாக அமைக்கப்படும் ஒவ்வொரு விளையாட்டு மைதானத்துக்குமாக 50 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அதனடிப்படையில் மட்டக்களப்பு தொகுதிக்கான விளையாட்டு மைதானத்தினை அமைப்பதற்கான இடத்தினை உறுதிப்படுத்தும் முகமாக நேற்றைய தினம் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் நேரடி களவிஜயத்தினை மேற்கொண்டிருந்தார். அந்த வகையில் ஒருசில இடங்களைப் பார்வையிட்டு கல்லடி-வேலூர் பகுதியில் இவ்விளையாட்டு மைதானத்தினை அமைப்பதற்குத் தீமானித்துள்ளார்.

இதன்போது மட்டக்களப்பு மாநகர ஆணையாளர் தயாபரன், பிரதேச செயலாளர் வாசுதேவன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் சுதர்சன் மற்றும் துறைசார் அதிகாரிகள், இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் எனப்பலரும் பிரசன்னமாகியிருந்தனர்.

# அக்போகம குளக்கட்டின் கட்டுமானம் ஆரம்பம்

**(கந்தளாய்)**

நீர்ப்பாசன செழிப்பு வேலைத்திட்டத்தின் கீழ் கந்தளாய் அக்போகம குளக்கட்டின் கட்டுமானப் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

கந்தளாய் குளக்கட்டினை ஸ்திரப்



படுத்தியும், அதன் பாதுகாப்பினை மையப் படுத்தியும் குறித்த செயற்பாடுகள் முன்னெடுக் கப்பட்டு வருகின்றன.

இதன்போது சுற்றுலாப் பூங்கா, ஓய்வறைகள் மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களுடன் 300 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

இவ்வேலைப்பாடுகளை கண்காணிப்பதற்காக திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவருமான கபில அத்துக்கோரள நேற்று முன்தினம் அப்பகுதிக்குச் சென்று பார்வையிட்டதோடு, குறை நிறைகளையும் அதிகாரிகளிடம் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது கந்தளாய் பிரதேச சபையின் உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

# 30 வயதுக்கு மேற்பட்டோருக்கு தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டம்

## திருமலை மாவட்டத்தில் முன்னெடுப்பு




**(கந்தளாய்)**

திருகோணமலை மாவட்டத்தில் முப்பது வயதுக்கு மேற்பட்டோர் அனைவருக்கும் தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

திருகோணமலை மாவட்டத்தில் ஏற்கனவே இருபதாயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு சைனோபார்ம் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ள நிலையில், அரசினால் திருகோணமலை மாவட்ட மக்களுக்கு வழங்கவென மேலும் தடுப்பூசிகள் வழங்கும் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மக்கள் ஆர்வத்துடன் தடுப்பூசிகளை செலுத்தி வருகின்றனர்.

இம்மாவட்டத்தின் கந்தளாய், கிண்ணியா, மூதூர் மற்றும் திருகோணமலை போன்ற ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பிரிவிலும், தெரிவுசெய்யப்பட்ட இடங்களில் 30 வயதுக்கும் மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

# பஸ் - கெப் மோதி கோர விபத்து

## இருவர் உயிரிழப்பு

(அனுராதபுரம்)

கொழும்பிலிருந்து பூனாணி தனிமைப்படுத்தல் முகாமுக்கு கொரோனா நோயாளர்களை அழைத்துச் சென்ற இராணுவ பஸ் ஒன்றும், சுத்திகரிப்பு நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தமான கெப் வண்டியொன்றும் நேருக்கு நேர் மோதியதால் இடம்பெற்ற கோர விபத்தில் கெப் வண்டியில் பயணித்த இரு பெண்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக வெலிகந்த பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்றுக் காலை 6.10 மணியளவில் மன்னம்பிட்டிய 88ஆவது மைல் கல் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதேவேளை, இந்த விபத்தில் பலத்த காயங்களுக்குள்ளான மேலும் 08 பேர் சிகிச்சைகளுக்காக பொலன்னறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் ஐந்து பெண்களும், மூன்று ஆண்களும் உள்ளடங்குகின்றனர். 41 மற்றும் 43 வயதுடைய, பொலன்னறுவை வைத்திய சாலையில் சுத்திகரிப்புப் பணிகளில் ஈடுபடும் இரு பெண் ஊழியர்களே இச்சம்பவத்தில் உயிரிழந் துள்ளார்கள்.

விபத்து சம்பவத்துடன் தொடர்புடைய இராணுவ பஸ் வண்டியின் சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெலிகந்த பொலிஸ் நிலைய போக்குவரத்து பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஹேரத் தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# தேர்தல் மறுசீரமைப்பு நாடாளுமன்ற விசேட குழுவுக்கு சபையில் பிரதிநிதித்துவம் இல்லாத 6 கட்சிகள் பரிந்துரை



தேர்தல்களின் போது பெண்களின் பிரதிநிதித்துவத்தை உயர்த்துவதற்கு சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தேர்தல் சட்ட மறுசீரமைப்பு தொடர்பான நாடாளுமன்ற விசேட குழுவில் நேற்று (28) தெரிவித்தார்.

விருப்பு வாக்குமுறையுடன் பெண்கள் போட்டியிடுவது சிரமமானது என்றும், குடும்பப் பின்னணியினூடாகவே பெண்கள் பெரும்பாலும் அரசியலுக்குள் நுழைகின்றார்கள் என்றும், அவ்வாறு இல்லாவிட்டால் நாடாளுமன்றத்துக்குள் நுழைவது சிரமமானது என்றும் அவர் குழுவின் கவனத்துக்குக் கொண்டுவந்தார். வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரும், சபை முதல்வருமான தினேஷ் குணவர்த்தனவின் தலைமையில் தேர்தல் சட்டங்களை மறுசீரமைப்பது தொடர்பான நாடாளுமன்ற விசேட குழு நாடாளுமன்றத்தில் கூடியது.

அடுத்த மாதம் நான்கு நாட்கள் இக்குழு கூடவிருப்பதாக அதன் செயலாளரும், நாடாளுமன்ற பணியாட்தொகுதியின் பிரதானியும், பிரதி செயலாளர் நாயகமுமான குஷானீ ரோஹணதீர குறிப்பிட்டார். முழுமையான தொகுதிவாரி முறையின் கீழ் தேர்தல் நடத்தப்பட்டால் மிகப்பெரிய ஏற்றத்தாழ்வு எழுகிறது என்று அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் குழுவில் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் என்பவற்றை ஒரே நாளில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார இங்கு தெரிவித்தார். அதேநேரம், பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தாத 06 அரசியல் கட்சிகள் தேர்தல் சட்ட மறுசீரமைப்புத் தொடர்பான குழு முன்னிலையில் நேற்று தமது நிலைப்பாடுகளைத் தெரிவித்தன.

இங்கு தமது நிலைப்பாட்டை முன்வைத்த இலங்கை லிபரல் கட்சியின் செயலாளர் கமல் நிசங்க குறிப்பிடுகையில், நியூசிலாந்தில் காணப்படும் தேர்தல் முறையைப் பயன்படுத்துவது பொருத்தமானது என்றும் கூறினார். தமது கட்சி மாவட்ட விகிதாசார முறைக்கு எதிர்ப்பு என்றும், இருந்தபோதிலும் தேசியப்பட்டியல் முறையை அவ்வாறே பேணப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்துக்கு 225 உறுப்பினர்களைத் தெரிவுசெய்யும்போது 160 பேரை தேர்தலின் மூலமும், 65 பேர் தேசிய பட்டியலின் ஊடாக நியமிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார். அகில இலங்கை தமிழர் மாகாண சபையின் தலைவர் கே.விக்னேஸ்வரன் இக்குழு முன்னிலையில் தனது நிலைப்பாட்டை முன்வைக்கையில், 30 வருடங்கள் நாட்டில் நிலவிய யுத்தம் காரணமாக வெளிநாட்டுக்குச் சென்ற 1.5 மில்லியன் பேர் தமது வாக்குகளை அளிப்பதற்கு வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும், இதற்காக சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்றும் கூறினார். இது காலத்துக்குத் தேவையான விடயம் என்றும் சுட்டிக்காட்டினார்.

பெண்கள் பிரதிநிதித்துவத்தை 30 வீதமாக உயர்த்த வேண்டும் என தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி தமது நிலைப்பாட்டை குழு முன்னிலையில் தெரிவித்தது. இது நாடாளுமன்றம், மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களிலும் பேணப்பட வேண்டும் என்றும் அக்கட்சி குறிப்பிட்டது.

தற்பொழுது நடைமுறையில் உள்ள விகிதாசார முறை எந்தவித மாற்றமும் இன்றி தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும் என சமத்துவக் கட்சி நாடாளுமன்ற விசேட குழுவில் தெரிவித்தது. இந்த முறையின் கீழ் சகல இனங்களுக்கும் நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவம் செய்வதற்கான வாய்ப்பு கிடைப்பதாகவும், ஜனநாயகத்துக்கு இது மிகவும் முக்கியமானது என்றும் அக்கட்சி தெரிவித்தது. உள்ளூராட்சி மன்றங்களில் பெண்களின் பிரதிநிதித்துவம் 25 வீதமாக அதிகரிக்கப்பட வேண்டும் என்றும் சமத்துவக் கட்சி இக்குழுவின் முன் சுட்டிக்காட்டியது.

வெளிநாடுகளில் உள்ள மற்றும் இடம்பெயர்ந்துள்ள தரப்பினரின் வாக்களிக்கும் உரிமையை பாதுகாக்க வேண்டும் என்றும் அக்கட்சி தெரிவித்தது. தேர்தல்களை உரிய நேரத்தில் நடத்துவதற்கு அவசியமான சட்டம் விரைவில் தயாரிக்கப்பட வேண்டும் என ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பு தெரிவித்தது. தேர்தல்களைப் பின்போடுவது உசிதமானது அல்ல. வேட்பாளர்கள் தமது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை காலம் தாழ்த்தாது தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு வழங்குவதற்கான பொறிமுறையொன்றை உருவாக்குவதன் அவசியத்தையும் அக்கட்சி வலியுறுத்தியது.

அரசியல் கட்சிகள் கூட்டணிகளை உருவாக்குவதைத் தடுப்பதற்கான கொள்கை தயாரிக்கப்பட வேண்டும் என சிங்களதீப ஜாதிக பெரமுன, நாடாளுமன்ற விசேட குழு முன்னிலையில் தெரிவித்தது. தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் வேறு கட்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் உறுப்பினர்களின் உறுப்புரிமையை இரத்துச் செய்வதற்கான புதிய சட்டத்தை தயாரிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் அந்தக் கட்சி சுட்டிக்காட்டியது.

# சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை பணிப்பாளர் சபையின் உறுப்பினராக அஜித் ரோஹண நியமனம்



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபரும், குற்றச்செயல், போக்குவரத்து மற்றும் பொலிஸ் ஊடகப்பேச்சாளருமான சட்டத்தரணி அஜித் ரோஹண, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை பணிப்பாளர் சபையின் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அஜித் ரோஹண இந்தப் பதவிக்கு கடந்த 21 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் 3 வருடகாலத்துக்கு இந்த சபையின் உறுப்பினராக செயற்படுவார்.

அதற்கமைய, சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி அஜித் ரோஹண தற்போது வழங்கப்பட்டுள்ளதற்கு மேலதிகமாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை பணிப்பாளர் சபையின் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது.

# நீதி அமைச்சர் - நியூசிலாந்து உயர்ஸ்தானிகர் இடையில் பேச்சு



நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி மற்றும் இலங்கைக்கான நியூசிலாந்து உயர்ஸ்தானிகர் மைக்கல் எப்பல்டன் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு நேற்று நீதி அமைச்சில் இடம்பெற்றது.

இரு நாடுகளுக்கிடையிலான அடையாளம், சகோதரத்துவம் ஆகியவற்றை மேம்படுத்துவது தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது. நீதிமன்றங்களின் சுயாதீனத் தன்மை மற்றும் சட்டத்தின் ஆட்சி என்பவற்றைப் பாதுகாப்பது தொடர்பில் இலங்கை அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளை உயர்ஸ்தானிகர் வரவேற்றதுடன், இலங்கையின் நீதிமன்றக் கட்டமைப்பிலுள்ள உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வது உள்ளிட்ட சட்ட மறுசீரமைப்புக்காக முன்னெடுக்கப்பட்டு வேலைத்திட்டங்கள் தொடர்பில் இதன்போது அமைச்சர் உயர்ஸ்தானிகருக்கு விளக்கமளித்தார்.

# ஜனாதிபதி ஊடக மையம் திறந்துவைப்பு



புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி ஊடக மையம் (PMC), ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்கவின் தலைமையில், நேற்று (29) திறந்து வைக்கப்பட்டது.

கொழும்பு – கோட்டை ஜனாதிபதி மாளிகைக்கு எதிரில் அமைந்துள்ள பழைய சார்டட் வங்கிக் கட்டடத்தின் கீழ் மாடியில், இந்த ஊடக மையம் அமையப்பெற்றுள்ளது.

“சுபீட்சத்தின் நோக்கு” கொள்கைப் பிரகடனத்தின் ஊடாக மக்களுக்கு வழங்கப்பட்ட உறுதிமொழிகளை நனவாக்கும் நோக்கத்தில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களின் முன்னேற்றங்கள் மற்றும் ஜனாதிபதியினதும், ஜனாதிபதி அலுவலகத்தினதும் தகவல்களை, சரியாகவும், வினைத்திறனாகவும் ஊடகங்கள் மற்றும் பொதுமக்களுக்கு வழங்குவதே, இந்த ஜனாதிபதி ஊடக மையத்தின் எதிர்ப்பார்ப்பாகும்.

வாராந்தம் நடத்தப்படும் ஊடக சந்திப்புகளின் போது, தெரிவுசெய்யப்பட்ட தலைப்பின் கீழ், ஜனாதிபதியிடமோ அல்லது ஜனாதிபதியின் பேச்சாளரிடமோ, நேரடியாகவோ அல்லது இணைய வழி ஊடாகவோ கேள்விகளை எழுப்புவதற்கு, ஊடகவியலாளர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படவுள்ளது.

40 ஊடகவியலாளர்கள் ஒரே தடவையில் அமரும் வகையிலும், தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையிலான அனைத்து அம்சங்களுடனும், இந்த ஊடக மையம் அமையப்பெற்றுள்ளது. இந்நிகழ்வில் ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் கிங்ஸ்லி ரத்நாயக்கவும் கலந்துகொண்டார்.

# ரிஷாட் வீட்டில் பணிபுரிந்த மேலும் 5 பெண்களிடம் வாக்குமூலம் பதிவு

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனின் வீட்டில் கடந்த 2010 ஆம் ஆண்டு முதல் பணியாற்றிய மேலும் 5 பெண்களிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளரும், சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபருமாக அஜித் ரோஹண தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனின் வீட்டில் பணிக்கமர்த்தப்பட்டிருந்த நிலையில் தீக்காயங்களுக்குள்ளாகி 16 வயது சிறுமி உயிரிழந்த சம்பவம் தொடர்பில் தொடர் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. இந்நிலையில், இரண்டாவது பிரேத பரிசோதனைக்காக சிறுமியின் சடலம் இன்று (30) விசேட சட்ட வைத்தியர் நிபுணர் குழுவினால் மீண்டும் தோண்டி எடுக்கப்படவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். இதற்கு மேலதிகமாக ரிஷாட் எம்.பி.யின் வீட்டில் பணிபுரிந்த மேலும் சில பெண்கள் தொடர்பான தகவல்கள் கிடைத்திருந்தன. அதற்கமைய 2010ஆம் ஆண்டு முதல் 11 பெண்கள் பணிப்பெண்களாக கடமையாற்றியுள்ளனர். டயகம போன்ற பிரதேசங்களிலுள்ளவர்களே இவ்வாறு பணியாற்றியுள்ளனர்.

இந்த 11 பேரில் ஐவரின் வாக்குமூலம் நேற்று முன்தினம் பதிவு செய்யப்பட்டது. இந்த வாக்குமூலங்களிலுள்ள காரணங்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

# குஷ் - ஹெரோயின் போதைப்பொருட்களுடன் சந்தேகநபர்கள் இருவர் பொலிஸாரால் கைது



(ஹனபி எம்.தாஸீம்)

ஹைபிரிட் கஞ்சா வகையைச் சேர்ந்த குஷ் என்று அழைக்கப்படும் போதைப் பொருளை ஏற்றிச் சென்ற காரொன்று சுற்றிவளைக்கப்பட்டுள்ளதுடன், சந்தேகநபர்கள் இருவர் பியகம பொலிஸாரினால் நேற்று முன்தினம் (28) பியகம றக்கஹவத்த பிரதேசத்தில் அதிவேக நெடுஞ்சாலைக்கு அருகாமையில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது காரைச் செலுத்திச் சென்ற பிரதான சந்தேக நபரிடமிருந்து 150 கிராம் குஷ் எனப்படும் கஞ்சாவுடன், 5 கிராம் 200 மில்லி கிராம் எடையுள்ள ஹெரோயினும், காரில் பயணித்த சகாவிடமிருந்து 50 கிராம் குஷ் எனப்படும் கஞ்சாவும் மீட்கப்பட்டுள்ளன.

குஷ் எனப்படும் கஞ்சாவின் பெறுமதி எட்டு இலட்சம் ரூபா எனவும், ஹெரோயினின் பெறுமதி 40 ஆயிரம் ரூபா எனவும் மதிப்பிடப்பட்டுள்ளன. இரவு நேரத்தில் மோட்டார் வாகனத்தில் போதைவஸ்து கடத்தப்படுவதாக பியகம பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் தனஞ்சய ராஜபக்ஷவுக்கு கிடைத்த தகவலையடுத்தே இச்சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பிரதான சந்தேக நபர் (26) ஏக்கல பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்பதோடு, சகா (21) கொடுகொட பிரதேசத்தைச் சேர்ந்தவராவர். சந்தேக நபர்கள் இருவரும் மஹர மஜிஸ்ரேட் நீதி மன்றத்தில் ஆஜர்செய்யப்படவுள்ளனர். பியகம பொலிஸ் பொறுப்பதிகாரி ஏ.ஜே.எம்.ஆர்.சமரசிங்கவின் அறிவுறுத்தலுக்கிணங்க, குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் தனஞ்சய ராஜபக்ஷ, பொலிஸ் பரிசோதகர் மனோஜ் சம்பத், உப பொலிஸ் பரிசோதகர் டீ.எம்.எஸ்.சி.குமார, சார்ஜன்ட் பிரியந்த(45454) மற்றும் கான்ஸ்டபிள் சேனாநாயக்க(88674) ஆகியோர் இச்சுற்றிவளைப்பில் கலந்துகொண்டனர்.

# 20 மில்லியன் ரூபா பெறுமதியான ஹெரோயினுடன் ஒருவர் கைது

பாதுக்கை, மீகொட பகுதியில் நேற்று பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போது ஹெரோயின் போதைப்பொருடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

குறித்த நபரிடமிருந்து 2 கிலோ 450 கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட ஹெரோயின் போதைப்பொருள் 20 மில்லியன் ரூபா பெறுமதியுடையது என பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர். சந்தேகநபர் நாளை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ள நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.





மாணவ செயற்பாட்டாளர்களின் வகுப்புக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குமாறு வலியுறுத்தி களனி பல்கலைக்கழக மாணவர் சங்கத்தினர் நேற்று அந்த பல்கலைக்கழகத்துக்கு எதிரில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது... (படப்பிடிப்பு : சமன் அபேசிறிவர்தன)

# பிராந்திய புரிந்துணர்வு - நல்லுறவை மேம்படுத்த அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்

## மத்திய கிழக்கு, ஆசிய இராஜதந்திரிகளிடம் பெசில் தெரிவிப்பு





பிராந்தியப் புரிந்துணர்வு மற்றும் நல்லுறவை மேம்படுத்துவதற்கு இலங்கை அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கு மற்றும் ஆசிய நாடுகளைச் சேர்ந்த இராஜதந்திரிகள் பலரை சந்தித்தபோதே நிதி அமைச்சர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மற்றும் இந்நாடுகளுக்கு இடையில் நிலவி வரும் இருதரப்பு நல்லுறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான வழிமுறை மற்றும் புரிந்துணர்வுடன் செயற்படுவது குறித்து கடந்த செவ்வாய்க்கிழமை நிதியமைச்சில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

பாகிஸ்தான், பங்களாதேஷ், பிரித்தானியா, சவுதி அரேபியா, எகிப்து மற்றும் குவைத் ஆகிய நாடுகளின் தூதுவர்கள் இதில் கலந்துகொண்டனர்.

கொவிட் தொற்றுக்கு மத்தியில் 4 சதவீத பொருளாதார வளர்ச்சி வேகத்தை அடைவதற்கு இலங்கையினால் முடிந்தமை குறித்து பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் தனது பாராட்டையும் தெரிவித்துக்கொண்டுள்ளார்.

பாகிஸ்தானின் பதில் உயர்ஸ்தானிகர் தன்வீர் அஹமட் கருத்து தெரிவிக்கையில், நாட்டின் கால்நடை வளர்ப்பை கிராமிய மட்டத்தில் மேம்படுத்துவதற்கான தொழில்நுட்பத்தை வழங்குவதற்கும், அதற்கான வசதிகளைச் செய்து கொடுப்பதற்கும் பாகிஸ்தான் அரசாங்கம் செயற்படும். அதேபோன்று உலக சுகாதார அமைப்பின் வேலைத்திட்டத்தின் கீழ் இலங்கை தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளத் தேவையான ஒத்துழைப்பை வழங்குவதாக சவூதி அரேபியத் தூதுவர் இதன்போது தெரிவித்துள்ளார்.

இக்கலந்துரையாடலில் பங்களாதேஷின் உயர்ஸ்தானிகர் டரெக் எம்.டி.அரிபுல் இஸ்லாம், பாகிஸ்தானின் மேலதிக உயர்ஸ்தானிகர் டன்விர் அஹமட், சவூதி அரேபிய தூதுவர் அப்துல் நாசர் எச். ஆல் அர்தி, குவைட் தூதுவர் கலாப் பூ தாயிர் மற்றும் எகிப்து தூதுவர் ஹுசைன் எல் சஹாட்டி ஆகியோர் கலந்துகொண்டுள்ளனர்.

# கொரோனா தொற்று பரவல் வீதத்தில் திடீர் அதிகரிப்பு

## தேவையற்ற ஒன்றுகூடல்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்க நேரிடும் என்கிறார் உபுல் ரோஹண

(ஜுட் சமந்த)

தற்போது நாட்டில் கொரோனா நோயாளர்கள் பரவலடையும் வீதம் வரைவாக அதிகரித்து வருவதை அவதானிக்கக் கூடியதாக இருப்பதால் ஆர்ப்பாட்டங்கள் அல்லது தேவையின்றி பொது இடங்களில் ஒன்றுகூடும் நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க பொலிஸார் அல்லது வேறு நிறுவனங்களினூடாக தேவையான பரிந்துரைகள் கோரப்படுமாக இருந்தால் நிச்சயமாக சிறிதும் தயக்கமின்றி அதற்கான ஆலோசனைகள் வழங்கப்படுமென்று பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.



நாட்டில் தற்போதுள்ள கொரோனா சூழ்நிலை தொடர்பில் ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

சமூகத்தில் தேவையின்றி பொதுமக்கள் ஒன்றுகூடல்கள் இடம்பெறுவதை எங்களால் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. அதேபோன்று ஒருசில தொழிற்சங்கங்கள் அவற்றின் உரிமையை பாதுகாத்துக் கொள்வதற்கு வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டம் முன்னெடுப்பதையும் அவதானிக்க கூடியதாகவுள்ளது.

அரசியலமைப்புக்கமைய தொழிற்சங்க ரீதியான ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்பதற்கான உரிமை சகலருக்கும் இருக்கிறது. ஆனால், தற்போதுள்ள நிலைமையில் அவ்வாறான ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்பதற்கு உகந்த காலம் இல்லை என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

தற்போது மீண்டும் நாட்டில் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை விரைவாக பரவலடைந்து வருகின்றது. கொரோனா நோயாளர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள சகல சிகிச்சை மத்தியநிலையங்களும் நிரம்பியுள்ளதையும் அவதானிக்க கூடியதாகவுள்ளது. டெல்ட்டா தொற்று ஏற்பட்டுள்ள அநேகமானவர்களுக்கு ஒட்சிசன் தேவைப்பாடு இருக்கிறது என்று விசேட நிபுணர்கள் அறிவித்துள்ளனர். இவ்வாறானதொரு சூழ்நிலையில் தேவையின்றி பொதுமக்கள் ஒன்று கூடுவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

இந்நிலைமையினால், தேவையற்ற ஒன்றுகூடல்களை மேற்கொள்ளுதல் மற்றும் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுப்பதற்கு எதிராக உரிய நடவடிக்கை எடுப்பதற்காக பொலிஸார் மற்றும் வேறு நிறுவனங்கள் ஊடாக பரிந்துரை கேட்கப்படுமாக இருந்தால் விருப்பமில்லாவிட்டாலும் அதனை முன்னெடுக்க வேண்டி ஏற்படும். அதனால் தேவையற்ற ஒன்றுகூடல்களை தவிர்த்துக் கொள்ளுமாறு மக்களிடம் மீண்டும் மீண்டும் கேட்டுக்கொள்கிறோம்.

# கடந்த வருடத்தை விட டெங்கு பரவல் வீதத்தில் பெரும் அதிகரிப்பு

## மேல் மாகாணத்தில் மாத்திரம் 70 நோயாளர்கள்



டெங்குநோய் நிலைமையை கடந்த வருடத்துடன் ஒப்பிடும்போது இந்த வருடத்தில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

நடப்பாண்டின் கடந்த காலங்களில் 16 ஆயிரத்து 497 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதோடு, கடந்த மாதத்தில் மாத்திரம் 2 ஆயிரத்து 997 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். இதேவேளை கடந்த 29 தினங்களில் 3 ஆயிரத்து 29 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ள டெங்கு நோயாளர்களில் 70 சதவீதமானவர்கள் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளதுடன், சில மாவட்டங்கள் டெங்கு எச்சரிக்கை நிறைந்த வலயங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதாக டெங்கு ஒழிப்புப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, குருநாகல், கண்டி, மாத்தறை, இரத்தினபுரி, கேகாலை, காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்படுவதாகவும், தற்போது நிலவும் மழையுடனான காலநிலையினால் எதிர்காலத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாமெனவும் அப்பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு, வைத்திய பரிசோதனை நிறுவனம் மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் டெங்கு ஆய்வு நிறுவனம் என்பன 4 வைரஸ் பிரிவுகளைக் கண்டறிந்துள்ளன. அந்த வைரஸ் வகைகளில் மாற்றம் ஏற்படும் போது டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம்.

# சிலாபத்தில் வீடு புகுந்து ரூ.9 இலட்சம் பெறுமதியான நகை - பணம் திருட்டு

(ஜுட் சமந்த)

வீடொன்றை உடைத்து 02 இலட்சம் ரூபா பணம் மற்றும் 09 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்களை திருடிய சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சிலாபம் பொலிஸார் தெரிவித்தனர்.

சிலாபம், மாரவில பிரதேசத்தைச் சேர்ந்த ரோசா உருசுலா பெர்னாண்டோ (வயது 55) என்பவரினால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கமைய இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தனது மகள் மற்றும் அவரது கணவருடன் தான் வாழ்ந்து வருவதாகவும், அவர்கள் இருவரும் வீட்டில் இல்லாத சந்தர்ப்பத்தின்போது தான் அருகிலுள்ள நண்பரின் வீட்டுக்கு சென்றிருந்தபோது இனந்தெரியாத நபரொருவர் தனது வீட்டுக்குள் நுழைந்து இவ்வாறு திருடியுள்ளதாகவும் அவர் தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

வீட்டிலிருந்து 09 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்கள் மற்றும் 02 இலட்சம் ரூபா பணம் என்பன திருடப்பட்டிருப்பதாக அவர் தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

யாரால் இத்திருட்டுச் சம்பவம் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்பது இதுவரையில் உறுதிப்படுத்தப்படவில்லை. இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை சிலாபம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# இலங்கை - நியூசிலாந்து பொருளாதார உறவுகள் தொடர்பில் தாரக்க பாலசூரிய - மைக்கல் அப்பிள்டனுக்கு இடையில் பேச்சு



இலங்கைக்கான நியூஸிலாந்தின் முதலாவது வதிவிட உயர்ஸ்தானிகரான மைக்கல் அப்பிள்டன் மற்றும் பிராந்திய ஒத்துழைப்புக்கான இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றது.

புதிய உயர்ஸ்தானிகரை வரவேற்ற இராஜாங்க அமைச்சர், இரு நாடுகளுக்கிடையில் தற்போது காணப்படுகின்ற நல்லுறவை வளர்த்துக் கொள்ளும் திறனை எடுத்துரைத்தார். நியூசிலாந்துடனான வர்த்தக உறவுகளை மேலும் பன்முகப்படுத்தி, விரிவுபடுத்துவது குறித்து அவர் கலந்துரையாடியதுடன், பல்வேறு பகுதிகளில், குறிப்பாக பொருளாதார வலயங்கள் மற்றும் இலங்கையில் குறிப்பாக கொழும்புத் துறைமுக நகரில் நியூஸிலாந்து முதலீட்டாளர்களுக்கு காணப்படுகின்ற வாய்ப்புக்களையும் வலியுறுத்தினார்.

இராஜாங்க அமைச்சினால் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள படைப்பாற்றல் பொருளாதாரம் தொடர்பான திட்டமொன்றில் இரு நாடுகளுக்குமிடையிலான ஒத்துழைப்புக்கான வழிமுறைகள் குறித்து இராஜாங்க அமைச்சர் பாலசூரிய மற்றும் உயர்ஸ்தானிகர் அப்பிள்டன் ஆகியோர் கலந்துரையாடினர். விளையாட்டு, கல்வி மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி ஆகிய துறைகளிலான ஒத்துழைப்பு குறித்தும் அவர்கள் கவனம் செலுத்தினர். பிராந்திய ஒத்துழைப்புக்கான இராஜாங்க அமைச்சு மற்றும் வெளிநாட்டு அமைச்சின் கிழக்காசியப் பிரிவின் சிரேஷ்ட அதிகாரிகள் இச்சந்திப்பில் இராஜாங்க அமைச்சருடன் இணைந்திருந்தனர்.

# குற்றம் தவிர்

தொகுப்பு: நா.தினுஷா

## போதைப்பொருட்களுடன் சந்தேகநபர்கள் கைது

### பியகம

பியகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரத்கஹவத்த பாலத்துக்கு அருகில் நேற்று முன்தினம் பியகம பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது 05 கிராம் 200 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஏக்கல பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப் பட்டுள்ளார்.

### கல்கிசை

கல்கிசை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹுளுதாகொட பிரதேசத்தில் நேற்று முன்தினம் கல்கிசை பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது 05 கிராம் 200 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

படோவிட பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப் பட்டுள்ளார்.

### மோதரை

மோதரை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பர்கியூஷன் வீதியில் நேற்று முன்தினம் மோதரை பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது 05 கிராம் 500 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு-14 ஐ சேர்ந்த 31 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### கிரிபத்கொடை

கிரிபத்கொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலுகம பிரதேசத்தில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது 04 கிராம் 850 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தலுகம பிரதேசத்தைச் சேர்ந்த 67 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### கிராண்ட்பாஸ்

கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கம்பிகொட்டுவ பிரதேசத்தில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது 04 கிராம் 740 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஒருகொடாவத்த பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

### பொரளை

பொரளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சரசவி, பெயார்பீல்ட் கார்ட்ன் பிரதேசத்தில் நேற்று முன்தினம் பொரளை பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது 04 கிராம் 760 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். ஹொரணை பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## சட்டவிரோத துப்பாக்கியுடன் ஒருவர் கைது - மல்வத்துஹிரிபிட்டிய

மல்வத்துஹிரிபிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அமஹேனவத்த பிரதேசத்தில் நேற்று முன்தினம் மல்வத்துஹிரிபிட்டிய பொலிஸ் நிலைய அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது அனுமதிப்பத்திரமின்றி துப்பாக்கி வைத்திருந்த நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். குறித்த துப்பாக்கிக்கு பயன்படுத்தப்படும் 05 ரவைகளும் சந்தேகநபரிடமிருந்து பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளன.

வெலிவேரிய பிரதேசத்தைச் சேர்ந்த 69 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## வீதி விபத்துகளில் இருவர் பலி

### கந்தகெட்டிய

கந்தகெட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பதுளை - மஹியங்கனை வீதியில் நேற்று முன்தினம் கரமெட்டிய பிரதேசத்தில் பதுளையை நோக்கிப் பயணித்த முச்சக்கரவண்டி அதே திசையில் எதிரில் நிறுத்தப்பட்டிருந்த டிப்பர் ரக வாகனத்தில் மோதி விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் படுகாயங்களுக்குள்ளான முச்சக்கரவண்டி சாரதி கந்தகெட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மஹியங்கனை வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டபோது உயிரிழந்துள்ளார்.

பிபில பிரதேசத்தைச் சேர்ந்த 58 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதுடன் பிபில பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் உப பொலிஸ் பரிசோதகர் ஒருவரே விபத்தில் பலியாகியுள்ளார்.

### தம்புள்ளை

தம்புள்ளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தம்புள்ளை - பக்கமூன வீதியில் நேற்று முன்தினம் உணபதுரயாய பிரதேசத்தில் தம்புள்ளையை நோக்கிப் பயணித்த ஜீப் ரக வாகனமொன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்ததால் வீதியிலிருந்து விலகி மரமொன்றில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் படுகாயங்களுக்குள்ளான ஜீப் ரக வாகனத்தின் சாரதி மற்றும் அதிலிருந்த பயணிகள் இருவர் சிகிச்சைக்காக தம்புள்ளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அதன் பின்னர் சாரதி உயிரிழந்துள்ளார்.

கெப்பிட்டிபொல பிரதேசத்தைச் சேர்ந்த 39 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

## வெடிச் சம்பவத்தில் நபரொருவர் பலி - இஹிணியாகல

இஹிணியாகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாமல்தலாவ பிரதேசத்தில் நேற்று முன்தினம் விலங்குகளை வேட்டையாடுவதற்கு சென்றிருந்த மூவரில் ஒருவர், காட்டு விலங்குகள் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி படுகாயங்களுக்குள்ளாகிய நிலையில் இஹிணியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார். இதுதொடர்பில் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நாமல்ஓயா பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதன்போது காட்டு விலங்குகளை வேட்டையாடுவதற்கு சென்றிருந்த ஏனைய இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், விலங்குகளை வேட்டையாடுவதற்கு அவர்களால் பயன்படுத்தப்பட்ட உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியும் கைபற்றப்பட்டுள்ளது. இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை இஹிணியாகல பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# கோட்டாபய கடற்படை முகாம் காணி அபகரிப்பு; கலந்துரையாடலின் பின்னரே முடிவெடுக்கப்படும்

## அதுவரை நில அளவைச் செயற்பாடுகளை நிறுத்திவைப்பதாக முடிவு









(முல்லைத்தீவு நிருபர்)

முல்லைத்தீவு - முள்ளிவாய்க்கால் கிழக்கு, வட்டுவாகல் கோட்டாபய கடற்படை முகாம் காணி அளவீடு தொடர்பில் கடற்படை, காணிகளுக்குரிய மக்கள் மற்றும் உரிய திணைக்கள அதிகாரிகளுடன் மாவட்டசெயலகத்தில் கலந்துரையாடலொன்று இடம்பெற்று, அந்த கலந்துரையாடலின் அடிப்படையிலேயே நில அளவீடு தொடர்பில் முடிவு எடுக்கப்படும் எனவும், அதுவரை நில அளவைச் செயறபாடுகள் இடம்பெறாது என்ற இணக்கமான முடிவொன்றும் எடுக்கப்பட்டது.

காணி அளவீடு தொடர்பில் நில அளவைத் திணைக்களத்தினால் அனுப்பிவைக்கப்பட்ட கடிதம்

முல்லைத்தீவு - முள்ளிவாய்க்கால் கிழக்கு, வட்டுவாகல் பகுதியில் கோட்டாபய டற்படை முகாம் கடற்படையினர் அபகரித்துள்ள தமிழ் மக்களுக்குரிய சுமார் 617ஏக்கர் காணிகளை அளவீடுசெய்து சட்டரீதியாக சுவீகரித்து கடற்படையினருக்கு வழங்குவது தொடர்பில், முல்லைத்தீவு பிரதேச நில அளவைத் திணைக்களத்தின் அரச நில அளவையாளர் பா.நவஜீவன், 08.07.2021ஆம் திகதியிடப்பட்ட கடிதமொன்றை காணி உரிமையாளர்களான தமிழ் மக்களுக்கு அனுப்பிவைத்திருந்தார்.

குறிப்பாக, அக்கடிதத்தில் கடந்த 2021.05.12ஆம் திகதியன்று முல்லைத்தீவு அரசாங்க அதிபர் மற்றும் கரைதுரைப்பற்று பிரதேச செயலாளர்களுடனான கலந்துரையாடலின் அடிப்படையில், நிறுத்திவைக்கப்பட்டிருந்த நில அளவையானது காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 450) 05ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் பிரகாரம் காணி மற்றும் நாடாளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சின் கட்டளை நிமித்தம், நில அளவை நாயகத்தால் அளிக்கப்பட்ட கட்டளையின் பிரகாரம், முல்லைத்தீவு மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முள்ளிவாய்க்கால் கிழக்கு கிராமசேவையாளர் பிரிவின் முள்ளிவாய்க்கால் கிராமத்தில் அமைந்துள்ள காணியினை பிரதான கடற்படை முகாம் அமைப்பதற்காக சுவீகரிக்கும் பொருட்டு நிலஅளவை செய்வதற்காக 2021.07.29 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு வருகை தந்து தங்கள் காணிகளின் எல்லைகளையும் விபரங்களையும் இனங்காட்டும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள் என குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதேவேளை அவரவரது காணியினை உறுதிப்படுத்தும் ஆவணத்தையும் ஆவணத்தின் பிரதி ஒன்றையும் எடுத்து வரும்படியும், குறித்த கடிதத்தின் மூலம் காணி உரிமையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த கடிதத்தின் அறிவிப்பினை ஏற்கமறுத்த காணிகளுக்குரிய தமிழ் மக்கள், தமது காணிகளை விடுவிக்குமாறு கோரி 29.07.2021 இன்று ஆர்ப்பாட்டம் ஒன்றினை மேற்கொள்ளும் முடிவிற்கும் வந்திருந்தனர்.

***ஆர்ப்பாட்ட ஏற்பாடுகளில் ஈடுபட்டவர்களை அச்சுறுத்திய இராணுவத்தினர்***

அதற்கமைய காலை 07.00 மணியளவில் துரைராசா ரவிகரன், கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன், காணிகளுக்குரிய மக்கள் சிலர் உள்ளிட்டவர்கள் வட்டுவாகல் சப்த கன்னியர் ஆலயத்திற்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டத்திற்குரிய ஆயத்தங்களில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது அந்த இடத்திற்கு வருகைதந்த இராணுவத்தினர் சிலர், ஆர்ப்பாட்டக்காரர்களை அச்சுறுத்துகின்றவகையில் செயற்பட்டதுடன், ஆர்ப்பாட்டத்திற்கான முயற்சிகளை குழப்புகின்ற வகையிலும் செயற்பட்டிருந்தனர்.

நில அளவீட்டுத்திணைக்கள வாகனத்தை வழிமறித்த ஆர்ப்பாட்டக்காரர்கள்

நில அளவீடுகளைச் செய்வதற்காக ஆவணங்களுடன் 09.00 மணிக்கு வருகைதருமாறு கடிதத்தின் மூலம் காணிக்குரிய தமிழ் மக்களுக்கு அறிவித்தல் வழங்கியிருந்ந நில அளவைத் திணைக்களம், குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னர் 07.30மணிக்கே நில அளவீட்டுச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்காக வட்டுவாகல் கோட்டாபய கடற்படை முகாம் வளாகத்திற்கு வருகைதந்திருந்தனர்.

நில அளவைத் திணைக்களத்தின் இத்தகைய செயற்பாடானது காணிகளுக்குரிய தமிழ்மக்களுக்கு பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியிருந்தது. தொடர்ந்து அங்கு நில அளவீட்டிற்கென வருகைதந்திருந்த முல்லைத்தீவு பிரதேச நில அளவைத் திணைக்களத்தின் அரச நில அளவையாளர் பா.நவஜீவன் தலைமையிலான குழுவினர் கடற்படை முகாமிற்குள் செல்லமுற்பட்டபோது அவர்கள் வருகைதந்த வாகனத்தினை முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்டவர்கள் வழிமறித்தனர்.

அவர்கள் வாகனத்தை வழிமறிப்பதற்குள் வாகனத்தை விட்டிறங்கிய நில அளவையாளர் பா.நவஜீவன் கடற்படை முகாமிற்குள் சென்றிருந்தார். தொடர்ந்து தமது காணிகளை விடுவிக்குமாறு கோரி பதாகைகளை ஏந்தி, கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

***ஆர்ப்பாட்டத்தில் குவிக்கப்பட்ட பாதுகாப்புத் தரப்பு***

இவ்வாறு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுக்கொண்டிருக்கும்போது கடற்படை முகாமின் உட்புறமாக கலகம் அடக்கும் கடற்படையினர் களமிறக்கப்பட்டிருந்தனர். அதேவேளை, பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர், கடற்படையினர், புலனாய்வாளர்கள் என பாதுகாப்புத் தரப்பினர் ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற இடத்தைச்சூழ நிறுத்திவைக்கப்பட்டிருந்தனர்.

அத்தோடு கடற்படையினர் மற்றும் புலனாய்வாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை புகைப்படம் மற்றும் காணொளி எடுத்து அச்சுறுத்தும் வகையிலும் செயற்பட்டிருந்தனர்.

இணக்கப்பாட்டிற்குவந்த பொலிஸ் மற்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் இவ்வாறாக தொடர்ச்சியாக போராட்டம் இடம்பெற்றிருந்த நிலையில், நில அளவைச் செயற்பாடுகளை நிறுத்திவைப்பதெனவும், பிறிதொருநாளில் மாவட்டசெயலகத்தில் இக் காணிப் பிரச்சினை தொடர்பில் காணி உரிமையாளர்கள், கடற்படை மற்றும் உரிய அரச திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் ஒன்றுகூடி கலந்துரையாடி, அக்கலந்துரையாடலின் முடிவின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்வதாகவும், அதுவரை நில அளவைச் செயற்பாடுகளை நிறுத்திவைப்பது என்ற இணக்கமான கருத்தை பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரர்களிடம் தெரிவித்தனர்.

பொலிஸாரின் இந்த இணக்கமான கருத்தையடுத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஆர்ப்பாட்டத்தை முடித்துக்கொள்ளும் முடிவிற்கு வந்தனர்.

***நில அளவை இடம்பெறவேண்டுமென வலியுறுத்திய தெற்கைச் சேர்ந்த சீன நாட்டவர்***

தென்னிலங்கையில் வசித்துவருகின்ற சீன நாட்டவர் ஒருவருக்கு குறித்த கோட்டாபய கடற்படை முகாம் அமைந்துள்ள பகுதியில் சுமார் 49 ஏக்கர் காணியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், குறித்த சீன நாட்டைச் சேர்ந்தவர் ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற பகுதிக்கு வருகை தந்து தனது காணிகளுக்குரிய நட்டஈட்டைப் பெறுவதற்கும், இதுவரைகாலம் அங்கு கடற்படை இருந்து தனது காணியைப் பயன்படுத்தியமைக்கான நட்டயீட்டைப் பெறுவதற்கும் கட்டாயம் அங்கு நில அளவீடு இடம்பெறவேண்டும் என வலியுறுத்தியிருந்தார். குறித்த நபரின் இத்தகைய கருத்திற்கு அங்கிருந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் தமது கடுமையான கண்டனங்களை வெளியிட்டிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து ஏனைய ஆர்ப்பாட்டக்காரர்களும் குறித்த நபர் அங்கிருந்து வெளியேற வேண்டுமெனக் கோஷம் எழுப்பியதைத் தொடர்ந்து ஆர்ப்பாட்ட இடத்திலிருந்து வெளியேறியிருந்தார்.

***மக்கள் பிரதிநிகளை தனியே அழைத்த பொலிஸார்; ஏற்க மறுத்த மக்கள் பிரதிநிதிகள்***

இந்நிலையில் ஆர்ப்பாட்டத்தை நிறுத்தி ஓர் இணக்கப்பாட்டிற்கு வருவதற்காக தனியே பேசவேண்டுமென, மக்கள் பிரதிநிகளான சாள்ஸ் நிர்மலநாதன், கஜேந்திரகுமார் பென்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், துரைராசா ரவிகரன், எம்.கே.சிவாஜிலிங்கம், சிவசக்தி ஆனந்தன், வினோ நோகராதலிங்கம் ஆகியோரை பொலிஸார் கடற்படை முகாமிற்குள் அழைத்தனர். பொலிஸாரின் இந்த அழைப்பை ஏற்க மறுத்த மக்கள் பிரதிநிதிகள் எதை தெரிவிப்பதாக இருந்தாலும் மக்களுக்குமுன் வெளிப்படையாகத் தெரிவிக்குமாறு தெரிவித்திருந்தனர்.

***நில அளவையாளரை கடற்படை முகாமிற்கு வெளியே அழைத்த ஆர்ப்பாட்டக்காரர்கள்***

அதனைத் தொடர்ந்து முல்லைத்தீவு பிரதேச நில அளவைத் திணைக்களத்தின் அரச நில அளவையாளர் பா.நவஜீவன் கடற்படை முகாமிற்குள் இருந்த நிலையில் அவரை வெளியே வருமாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் அழைத்தனர்.

அதற்கு குறித்த நில அளவையாளர், தனக்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுபவர்கள் தாக்குவார்களோ என்ற அச்சம் இருப்பதாக தெரிவித்து வெளியே வருவதற்கு அவர் மறுப்புத் தெரிவித்தார்.

நில அளவையாளரின் கருத்தை நிராகரித்த ஆர்ப்பாட்டக்காரர்கள், தாங்கள் தாக்கமாட்டோம் எனவும் வெளியே வந்து தமக்கு ஒரு முறையான முடிவைத் தெரிவிக்குமாறும் அவரை அழைத்தனர். எனினும் அவர் வெளியே வராததுடன், தாம் மாவட்ட நிலஅளவைத் திணைக்கள அதிகாரியுடன் தொலைபேசியில் பேசிவிட்டு வருவதாகக்கூறி கடற்படை முகாமிற்குள்ளேயே இருந்தார்.

***பிரதானவாயில் அருகில் இருந்த ஆர்ப்பாட்டக்காரர்களை அங்கிருந்து விலகிச்செல்ல உத்தரவிட்ட கடற்படை***

கோட்டாபய கடற்படை முகாம் பிரதான வாயில் அருகாமையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த நிலையில், ஆர்ப்பாட்டக்காரர்களை அங்கிருந்து விலகி பிரதான வாயிலுக்கு முன்பாகவுள்ள பாதுகாப்பு வரியலுக்கு வெளியே செல்லுமாறு கடற்படையினர் உத்தரவிட்டனர். அதற்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் அவ்வாறு வெளியே செல்லமுடியாதென மறுத்து கோஷங்களை எழுப்பினர். பின்னர் மெதுவாக அங்கிருந்து விலகி பாதுகாப்பு வரியலுக்கு வெளியேவந்தனர்.

இந்நிலையில் உட்பகுதியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த கலகம் அடக்கும் கடற்படையினர் வெளியே கொண்டுவரப்பட்டு பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

***தந்திரமாக அளவீடுசெய்ய முயன்ற நில அளவையாளர்கள்; வீதிமறியலில் ஈடுபட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள்.***

ஆர்ப்பாட்டக்காரர்கள் தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருக்கும்போது, நில அளவைத் திணைக்களத்திலிருந்து வேறு வாகனம் ஒன்றில் நில அளவையாளர்கள் ஏற்றிவரப்பட்டு, கடற்படை முகாமின் பிறிதொரு வாயிலூடாக கடற்படை முகாமிற்குள் நுழைந்து, அளவீடுசெய்யும் முயற்சியில் ஈடுபட்டனர். இதனை அறிந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் நில அளவையாளர்கள் வெளியே வரவேண்டுமென கோஷங்களை எழுப்பினர்.

குறிப்பாக முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே சிவாஜிலிங்கம் முல்லைத்தீவு பிரதேச நில அளவையாளர் பா.நவஜீவனின் பெயரைக்குறிப்பிட்டு “துரோகி நவஜீவனே.. வெளியே வா..” என கோஷம் எழுப்பினார்.

அத்தோடு ஆர்ப்பாட்டக்காரர்கள் பரந்தன் - முல்லைத்தீவு பிரதான வீதியில் அமர்ந்து, சாலைமறியல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார். இதனால் பரந்தன் - முல்லைத்தீவு வீதியில் சிலமணிநேரம் போக்குவரத்துத் தடை ஏற்பட்டிருந்தது.

***ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும், பயணிகள் சிலருக்கும் முறுகல்***

இவ்வாறாக சில மணிநேரம் சாலைமறியலில் ஆர்ப்பாட்டக்காரர்கள் ஈடுபட்டதால், வெய்லில் வீதியில் நின்ற பயணிகளுக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் சிறிய முறுகல் நிலை ஏற்பட்டது. குறிப்பாக சில பயணிகள் வழியை விடுமாறு ஆர்ப்பாட்டக்காரர்களைக் கோரியபோது, தமது காணிக்கு தீர்வுகிடைத்தால்தான் வீதியை விட்டுவிலகுவோமென ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

இதனால் கொதிப்படைந்த பயணிகள் சிலர் ஆர்ப்பாட்டக்காரர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டிருந்தனர். அவ்வாறு செல்லவேண்டுமாயின் தமக்கு மேலால் வாகனங்களை ஏற்றிச்செல்லுமாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்ட பயணிகளிடம் தெரிவித்தனர்.

அத்தோடு ஆர்ப்பாட்டக்காரர்கள் வீதியின் குறுக்கே தகரப் பந்தல் அமைத்து அமரவுள்ளதாகத் தெரிவித்து, பந்தல் அமைப்பதற்குரிய பொருட்களும் வாகனத்தில் ஏற்றிவரப்பட்ட நிலையில் பொலிஸாரின் அழுத்தத்தினால் பந்தல் பொருட்கள் அங்கிருந்து எடுத்துச்செல்லப்பட்டன.

ஆர்ப்பாட்டக்காரர்களைத் தாக்கிய பொலிஸார்

இவ்வாறு தொடர்ச்சியாக வீதிமறியலில் ஆர்ப்பாட்டக்காரர்கள் இருந்தனர். ஆர்ப்பாட்டக்காரர்களின் இந்த தொடர்ச்சியான அழுத்தங்காரணமாக கடற்படை முகாமிற்குள் அளவிடச்சென்ற முல்லைத்தீவு பிரதேச நிலஅளவையாளர் பா.நவஜீவன், அளவீட்டு முயற்சியைக் கைவிட்டு கடற்படை முகாமிற்கு வெளியே வந்தார்.

இந்நிலையில் அவரின் வாகனத்தினைச் சுற்றிவளைத்த ஆர்ப்பாட்டக்காரர்களை பாதுகாப்புத்தரப்பினர் தள்ளியதுடன், தாக்கியுமிருந்தனர். இவ்வாறாக ஆர்ப்பாட்டக்காரர்களிடமிருந்து நில அளவையாளர் பா.நவஜீவனையும் அவரின் வாகனத்தையும் பொலிஸார் மீட்டு, அவரை புதுக்குடியிருப்பு ஊடாக, கேப்பாப்பிலவு வழியே அனுப்பிவைத்திருந்தனர்.

***கடற்படை முகாமிற்குள் நடந்தது என்ன; முறையான முடிவு வேண்டும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிக்கை***

இராணுவ முகாமிற்குள் அளவீடு நடந்ததா? என்பது தொடர்பில் தங்களுக்கு நில அளவையாளர் வருகைதந்து தமக்கு விளக்கமளிக்கவேண்டுமெனவும், இந்தப் பிரச்சினைக்கு முறையானதொரு முடிவினையும் உரியவர்கள் தெரிவிக்க வேண்டுமெனத் தெரிவித்து ஆர்ப்பாட்டக்காரர்கள் தொடர்ந்தும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

***காணி அளவீடு தொடர்பில் கலந்துரையாடல் நடத்துவதெனவும் அதுவரை நில அளவீடுகள் நிறுத்திவைப்பதாகவும் முடிவு***

இந்நிலையில் அங்கு வருகைதந்த முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன், நில அளவைத் திணைக்கள மாவட்ட அதிகாரியுடன் தொடர்புகொண்டு ஆர்ப்பாட்ட இடத்திற்கு அவரை அழைத்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து குறித்த இடத்திற்கு வருகைதந்த முல்லைத்தீவு மாவட்ட நிலஅளவைத் திணைக்கள அதிகாரியும், முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரனும் ஆர்ப்பாட்டக்காரர்களுடன் பேசியிருந்தனர்.

அதிலே குறிப்பாக கடற்படை, காணிகளுக்குரிரிய மக்கள் மற்றும் உரிய திணைக்கள அதிகாரிகளுடன் மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடலொன்று இடம்பெற்று, அந்த கலந்துரையாடலின் அடிப்படையிலேயே நில அளவீடுதொடர்பில் முடிவெடுக்கப்படும் எனவும், அதுவரை நில அளவைச் செயறபாடுகள் இடம்பெறாது என்ற இணக்கமான முடிவொன்று எடுக்கப்பட்டது.

***அதனைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது.***

மேலும் குறித்த ஆர்ப்பாட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சார்ள்ஸ் நிர்மலநாதன், கஜேந்திரகுமார் பென்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், வினோ நோகராதலிங்கம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், எம்.கே.சிவாஜிலிங்கம், கரைதுறைப்பற்று பிரதேச சபைத் தவிசாளர் க.விஜிந்தன், பிரதேச சபை உறுப்பினர்களான சி.லோகேஸ்வரன், க.ஜெனமேஜயந், விஜயகுமார், தி.இரவீந்திரன், சட்டத்தரணி இ.தனஞ்சயன் ஆகியோருடன், காணிக்குரிய மக்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சியில் நடமாடும் தடுப்பூசி செலுத்தும் வேலைத்திட்டம் ஆரம்பம்

## ஆனந்தசங்கரியும் ஏற்றிக்கொண்டார்



நடமாடும் தடுப்பூசி ஏற்றும் பணிகள் கிளிநொச்சியில் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், தமிழ் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி 88ஆவது வயதில் நேற்று சினோபார்ம் தடுப்பூசியை பெற்றுக்கொண்டார்.

நேற்றுமுதல் வயது முதிர்ந்தவர்கள், நடமாட முடியாதவர்கள் மற்றும் நோய்வாய்ப்பட்டு படுக்கையில் இருப்பவர்கள் உள்ளிட்டோருக்கு நடமாடும் தடுப்பூசி செலுத்தும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் வைத்திய அதிகாரிரி சரவணபவனின் நேரடி கண்காணிப்பின் கீழ் குறித்த பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், குறித்த நடமாடும் தடுப்பூசி செலுத்தும் சேவை ஊடாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தடுப்பூசியை நேற்று செலுத்திக்கொண்டார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 50 ஆயிரம் தடுப்பூசிகள் செலுத்துவதற்காக கிடைக்கப்பெற்றுள்ள நிலையில், 9 இடங்களிலும் நடமாடும் தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டம் ஊடாகவும் தடுப்பூசி ஏற்றும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.


30 வயதுக்கு மேற்பட்டவர்கள் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கும் குறித்த தடுப்பூசிகள் ஏற்றும் பணிகள் இடம்பெறுகின்றது.

இந்நிலையில் நேற்று நடமாடும் சேவை ஊடாக 88 வயதுடைய வீ.ஆனந்தசங்கரி தடுப்பூசியை கிளிநொச்சியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் பெற்றுக்கொண்டார்.

வடக்கு செய்திகள்

thamilannorth@gmail.com

# வவுனியாவில் யானையின் சடலம் மீட்பு



(வவுனியா நிருபர்)

வவுனியா மடுகந்தை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட குள பகுதியில் காயமடைந்த நிலையில் காட்டு யானையின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குறித்த கிராமத்தில் வேட்டைக்குச் சென்றவர்கள் பயன்படுத்திய வெங்காய வெடி வெடித்ததனாலேயே யானை இறந்துள்ளதாக பிரேத பரிசோதனை மேற்கொண்ட வடமாகாணத்தின் கால்நடை அறுவை சிகிச்சை நிபுணர் பி.கிரிதரன் தெரிவித்துள்ளார்.

ஐந்து வயது மதிக்கத்தக்க யானையின் சடலமே இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.




**சாவகச்சேரி நகரசபையின் பொன்விழா மண்டபத்தில் இடம்பெற்ற கொவிட்-19 தடுப்பூசி செலுத்தும் நிகழ்வில் பெருமளவான பொதுமக்கள் தடுப்பூசியை ஆர்வத்துடன் பெற்றுக்கொண்டபோது...**
**(சாவகச்சேரி நிருபர்)**

# இந்திய செய்திகள்

# மீண்டும் மிரட்டும் கொரோனா: ஊரடங்கால் முடங்கும் கேரளா



கேரள மாநிலத்தில் கொரோனா தொற்று அதிகரித்துவரும் நிலையில் நாளை மற்றும் நாளை மறுதினம் (ஜூலை 31 மற்றும் ஒகஸ்ட் 1) உட்பட இரண்டு நாட்களுக்கு முழு ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

அத்தோடு கேரளாவில் எடுக்கப்பட்டு வரும் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொள்ள 6 பேர் கொண்ட குழுவை மத்திய அரசு அனுப்பி வைத்துள்ளது.

தற்போது இந்தியாவிலேயே கேரளாவில் கொரோனா பாதிப்பு மீண்டும் அதிகரித்து வருவது மூன்றாம் அலைக்கான முன்னோட்டம் என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனை உடனடியாக தடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து கேரள அரசு இந்த வார இறுதிநாட்களான ஜூலை 31 மற்றும் ஒகஸ்ட் முதலாம் திகதி ஆகிய 2 தினங்களுக்கு முழு பொது முடக்கத்தை அறிவித்துள்ளது. தற்போது இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் தளர்வுகளுடன் கூடிய பொது முடக்கமே அமுலிலுள்ளது. கேரளாவில் மூன்றாவது முறையாக மீண்டும் பொது முடக்கம் அமுல்படுத்தப்படவுள்ளது.

***இந்திய மத்திய சுகாதாரத்துறை அமைச்சு***

6 பேர்கொண்ட குழுவை கேரளாவிற்கு அனுப்புகிறது. கேரளாவில் எடுக்கப்பட்டுவரும் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்படவுள்ளது. 2ஆவது அலையில் ஒட்சிசன் பற்றாக்குறை பெரும் பிரச்சினையை ஏற்படுத்தியிருந்த நிலையில், மூன்றாவது அலையில் தேவைகள், உருமாறிய கொரோனா தொற்று பரவுகிறதா உள்ளிட்ட ஆய்வுகள் நடத்தப்படவுள்ளன. கேரளாவில் கடந்த இரண்டு நாட்களாக தினசரி கொரோனா பாதிப்பு 22,000இற்கும் மேலுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மூன்று முறை கொரோனா தொற்றுக்குள்ளான முதல் நபர்



டில்லியைச் சேர்ந்த 61 வயது பெண் மருத்துவர் ஒருவர் 3 முறை கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான முதல் நபர் என்பது பரிசோதனைகள் மூலம் உறுதிசெய்யப்பட்டுள்ளது.

அதில் இரண்டாவது மற்றும் மூன்றாவது முறையாக ஏற்பட்ட பாதிப்புகள் 22 நாட்கள் இடைவெளியில் அல்பா மற்றும் டெல்ட்டா வகை கொரோனா வைரஸ் தாக்குதலால் ஏற்பட்டதும், 2 டோஸ் தடுப்பூசி போட்டுக்கொண்ட பின்னர் தொற்று ஏற்பட்டதும் உறுதிசெய்யப்பட்டுள்ளது.

ஒருமுறை தொற்று ஏற்பட்டால் மறு தொற்று ஏற்படுவதற்கு சராசரியாக 45 முதல் 90 நாட்கள் எடுத்துக்கொள்ளும் என அமெரிக்க மருத்துவ ஆராய்ச்சி மையமும், 104 நாட்களாகும் என இந்திய மருத்துவ ஆராய்ச்சி சபையும் கூறுகின்றன. ஆனால், மூன்று முறை தொற்றுக்குள்ளான டில்லி மருத்துவருக்கு 19 நாட்கள் இடைவெளியில் மறு தொற்று ஏற்பட்டதால் அதுகுறித்து ஆய்வு செய்யப்படுகிறது.

# ‘பொன்னியின் செல்வன்’: மற்றுமொரு அப்டேட்



வலிமை அப்டேட், வலிமை அப்டேட் என அஜித் ரசிகர்கள் அங்கிங்கெனாதபடி எங்கும் கேட்டதால் அப்டேட் என்ற வார்த்தை சினிமா ரசிகர்களின் மனதில் ஆழமாகப் பதிந்துவிட்டது. எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள சில படங்களைப் பற்றிய அப்டேட்டை ரசிகர்களும் எதிர்பார்க்க ஆரம்பித்துவிட்டனர்.

அந்த விதத்தில் மணிரத்னம் இயக்கிவரும் சரித்திரப் படமான ‘பொன்னியின் செல்வன்’ பற்றி மற்றுமொரு அப்டேட் இப்போது தெரியவந்துள்ளது.

‘ப பாண்டி’, ‘சேதுபதி’, ‘மாரி 2’, ‘பாஸ்கர் ஒரு ராஸ்கல்’ ஆகிய படங்களில் சிறுவனாக நடித்த மாஸ்டர் ராகவன் அவருடைய இன்ஸ்டாகிராமில் ஐஸ்வர்யா ராயுடன் எடுத்த செல்பி புகைப்படங்களைப் பதிவிட்டு, “பொன்னியின் செல்வன் படப்பிடிப்பு இடைவேளையில் ஐஸ்வர்யா ராய் மேடத்துடன்... அவருடன் நடிப்பது மிகப் பெரும் அனுபவம்” எனக் குறிப்பிட்டுள்ளார்.

அவருடைய அந்தப் பதிவில் ஒரு ரசிகர், ‘‘எந்தக் கதாபாத்திரத்தில் நடிக்கிறீர்கள்?’’ எனக் கேட்டதற்கு, வேறொரு ரசிகர் பாண்டிய இளவரசர் என பதிலளித்திருக்கிறார். பொன்னியின் செல்வன் நாவலில் ‘பாண்டிய இளவல்’ என்ற சிறுவன் கதாபாத்திரம் முக்கியமான கதாபாத்திரங்களில் ஒன்று.

ஐஸ்வர்யா ராயுடன் ராகவன் எடுத்த செல்பியைப் பார்த்து பொறாமைப்படும் ரசிகர்கள், “யாருடா நீ, இப்படி கலக்குற, ஐஸ்வர்யாவுடன் புகைப்படம் எடுத்த லக்கி பையன், செமடா தம்பி” என பொறாமையுடன் பாராட்டி கருத்துகளை பதிவிட்டுள்ளனர்.

# காதலி கன்னிகாவை கரம்பிடித்தார் சினேகன்



பாடலாசிரியரும், மக்கள் நீதி மய்யத்தின் நிர்வாகியுமான சினேகன்- நடிகை கன்னிகா ரவி திருமணம் கமல்ஹாசன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

கவிஞர் சினேகனும் சின்னத்திரை நடிகை கன்னிகா ரவியும் 8 ஆண்டுகளாக காதலித்துவந்த நிலையில், தற்போது திருமணம் செய்துகொண்டனர்.

திருமணத்தில் மக்கள் நீதி மய்யம் கட்சியின் முக்கிய நிர்வாகிகளான பொன்ராஜ், பழ. கருப்பையா, மௌரியா மற்றும் இயக்குநர்கள் பாரதிராஜா, அமீர் உள்ளிட்டோர் கலந்துகொண்டு மணமக்களுக்கு ஆசி வழங்கினர்.

**ராஜீவ் காந்தி கொலை வழக்கு விவகாரம்:**

# ரவிச்சந்திரனுக்கு பரோல் வழங்குவதில் என்ன சிக்கல்?

**உயர்நீதிமன்ற மதுரை கிளை கேள்வி**



ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறையிலுள்ள ரவிச்சந்திரனுக்கு பரோல் வழங்குவதில் என்ன சிக்கலிருக்கிறது என்று உயர்நீதிமன்ற மதுரை கிளை கேள்வியெழுப்பியுள்ளது.

இதுகுறித்து தமிழக அரசு ஒருவாரத்தில் பதிலளிக்கவேண்டும் என்று உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவிட்டுள்ளது. பதிலளிக்க தமிழக அரசு அவகாசம் கோரி இருப்பதால் விசாரணை ஒரு வாரத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தொடர்புடையதாக கூறப்படும் மற்றொருவருக்கு பரோல் வழங்கப்பட்ட நிலையில், ரவிச்சந்திரனுக்கு விடுப்பு வழங்குவதில் என்ன சிக்கல் என உயர்நீதிமன்ற மதுரை கிளை நீதிபதிகள் கேள்வியெழுப்பியுள்ளனர். மேலும் இந்த வழக்கு குறித்து அரசு தரப்பில் உரிய தகவல் பெற்று தெரிவிக்கவும் உத்தரவிட்டுள்ளனர். வழக்கின் பின்னணியில் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறையில் இருக்கும் ரவிச்சந்திரனின் தாயார் ராஜேஸ்வரி மனுவினை தாக்கல் செய்திருந்தார்.


அதில் இந்த வழக்கில் 27 ஆண்டுகளாக மதுரை மத்திய சிறையில் மகன் ரவிச்சந்திரன் இருக்கிறார். இந்த வழக்கில் 27 ஆண்டுகளாக சிறையில் வாடும் பேரறிவாளன், ரவிச்சந்திரன் உள்ளிட்ட 7 பேரையும் விடுதலைசெய்வது குறித்து தமிழக அரசே முடிவு செய்யலாம் என உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

அதனடிப்படையில் தமிழக அரசின் அமைச்சரவையிலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானம் தமிழக ஆளுநரின் ஒப்புதல் பெறுவதற்காக தொடர்ந்து காத்திருப்பிலுள்ளது. இந்நிலையில், ரவிச்சந்திரனுக்கு 3 மாத காலம் விடுப்பு வழங்கக்கோரி மனு அளித்த நிலையில் மத்திய அரசின் செயல் அதிகாரத்துக்கு உட்பட்ட சட்டப்பிரிவின் கீழ் தண்டனை பெற்றுள்ளதால் அவருக்கு சாதாரண விடுப்பு வழங்குவது குறித்து பரிசீலனை செய்ய இயலாது என அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்த உத்தரவையும் ஏற்கனவே தமிழக அரசு ரத்து செய்து உத்தரவிட்டுள்ளது. ஆகவே இவற்றை கருத்திற்கொண்டு ரவிச்சந்திரனுக்கு 2 மாத கால சாதாரண விடுப்பு வழங்க உத்தரவிட வேண்டும் என கோரியிருந்தார். இந்த வழக்கு நேற்று நீதிபதிகள் கல்யாணசுந்தரம், புகழேந்தி அமர்வு முன்பாக விசாரணைக்கு வந்தது. அப்போது அரசு தரப்பில் இதுகுறித்து பதிலளிக்க கூடுதல் கால அவகாசம் கோரப்பட்டது. அதற்கு நீதிபதிகள் வழக்கில் தொடர்புடையதாக கூறப்படும் மற்றொருவருக்கு பரோல் வழங்கப்பட்ட நிலையில் இவருக்கு விடுப்பு வழங்குவதில் என்ன சிக்கல் என கேள்வி எழுப்பினர். மேலும் இதுகுறித்து அரசிடம் உரிய தகவல் பெற்று தெரிவிக்க வழக்கினை ஒரு வாரத்திற்கு ஒத்திவைத்துள்ளனர்.

**ரோல்ஸ் ரொய்ஸ் கார் விவகாரம்:**

# அபராதம் கட்ட தயாராக இல்லை



சொகுசு காருக்கு நுழைவு வரி செலுத்த தடை கோரிய வழக்கில், அபராதமாக விதிக்கப்பட்ட ஒரு இலட்சம் ரூபாவை நிவாரண நிதியாக கொடுக்க விருப்பமில்லை என்று சென்னை உயர்நீதிமன்ற தனி நீதிபதி முன்பு விஜய் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

தனி நீதிபதி எஸ்.எம்.சுப்பிரமணியம் பிறப்பித்த உத்தரவை செயற்படுத்தியது தொடர்பாக அறிக்கையளிக்க உத்தரவிட்டிருந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு பட்டியலிடப்பட்டிருந்தது.

அப்போது நீதிபதி, ஒரு இலட்சம் ரூபாவை கொரோனா நிவாரண நிதியாக தமிழக அரசிடம் ஏன் வழங்கக்கூடாது என கருத்து தெரிவித்தார். அதற்கு விஜய் தரப்பில் ஏற்கனவே 25 இலட்சம் ரூபா நிவாரண நிதியாக கடந்த ஆண்டு கொடுக்கப்பட்டதாக கூறப்பட்டது.

தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்துள்ளதால் சொகுசு காருக்கு நுழைவு வரி செலுத்த தடை கோரி விஜய் தாக்கல் செய்த வழக்கை தனி நீதிபதி முடித்துவைத்தார்.

# எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடிமீது 4 பிரிவுகளில் வழக்கு தாக்கல்




சேலத்தில் கொரோனா கட்டுப்பாடுகளை மீறி, அனுமதியின்றி போராட்டம் நடத்திய முறைப்பாட்டில் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி மீது 4 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் வாக்குறுதிகளை தி.மு.க. அரசு நிறைவேற்றுமாறு, சேலம் சூரமங்கலத்தில் அனுமதியின்றி போராட்டம் நடத்தியதோடு, கொரோனா கட்டுப்பாடுகளையும் மீறியதாக எடப்பாடி பழனிசாமி உட்பட 90 பேர் மீது பொலிஸார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

கூட்டம் கூட்டுவது, கொரோனா கட்டுப்பாடை மீறி ஒன்று கூடுதல், பேரிடர் காலங்களில் அனுமதியின்றி ஆர்ப்பாட்டம் நடத்துதல், தொற்று நோயை பரப்புதல் உள்ளிட்ட 4 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

# ஜம்மு காஷ்மீர் - இமாச்சலப் பிரதேசத்தில் மண்சரிவு - மேக வெடிப்பு - வெள்ளம்



**22 பேர் உயிரிழப்பு**

ஜம்மு-காஷ்மீர் கிஷ்ட்வர் பகுதியில் மேக வெடிப்பு காரணமாக பெருவெள்ளம் ஏற்பட்டது. இதேபோன்று இமாச்சலப் பிரதேசத்தின் சில பகுதிகளில் ஏற்பட்ட மண்சரிவிலும் ஏராளமானோர் சிக்கியுள்ளனர். இரு இடங்களிலும் இதுவரை 22 பேர் உயிரிழந்தனர்.

மேலும், பலரைக் காணவில்லை என்று தகவல் வெளியாகியுள்ளது. உத்தரகாண்ட் உள்ளிட்ட வடமாநிலங்களுக்கு கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. வெள்ளத்தில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் தேசியப் பேரிடர் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

மணாலி-லே சாலை உட்பட பல்வேறு முக்கியச் சாலைகளில் மண்சரிவால் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது. காஷ்மீர் மற்றும் லடாக்கின் பல்வேறு சிறுநகரங்களில் இயல்பு வாழ்க்கை கனமழையால் பாதிக்கப்பட்டுள்ளது.

**எதிர்க்கட்சிகளை ஓரணியில் திரட்டும் மம்தா பெனர்ஜி..!**

# 2024 தேர்தலில் மோடியுடன் ‘கேலா ஹோபே’ நிகழும்!

**அரசியல் நிலவரம் குறித்து சோனியா - கெஜ்ரிவாலுடன் பேச்சு**



டில்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால், எதிர்க்கட்சித் தலைவர்கள் சோனியா காந்தி உள்ளிட்டோரை சந்தித்துப் பேசிய மம்தா பெனர்ஜி 2024ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் பிரதமர் மோடியுடன் ‘கேலா ஹோபே’ (khela hobe) நிகழும் எனத் தெரிவித்துள்ளார்.

‘கேலா ஹோபே’ என்பது வங்காளத்தில் ‘ஆட்டத்தில் ஒரு கை பார்ப்போம்’ என்று அர்த்தமாகும்.

டில்லியில் எதிர்க்கட்சிகளை மோடிக்கு எதிராக ஓரணியில் திரட்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ள மம்தா பெனர்ஜி செய்தியாளர்களிடம் பேசுகையில், லாலு பிரசாத் யாதவுடன் தொலைபேசியில் பேசியதாகத் தெரிவித்தார்.

2024ஆம் ஆண்டு தேர்தல் நிலைமை எப்படியிருக்கும் என்று ஆருடம் கூற தான் ஜோசியக்காரர் இல்லை என்று கூறிய மம்தா, அரசியல் கட்சிகளைப் பொறுத்துதான் மாற்றம் நிகழும் என்றார். தமது முடிவை மற்ற கட்சிகள் மீது திணிக்க முடியாது என்றும் அவர் தெளிவுபடுத்தினார்.

சோனியா காந்தி, கெஜ்ரிவால், லாலு பிரசாத் உள்ளிட்ட தலைவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்திவருவதாகவும் இதில் தன்னை முன்னிலைப்படுத்தவில்லை என்றும் மம்தா தெரிவித்தார்.

ஏற்கெனவே காங்கிரஸை சேர்ந்த மூத்த தலைவர்கள் கமல்நாத், ஆனந்த் சர்மா உள்ளிட்டோரை மம்தா செவ்வாய்க்கிழமை சந்தித்துப் பேசினார். இதுகுறித்து இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது மம்தா பெனர்ஜி மேலும் தெரிவித்துள்ளதாவது,

‘‘அனைத்து எதிர்க்கட்சிகளையும் ஒருங்கிணைக்கும் முயற்சியைத்தான் நான் மேற்கொண்டுள்ளேன். எதிர்க்கட்சிகளின் கூட்டணிக்கு தலைவராக வேண்டுமென்று விரும்பவில்லை. மேலும், அரசியலில் எது வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் நடக்கலாம். அந்தந்த சூழ்நிலைக்கு ஏற்பவே அனைத்து விடயங்களும் தீர்மானிக்கப்படுகின்றன.

எதிர்க்கட்சிகளின் கூட்டணிக்கு யார் தலைமை தாங்கினாலும் அதனை ஏற்கத் தயாராகவே உள்ளேன். அதில் எனக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை. இது தொடர்பாக அனைவரும் சேர்ந்து விவாதிக்கும்போது உரிய முடிவு எடுக்கப்படும். என்னைத்தான் தலைவராக்க வேண்டும் என்று நிர்ப்பந்திக்கப்போவதில்லை’’ - என்றார்.

மேற்கு வங்க முதலமைச்சராக மூன்றாவது முறையாக அண்மையில் மம்தா பானர்ஜி பதவியேற்றார். அதன்பிறகு அவர் மேற்கொண்டுள்ள முதல் டில்லி பயணம் இதுவாகும். மேற்கு வங்க சட்டப்பேரவைத் தேர்தலில் பாஜகவின் கடுமையான சவாலை எதிர்கொண்டு வெற்றிபெற்றுள்ள அவர், தேசிய அளவில் பா.ஜ.கவுக்கு எதிராக எதிர்க்கட்சிகளை ஒருங்கிணைக்கும் நோக்கில் தில்லிக்கு வந்துள்ளதால் அவரது இந்தப் பயணம் கூடுதல் முக்கியத்துவம் பெற்றுள்ளது.




உச்சத்தை தொடும் கொரோனா பாதிப்பு

# இராணுவ உதவியை நாடுகிறது அவுஸ்திரேலியா

ஓகஸ்ட் 28வரை ஊரடங்கு நீடிப்பு

அவுஸ்திரேலியாவில் கொரோனா பரவல் தொடர்ந்து அதிகரித்துவரும் நிலையில், நிலைமையை கட்டுக்குள் கொண்டுவர அங்கு இராணுவம் அழைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், உலகம் முழுவதும் கொரோனாவால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 19.67 கோடியை கடந்துள்ளதுடன், உயிரிழந்தோரின் எண்ணிக்கை 42.03 இலட்சத்தை தாண்டியுள்ளது.

சீனாவின் வூஹான் நகரில் கடந்த 2019ஆம் ஆண்டு இறுதிப்பகுதியில் கண்டறியப்பட்ட கொவிட் - 19 வைரஸ் உலகம் முழுவதுமுள்ள 222 நாடுகள் மற்றும் நகரங்களில் பரவி பெரும் மனிதப் பேரழிவை ஏற்படுத்தி வருகிறது.

கொரோனாவை கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசிகள் கண்டுபிடிக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு கொண்டுவரப்பட்டுள்ளபோதும் நாளுக்கு நாள் கொரோனாவால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை புதிய உச்சத்தை எட்டிச்செல்கிறது.

அந்தவகையில் உலகம் முழுவதும் கொரோனாவால் இதுவரை (பத்திரிகை அச்சுக்குச் செல்லும்வரை) 19,67,35,789 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 42,03,978 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, உலகம் முழுவதும் கொரோனாவால் பாதிக்கப்பட்டோரில் 17,81,36,483 பேர் இதுவரை குணமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும், கொரோனா



பாதிப்புக்குள்ளானோரில் 1,43,95,328 பேர் உலகம் முழுவதுமுள்ள பல்வேறு வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருவதுடன், அவர்களில் 86,761 பேரின் நிலை கவலைக்கிடமான நிலையிலுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


இந்நிலையில், அவுஸ்திரேலியாவில் மீண்டும் கொரோனா பாதிப்பு அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

கொரோனாவை கட்டுப்படுத்தும் வகையில் கடந்த ஒன்றரை மாதமாக அவுஸ்திரேலியாவில் ஊரடங்கு அமுலிலுள்ளது. இருப்பினும், சமீபகாலத்தில் இல்லாதளவுக்கு கொரோனாவால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை நேற்று அதிகரித்தது.

இந்நிலையில், நிலைமையை கட்டுக்குள் கொண்டுவர அங்கு இராணுவம் அழைக்கப்பட்டுள்ளது. டெல்ட்டா வகை கொரோனா பரவல் தொடர்ந்து அதிகரித்துவரும் சூழலில் பெருந்தொற்றை கட்டுப்படுத்த முடியாமல் அவுஸ்திரேலிய அரசு திணறி வருகிறது. இதன் காரணமாக, கடந்த பல ஆண்டுகளில் இல்லாதளவுக்கு தொடர்ந்து இரண்டாவது முறையாக பொருளாதாரம் மந்தநிலையில் தள்ளப்பட்டுள்ளது.

இதுகுறித்து நியூ சவுத் வேல்ஸ் பிரிமியர் கிளாடிஸ் பெரெஜிக்லியன் தெரிவிக்கையில், "ஓகஸ்ட் 28ஆம் திகதிவரை ஊரடங்கு நீடிக்கப்பட்டுள்ளது. கடந்த 24 மணி நேரத்தில், 239 பேருக்கு புதிதாக கொரோனா உறுதியானது. நிலைமை கட்டுக்குள் கொண்டுவருவதற்கு முன்பு இன்னும் மோசமாக மாறவுள்ளது.

தென்மேற்கு சிட்னியில் அமலிலுள்ள கடுமையான ஊரடங்கு நகரின் மேற்கு பகுதிகளுக்கும் அறிவிக்கப்பட்டது'' - எனத் தெரிவித்துள்ளார்.




# அலாஸ்காவில் 8.2 ரிச்டர் நிலநடுக்கம்; சுனாமி எச்சரிக்கை விடுப்பு

## பீதியில் மக்கள் வீதிகளில் தஞ்சம்

அமெரிக்காவின் அலாஸ்கா தீவு பகுதியில் 8.2 ரிச்டர் நிலநடுக்கம் ஏற்பட்டதையடுத்து அங்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே அங்கு ஏற்பட்ட நிலநடுக்கத்தில் வீடுகள் உள்ளிட்ட கட்டடங்கள் குலுங்கியுள்ளன. இதனால் பீதியடைந்த மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

அமெரிக்காவின் அலாஸ்கா மாகாணம் கடற்கரையோர பகுதியாகும். இங்கு பல்வேறு தீவுகள் உள்ளன.

அலாஸ்காவில் மிகப்பெரிய நகரான அன்கோரக்கிலிருந்து 500 மைல் தொலைவிலுள்ளது பெரிவில்லி. இந்த நகரிலிருந்து 56 மைல் தொலைவில் கடலுக்கடியில் சக்திவாய்ந்த பூகம்பம் ஏற்பட்டது. இது ரிச்டர் அளவில் 8.2 ஆக பதிவானது. இதனால், அப்பகுதியிலுள்ள கடற்கரை பகுதிகளில் அடுத்த சில மணிநேரங்களில் சுனாமி அலைகள் தாக்க வாய்ப்புள்ளதாக எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

நிலநடுக்கம் காரணமாக அங்குள்ள கட்டடங்கள் பயங்கரமாக குலுங்கின. இதனால் பீதியடைந்த மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில் தஞ்சமடைந்தனர். இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது. 8.2 ரிச்டர் நிலநடுக்கம் பதிவானதால் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது. அமெரிக்காவின் சுனாமி எச்சரிக்கை மையம் விடுத்த எச்சரிக்கையில், வடக்கு மரினா மற்றும் குவாம் தீவுகளுக்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. எனவே, மக்களை பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறும் கடற்கரைக்கு செல்ல வேண்டாம் என்றும் அறிவுறுத்தப்பட்டனர்.

அலாஸ்காவில் கடந்த ஒக்டோபர் மாதம் 7.5 என்ற அளவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தை தொடர்ந்து அங்கு சுனாமி தாக்கியது. ஆனால், பாதிப்பு ஏற்படவில்லை.

இதேபோன்று கடந்த 1964இல் 9.2 ரிச்டரில் ஏற்பட்ட நிலநடுக்கத்தையடுத்து அங்கு சுனாமியும் தாக்கியது. இதனால் அன்கோர்க் உள்ளிட்ட சில பகுதிகள் பேரழிவை சந்தித்தன. இதன்போது 250 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

# தடுப்பூசி ஏற்றிக்கொண்டால் 100 டொலர்கள் பரிசு!

நியூயோர்க்கில் தடுப்பூசி ஏற்றிக்கொள்பவர்களுக்கு 100 டொலர் பரிசு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் மீண்டும் டெல்ட்டா வைரஸ் பரவல் அதிகரித்துவரும் சூழலில் பொதுமக்கள் அனைவரும் மீண்டும் முகக்கவசம் அணியும்படி ஜனாதிபதி ஜோ பைடன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தடுப்பூசிகள் இயக்கத்தை வேகப்படுத்தவும் ஜோ பைடன் அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதன் ஒருபகுதியாக நியூயோர்க் நகரவாசிகளுக்குத் தடுப்பூசி ஏற்றிக்கொண்டால் 100 டொலர் பரிசு வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை 66 சதவீதம் பேர் இரண்டு தடுப்பூசிகளும் 71 சதவீதம் பேர் ஒரு தடுப்பூசியும் போட்டுக்கொண்டிருப்பதாக நியூயோர்க் நகர மேயர் டெ பிளாசியோ தெரிவித்துள்ளார்.

தற்போது விற்பனையில்...




விலை ரூ 30/-
தொடர்புகளுக்கு : 0777 983308 - விநியோகப்பிரிவு

# ஆப்கனில் ஆதிக்கத்தை விரிவுபடுத்த சீனாவின் உதவியை நாடும் தலிபான்கள்



ஆப்கானிஸ்தானில் தனது ஆதிக்கத்தை விரிவுபடுத்த சீனாவின் உதவியை தலிபான்கள் நாடியுள்ளனர்.

பீஜிங்கில் சீன வெளியுறவு அமைச்சர் வாங் யி-யை சந்தித்த தலிபான் முன்னணித் தலைவர் முல்லா பராதர் அகுந்த் தலைமையிலான 9 பேர் கொண்ட குழுவினர் இந்தக் கோரிக்கையை விடுத்தனர்.

ஆப்கானிஸ்தானிலிருந்து தனது படைகளை அடுத்த மாதம் 31ஆம் திகதிக்குள் முழுமையாக வாபஸ் பெறவுள்ளதாக அமெரிக்க அறிவித்துள்ள நிலையில், நாட்டின் பெரும்பான்மையான பகுதிகளை தலிபான்கள் தங்களது கட்டுப்பாட்டில் கொண்டுவந்துள்ளனர். அங்கு ஆப்கானிஸ்தான் அமீரகத்தை அமைக்க தலிபான்கள் திட்டமிட்டுள்ளனர்.

அப்படி அமைந்தால் அங்கு பயங்கரவாத குழுக்களான அல்-கொய்தா, லக்ஷர்-இ-தொய்பா போன்றவை நுழைந்து ஆப்கானிஸ்தானை தங்களது பயிற்சி முகாம்களாக மாற்றி, தீவிரவாத இஸ்லாமிய அடிப்படைவாதத்தை எதிர்க்கும் நாடுகளில் பயங்கரவாத செயல்களில் ஈடுபடும் என உலக நாடுகள் அஞ்சுகின்றன.

அதை சமாளிப்பதற்காக வேறு நாடுகளுக்கு எதிரான தீவிரவாத நடவடிக்கைகளுக்கு அங்கு இடம் கொடுக்கமாட்டோம் என சீனாவிடம் தலிபான்கள் உறுதியளித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

# சோமாலியாவில் தண்ணீர் தட்டுப்பாடு!

குறைந்தளவு நீரை பகிர்ந்து அருந்தும் ஒட்டகங்கள்



காலநிலை மாற்றத்தினால் சோமாலியாவில் குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இதனால் வளர்ப்பு உயிரினங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. தற்போது அந்நாட்டில் கால்நடை வளர்ப்பவர்கள் நிச்சயமற்ற எதிர்காலத்தை எதிர்கொண்டுள்ளனர்.

மழை எதுவும் பெய்யாததால் மனிதர்கள் மட்டுமின்றி வளர்ப்பு உயிரினங்களும் குடிக்க நீர் கிடைக்காமல் அவதிப்பட்டு வருகின்றன. இந்நிலையில், கிடைத்துள்ள குறைந்தளவிலான குடிநீரை அதிகம் நீர் அருந்தும் ஒட்டகங்கள் பகிர்ந்துகொள்ளும் வீடியோ வெளியாகியுள்ளது.



# டோக்கியோ சென்றும் ஒலிம்பிக்கில் பங்கேற்க முடியாத சோகம்

ஆண்களுக்கான 100 மற்றும் 200 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் பங்கேற்பதற்காக டோக்கியோ சென்றிருந்த சுவிட்சர்லாந்தின் குறுந்தூர ஓட்ட வீரரான அலெக்ஸ் வில்சன், டோக்கியோ ஒலிம்பிக்கில் பங்கேற்கும் தகுதியை இழந்துள்ளார்.

30 வயதான அலெக்ஸ் வில்சன் ஊக்கமருந்து பாவனை தொடர்பில் தற்காலிக தடைக்கு உள்ளாகியிருந்தார். கடந்த மார்ச் மாதம் ட்ரென்பொலோன் எனப்படும் தடை செய்யப்பட்ட ஊக்கமருந்து அவரது உடலில் கலந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து சுவிட்சர்லாந்தின் ஊக்கமருந்து தடுப்புப் பிரிவானது அவருக்கு தற்காலிக தடை விதித்திருந்தது.

எனினும், தனக்கு விதிக்கப்பட்ட தற்காலிக தடையை எதிர்த்து சுவிஸ் ஒலிம்பிக்ஸ் மற்றும் அந்நாட்டின் தேசிய ஒலிம்பிக் குழு ஆகியவற்றிடம் அவர் மேன்முறையீடு செய்திருந்தார். குறித்த இரு அமைப்புகளும் கடந்த ஜூலை மாதம் அவர் மீதான தற்காலிக தடையை நீக்கியிருந்தன. அதன்படி அவர் டோக்கியோ ஒலிம்பிக்கில் பங்கேற்க சென்றிருந்தார்.

இந்நிலையில், உலக மெய்வல்லுனர் சங்க செய்த மேன்முறையீட்டை பரிசீலித்த விளையாட்டுத்துறை நியாயாதிக்க சபையானது, அலெக்ஸ் வில்சன் மீதான தற்காலிக தடையை மீண்டும் அமுல்படுத்தியுள்ளது. இதன் காரணமாக அவரது ஒலிம்பிக் கனவு கலைந்துபோனது.

# கொரோனாவை வென்ற தங்கம்

*(ரமணி)*

ஆண்களுக்கான 200 மீற்றர் நீச்சல் போட்டியில் தங்கப் பதக்கம் பெற்ற பிரிட்டன் வீரரான டாம் டீன், நான்கு மாதங்களில் இரண்டு முறை கொரோனாவால் பாதிக்கப்பட்டவர். கொரோனாவால் நுரையீரலும், இதயமும் பாதிக்கப்பட்ட எனது கழுத்தில் ஒலிம்பிக் தங்கம் இருப்பதை என்னால் நம்ப முடியவில்லை என தெரிவித்தார்.

நான்கு மாதங்களில் இரண்டாவது முறையாக ஜனவரியில் கொரோனாவால் பாதிக்கப்பட்ட டாம் டீன், நீச்சல் சாத்தியமாகும் என்று உறுதியாக நம்பவில்லை. அவரது இருதய அமைப்பு பாதிக்கப்பட்டது. அவரது நுரையீரல் காயமடைந்தது. இருமலை நிறுத்த முடியவில்லை. அவர் தனது குடியிருப்பில் தனிமைப்படுத்தப்பட்டார். பயிற்சி இல்லாமல் துவண்டுபோனார்.

கடந்த ஏப்ரலில் கொரோனாவால் பாதிக்கப்பட்டபோது, ‘ஒலிம்பிக் தங்கம் ஒரு மில்லியன் மைல் தொலைவில் இருந்தது’ என அவர் கூறினார். 1908ஆம் ஆண்டு லண்டனில் நடந்த ஒலிம்பிக்கின் பின்னர் ஆண்கள் தனிநபர் நீச்சலில் இங்கிலாந்துக்கு தங்கம் கிடைத்துள்ளது.



விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

## TOKYO OLYMPIC 2020

| Rank | Team/NOC | 1 | 2 | 3 | Total |
|---|---|---|---|---|---|
| 1 | People's Republic of China | 15 | 7 | 9 | 31 |
| 2 | Japan | 15 | 4 | 6 | 25 |
| 3 | United States of America | 14 | 14 | 10 | 38 |
| 4 | ROC | 8 | 11 | 9 | 28 |
| 5 | Australia | 8 | 2 | 10 | 20 |
| 6 | Great Britain | 5 | 7 | 6 | 18 |
| 7 | Republic of Korea | 4 | 3 | 5 | 12 |
| 8 | France | 3 | 5 | 3 | 11 |
| 9 | Germany | 3 | 3 | 7 | 13 |
| 10 | Italy | 2 | 7 | 10 | 19 |

நேற்றிரவு 8 மணிவரைக்குமான பதக்கப் பட்டியல்

# ஒலிம்பிக்கில் இன்று களமிறங்கும் நிமாலி லியனாராச்சி



டோக்கியோ ஒலிம்பிக்கில் பங்கேற்க சென்றிருந்த 9 இலங்கை வீர, வீராங்கனைகளில் 6 பேர் ஏமாற்றத்தை சந்தித்த நிலையில், இன்றைய தினம் 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி நிமாலி லியனாராச்சி களமிறங்குகிறார்.

32ஆவது ஒலிம்பிக் போட்டிகளானது கடந்த 23ஆம் திகதிமுதல் ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடைபெற்றுவரும் நிலையில், மெய்வல்லுனர் போட்டிகள் இன்றைய தினம் ஆரம்பமாகின்றன. அந்த அடிப்படையில் இலங்கை பிரதிநிதித்துவப்படுத்தி 800 மீற்றர் முதல் சுற்று ஓட்டத்தில் நிமாலி லியனாராச்சி இன்றைய தினம் களமிறங்குகிறார்.

இவர் பங்குபற்றும் போட்டி இலங்கை நேரப்படி காலை 7.19 மணிக்கு நடைபெறுகிறது. எனவே, 6 வீரர்கள் ஏமாற்றத்தை சந்தித்துள்ள நிலையில் நிமாலி லியனாராச்சி இலங்கைக்கு பதக்கம் ஒன்றை பெற்றுக்கொடுப்பாரா என்பதை பொறுத்திருந்து பார்க்கலாம்.



# ஒற்றைக்காலில் நின்று தங்கம் வென்ற வீரர்

*(ரமணி)*

டோக்கியோ ஒலிம்பிக்கில் தனது நிறையை விட மூன்று மடங்கு பாரத்தை தூக்கி தங்கம் வென்று அனைவரையும் ஆச்சரியப்பட வைத்துள்ளார் சீன வீரர் ஃபேபின் லீ.

ஆண்களுக்கான 61 கிலோ எடைக்குட்பட்ட பளுதூக்கும் போட்டியில் சீன வீரர் ஃபேபின் லீக்கும், இந்தோனேஷிய வீரர் எகோ யூலிக்கும் இடையே பலத்த போட்டி நிலவியது. அப்போது யாரும் எதிர்பாராத வகையில் தன்னுடைய உடல் எடையை விட மூன்று மடங்கு எடையை (166கிலோ) தூக்கிய ஃபேபின், ஒற்றைக் காலில் நின்றபடி ரசிகர்களை அதிர்ச்சியடைய வைத்தார். இறுதியில் மொத்தம் 313 கிலோ எடை தூக்கி தங்கப் பதக்கத்தை தனதாக்கினார் ஃபேபின். பளுதூக்கும் போட்டியில் சீனா வாங்கும் இரண்டாவது தங்கம் இதுவாகும். இந்தோனேஷிய வீரர் 302 கிலோ எடையை தூக்கி இரண்டாவது இடத்தைப் பிடித்தார்.

இதை ‘ஃப்ளமிங்கோ மூவ்’ என ரசிகர்கள் குறிப்பிடுகிறார்கள். ஃப்ளமிங்கோ (செங்கால் நாரை) பறவை இப்படித்தான் ஒற்றைக் காலில் நின்று இரை தேடுமாம். இதுபோன்று செய்ய வேண்டாம் என ஃபேபின் எச்சரித்துள்ளார்.

2017 ஆசிய சம்பியன்ஷிப் போட்டியிலும் ஒற்றைக்காலில் நின்றபடி எடை தூக்கி ஆச்சரியப்படுத்தினார். 61 கி.கி எடை வகுப்பில் அறிமுகமானபோது இரண்டு ஒலிம்பிக் சாதனைகளை முறியடித்தார்.

# இரண்டாவது T20யில் இலங்கைக்கு த்ரில் வெற்றி

இந்திய அணிக்கு எதிரான இரண்டாவது இருபதுக்கு 20 போட்டியில் இலங்கை அணி 2 பந்துகள் மீதமிருக்க, 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் த்ரில் வெற்றிபெற்றது.

ஷிகர் தவான் தலைமையிலான சுற்றுலா இந்திய அணிக்கும், தசுன் சானக்க



தலைமையிலான இலங்கை அணிக்கும் இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடரின் இரண்டாவது போட்டி நேற்று முன்தினம் கொழும்பு ஆர். பிரேமதாஸ மைதானத்தில் நடைபெற்றது.

முதல் போட்டியில் இந்திய அணி வெற்றிபெற்ற நிலையில் இரண்டாவது போட்டியில் இலங்கை அணி எப்படியாவது வெற்றிபெற வேண்டும் என்ற முனைப்பில் களமிறங்கியது. போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பை தெரிவுசெய்தது. அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 132 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் ஷிகர் தவான் அதிகபட்சமாக 40 ஓட்டங்களை பெற்றார்.

133 என்ற இலகுவான வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய இலங்கை அணி இறுதிநேரத்தில் தடுமாற்றத்தை சந்தித்தது. எனினும், தனஞ்ஜய டி சில்வாவின் நிதான துடுப்பாட்டம், சமிக்க கருணாரத்னவின் அதிரடியில் 2 பந்துகள் மீதமிருக்க 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் இலங்கை அணி த்ரில் வெற்றிபெற்று தொடரை சமநிலைப்படுத்தியது.

போட்டியின் ஆட்டநாயகனாக துடுப்பாட்டத்தில் இலங்கை அணிக்கு 40 ஓட்டங்களை குவித்த தனஞ்ஜய டி சில்வா தெரிவானார்.

Sri Lanka Cricket
தேசிய கிரிக்கெட் அணியின் உத்தியோகப்பூர்வ அனுசரணையாளர்
Dialog




# நீச்சலில் புது வரலாறு படைத்த இங்கிலாந்து ஆடவர் அணி

நீச்சல் போட்டியில் ஆடவருக்கான 4x200 மீற்றர் ஃப்ரீஸ்டைல் ரிலேவில் இங்கிலாந்து தங்கம் வென்றது. கடந்த 100 ஆண்டுகளுக்கும் மேலான காலகட்டத்தில் ஒலிம்பிக் நீச்சலில் இங்கிலாந்து தங்கம் வென்றது இதுவே முதல் முறையாகும்.

டாம் டீன், டன்கன் ஸ்காட், ஜேம்ஸ் கை, மெத்தியூ ரிச்சர்ட்ஸ் ஆகியோர் கூட்டணி 6 நிமிடம், 58.58 விநாடிகளில் பந்தைய தூரத்தை எட்டி தங்கப் பதக்கம் வென்றது. ரஷ்யா 7 நிமிடம், 1.81 விநாடிகளில் இலக்கை எட்டி வெள்ளிப் பதக்கமும், அவுஸ்திரேலியா 7 நிமிடம் 1.84 விநாடிகளில் இலக்கை எட்டி வெண்கலப் பதக்கத்தையும் வென்றன.

வழமையாக இந்தப் பிரிவில் பதக்கம் வெல்லும் அமெரிக்கா நான்காமிடத்தை பிடித்ததால் எந்தவொரு பதக்கமும் கிடைக்கவில்லை. இதற்கு முன் 1912 ஸ்டாக்ஹோம் ஒலிம்பிக்கில் மகளிருக்கான 4x200 மீற்றர் ஃப்ரீஸ்டைல் ரிலேவில் இங்கிலாந்து மகளிர் அணி தங்கம் வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# கொரோனா உறுதியானதால் வெளியேற்றப்பட்ட அமெரிக்க வீரர்

கோலூன்றிப் பாய்தலில் இரண்டு முறை உலக சம்பியன் பட்டம் வென்ற அமெரிக்க வீரர் சாம் கென்ட்ரிக்ஸ், கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானதன் காரணமாக டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளிலிருந்து வெளியேற்றப்பட்டார். இதனை அமெரிக்காவின் ஒலிம்பிக் மற்றும் பராலிம்பிக் பேரவை உறுதிப்படுத்தியது.

இது குறித்து அமெரிக்க ஒலிம்பிக் பேரவை குறிப்பிட்டுள்ளதாவது, ‘சாம் கென்ட்ரிக்ஸுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதியானது குறித்து நாங்கள் வருத்தப்படுகிறோம். டோக்கியோ 2020 ஒலிம்பிக் போட்டிகளில் போட்டியிட மாட்டார். 2016 ரியோ ஒலிம்பிக்கில் வெண்கலப் பதக்கம் வென்ற கென்ட்ரிக்ஸ் இப்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்’ என குறிப்பிடப்பட்டுள்ளது.

2017 மற்றும் 2019 உலக சம்பியன்ஷிப் போட்டிகளில் சாம் கென்ட்ரிக்ஸ் தங்கப் பதக்கங்களை வென்றதுடன், டோக்கியோ ஒலிம்பிக்கில் முக்கிய போட்டியாளர்களில் ஒருவராக இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7